
# புதிய பயணம்

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்



மீரா பதிப்பக வெளியீடு – 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயணம்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

மீரா பதிப்பகம்
(90 ஆவது வெளியீடு)
கொழும்பு – 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : புதிய பயணம்

வகை : சிறுகதை

ஆசிரியர் : புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

பதிப்புரிமை : மீரா பதிப்பகத்தினருக்கு

முதற்பதிப்பு : 23-05-1996

இரண்டாம் பதிப்பு : 27-03-2011

பதிப்பு : மீரா பதிப்பகம்
(90 ஆவது வெளியீடு)
**291/6 - 5/3 A,** எட்வேர்ட் அவெனியூ,
கொழும்பு - 06.
தொ.பே. : 2582539/ 0775342128

அச்சிட்டோர் : தரஞ்ஜி பிரிண்ட்ஸ்,
நாவின்ன, மஹரகம.

விலை : **ரூபா** 200/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அமரர்கள்

ஐயா,

வேலுப்பிள்ளை ஆறுமுகம்

(Retired Superintendent of Audit)

அம்மா,

ஆறுமுகம் பாறுபதிப்பிள்ளை

மாமா,

Dr. சங்கரப்பிள்ளை கந்தப்பிள்ளை

மாமி,

கந்தப்பிள்ளை சிவக்கொழுந்து

ஆகியோருக்கு

இந்நூல் அன்புடன்

சமர்ப்பணம்!

**புலோலியூர்**

**ஆ. இரத்தினவேலோன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

முன்னுரை ........................................ V

பயணத்தின் முன் ஒரு நிமிடம் ........................ viii

தானம் - மல்லிகை ........................................ 1

பாரதி - மல்லிகை ........................................ 9

புதிய பயணம் - மல்லிகை.............................. 22

தப்புக் கணக்கு - வீரகேசரி............................. 31

தேன் சிந்துமோ வானம்?- வீரகேசரி .............. 37

ஒரு விடியலுக்கு முன் - வீரகேசரி .................. 46

மகிழம்பூக்கள் - வீரகேசரி................................ 54

மீறல்கள் - மல்லிகை........................................ 62

எழுச்சி - மல்லிகை ........................................ 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஆழ்ந்த மனக்கிளர்ச்சியுடையவர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் ஏதோ ஒரு கலை ரூபத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் என்பதற்கியைய இங்கே சிறுகதை ரூபத்தில் அவை வெளியாகி இருக்கின்றன.

ஒரு சமகால சமூக உணர்வுடன் அவை வெளியாகி இருக்கின்றன என்பதே இவற்றின் சிறப்பு.

இரத்தினவேலோனின் கதைமாந்தர்கள் அனைவருமே மத்தியதர வர்க்கம் சார்ந்தவர்கள். அலுவலகங்களில் வேலை பார்க்கும் ஆண்கள் - பெண்கள், இந்தச் சமூகத்தின் அம்சமாகத் திகழும் தன்னையொத்தவர்கள், தன்னுடன் பழகியவர்கள், சக உத்தியோகத்தவர்கள், அவர்களுடனான தனது அனுபவங்கள், முரண்பாடுகள், ஏற்படுத்திக்கொண்ட உறவுகள் ஆகியவையே இங்கே சிறுகதைகளாக உருவம் எடுத்துள்ளன.

எழுச்சி, தப்புக்கணக்கு, மீறல்கள், பாரதி, மகிழம்பூக்கள் போன்ற கதைகளில் ஆண் பெண் சம்பந்தப்பட்ட உறவுநிலைகள் வெவ்வேறு உணர்வுகளுடன் காட்டப்படுகின்றன.

குடும்பம் என்னும் பாரம்பரிய சமூகக் கட்டுக்கோப்பு குலைந்து போகாமல் இருக்க... சிதறிப்போகாமல் இருக்க சில கட்டுப்பாடுகள் வேலிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வாழ்வின் ஜீவனே குலைந்து போகும்போது... வாழ்வே சிதறிப் போகும் நிலை ஏற்படும்போது இந்தக் காவல் கட்டுப்பாடுகள் மீறப்படலாம் என்பதை 'மீறல்கள்' தத்ரூபமாகக் காட்டுகிறது.

மனிதர்களுக்கிடையிலான அப்பா - பிள்ளை என்னும் பாரம்பரிய உறவு முறைகள் கூட சாதி வெறியால் உடைந்து போகும் அவலத்தை ஜீவனுடன் காட்டுகிறது 'எழுச்சி'.

பொருளியல் வளர்ச்சி சார்ந்த இன்றைய பட்டணத்துச் சமூக அமைப்பில் ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகுவது, உடனமர்ந்து உத்தியோகம் பார்ப்பது போன்றவை தவிர்க்க முடியாத அம்சங்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் நிகழும் சிறு சிறு சம்பவங்கள், சம்பாஷணைகள், மகிழ்ச்சிகள், விட்டுக்கொடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்கள் ஆகியவைகளைக்கொண்டு காதல்தானோ என்று மயங்கிவிடும் நிலைகளை தப்புக்கணக்கு தத்ரூபமாகக் காட்டுகிறது.

இப்படியே ஒவ்வொரு கதைகளைப் பற்றியும் கூறிக்கொண்டே போகலாம்.

கதை மாந்தர்களின் அகஉணர்வுகளும் தாபங்களும் அழகான மொழி நடையின் மூலம் ஆசிரியர் மேற்கொண்டுள்ள முடிவு நோக்கி நகர்த்தப்படும் விதம் அருமையாக அமைந்துள்ளது.

ஓவியத்துக்கு வண்ணங்கள் போல் இலக்கியத்துக்கு மொழிதான் பிரதானம். படைப்பின் வெற்றியில் மொழி நடைக்கு ஒரு பெரும் பங்கிருக்கிறது. அதிலும் சிறப்பாகச் சிறுகதைக்கு ஒரு தனியான மொழிநடை அவசியமாகிறது. சிறுகதை ஒரு நுட்பமான வடிவம் என்பதால் இறுக்கமே அதில் பிரதானம்.

இரத்தினவேலோனின் சிறுகதைகளில் இந்த மொழிநடை சிறப்பாகக் கையாளப்பட்டிருக்கிறது.

ஆசிரியர் பேசும் போதும், பாத்திரங்கள் பேசும் போதும், ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தின் - பகைப்புலத்தின் - பாத்திரங்கள் பேசும்போதும் கையாளப்படும் மொழியின் லாவகம் அந்தப் பாத்திரத்துக்கும் படைப்புக்கும் ஒரு சிறப்பைக் கொடுக்கின்றது.

புற்றளை, புலோலியூர் இரத்தினவேலோனின் பிறந்த மண். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகிழக்குப் பிரதேசமான வடமராட்சியின் பேச்சுத்தமிழ் இந்நூலின் தலைப்புக் கதையான 'புதிய பயணத்தில்' கையாளப்பட்டுள்ள விதம் மகிழ்ச்சியைத் தருகிறது.

''அக்கா எனக்கு முதலிலை ஒல்லுப்போலை தேத்தண்ணி போட்டுத் தா...''

''தம்பி வெள்ளனச் சொல்ல அயத்துப் போனன்.... மொண்டசொறி முன்னை மாதிரி நெசவுசாலைக் கட்டிடத்திலை இல்லை...''

''என்னடா மோனை, ஆள் வலுவாக் கொட்டுப்பட்டுப் போனாய்...''

கொஞ்சம் போல் என்பதை மலையகத்தில் நாங்கள் எள்ளத்தனை என்றும் இத்தினியூண்டு (இத்தினையளவு) என்றும் வழங்குவதுண்டு. அதேபோல் நேரத்தோடு என்பதை வெள்ளெனவே என்று கூறுவதுண்டு. இங்கேயும் 'ஒல்லுப் போலை', 'வெள்ளன' என்னும் பதங்கள் பேச்சுத்தமிழாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைகளை ஒன்றாக, ஒட்டுமொத்தமாக வாசிக்கும் போது இரத்தினவேலோனின் மொழியின் சிறப்பு உணரக்கூடியதாக இருக்கிறது. இது இரத்தினவேலோனின் மொழி நடை என்று கூறுமளவிற்கு அழகாக மொழியினைப் பயன்படுத்தியுள்ளார் இவர். இவருடைய கதைகள் பற்றி கூற வந்த ஒரு சிலர் இரத்தினவேலோனின் கதை என்றால் இப்படித்தான் இருக்கும் என்பதற்கான பண்பு அவருடைய படைப்புக்களில் இருப்பதாகக் கூறியுள்ளனர். இந்தத் தொகுதியில் உள்ள கதைகளை ஒன்று சேர வாசிக்கும் எவருக்கும் தெரியும் இரத்தினவேலோனின் கதைகள் ஒரே மாதிரியானவை அல்ல என்று. தானம், தேன் சிந்துமோ வானம், பாரதி போன்றவைகள் வித்தியாசம் வித்தியாசமான கதைகள். ஆனால் இவருடைய கதை இப்படித்தான் இருக்கும் என்று வாசிப்பவரை எண்ண வைப்பது அவரது மொழிநடை. எஸ்.பொ.வின் மொழி நடைபோல்.

வடமராட்சியின் சிறப்புக் கூறுகளில் ஒன்றான இலக்கிய வளம் இரத்தினவேலோனாலும் செழுமையுறுவது போலவே ஈழத்துச் சிறுகதையுலகும் இச்சிறு கதை நூலால் வளம் பெறும் என்பது நிச்சயம்.

**- தெளிவத்தை ஜோசப்**

**வத்தளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தின் முன்..... ஒரு நிமிடம்!

எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பு இது. எனது கல்லூரி நாட்களின் இறுதிக் காலகட்டத்தில் இருந்து மணமுடித்த நாட்கள் வரையிலான பத்தாண்டு காலப்பகுதியில் நானெழுதிய கதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது கதைகள் இதில் உள்ளடங்கியுள்ளன. இவற்றுள் 5 கதைகள் மல்லிகையிலும் 4 கதைகள் வீரகேசரியிலும் பிரசுரமானவை.

தொகுதியில் இடம்பெறும் முதல் ஆறு கதைகளும் ஏறத்தாழ மேற் குறிப்பிட்ட பத்தாண்டு காலப்பகுதியினை நினைவு கொள்ளத்தக்க வகையிலேயே இங்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது குறிப்பிடற்பாலது. தனிப்பட்ட எனது வாழ்வியலினூடாக சமுதாயத்தில் நிகழ்ந்த மாறுதல்களை பதிவு செய்யும் எனது முயற்சியின் முதலாவது அத்தியாயமாகவும் இதனைக் கொள்ளலாம். இறுதி மூன்று கதைகளும் புற அனுபவச் சித்தரிப்புகளாகும்.

'மீரா பதிப்பகத்தின் முதலாவது நூல்' எனப் பதிவு செய்யப்பட்டு வரும் 'புதிய பயணம்' தேவை கருதி இப்போது மறுபிரசுரம் காண்கின்றது.

இந்நூல் வெளியீட்டிற்கு அன்றும், இன்றும் துணை நின்ற என் துணைவியார் சாந்தகுமாரி, மகள் மீரா, மகன் துவாரகனுக்கும் என்றும் என் வெளியீட்டு முயற்சிகளுக்கு பேராதரவு தந்து நிற்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் எனது அன்பு என்றும் உண்டு.

**- புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

**மீரா அகம்,**

**புற்றளை, புலோலி.**

**மின்னஞ்சல் :** arvelone@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானம்

''எல்லாம் அமைதியாய் இரு. பந்தியைக் குழப்பாமல் எல்லாம் அமைதியாய் இரு'' - ஆர்ப்பரிக்கின்ற ஆலய மணிகளிற்கு மேலாக அருணா சலத்தாரின் குரல் ஆவேசமாக ஒலித்தது.

''மூடல் இல்லாதவைக்குத்தான் இலை'' - தேக்கமிலை தேகம் நிறைந்திருக்க ஒரு கையால் இலைகளைப் பிய்த்தவாறே வரிசையில் அமர்ந் திருப்பவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார் அவர்.

''பொடியள் புறம்பான பந்தியிலை இருங்கோ. ஆரும் அங்கை யிங்கை கள்ளப்பந்தி மாறினது கண்டனோ கம்பாலைதான் விழும். சொல் லிப் போட்டன்''- அடிக்குரலில் அவர் கூறுகிறார்.

அப்போதுதான் கோவிலடிக்கு வந்த செல்லன் மூடலைக் கமக்கட் டிற்குள் வைத்துக்கொண்டே தனது மூன்று பிள்ளைகளுடனே அவசர அவசர மாக ஆலய முன்றிலுக்கு ஓடிவந்தான்.

''செல்லன்... உங்கடை பந்தி தேக்கமரத்துக்குக் கீழையெல்லே? பந்தியைக் குழப்பாமல் அங்கை போயிரு!''

''அங்கைதானாக்கும் போறன்... ஒரு இலை தரவாக்கும்!''

''மூடல் இல்லாதவைக்குத்தான் இலை. ம்... விலகு. நிண்டு மெனக் கெடுத்தாதை.''

அந்த ஆலயத்தில் எவரது அன்னதானம் நடந்தாலும், முன்னின்று உழைக்கும் அருணாசலத்தார், இன்று தனது மைத்துனர் முருகேசரின் தானம் ஆகையால் சற்று உற்சாகமாகவே இயங்குகிறார்.

கேட்டது கிடைக்காது போகவே, அரையிலிருந்த சால்வைத் துண் டால் மூடலைத் துடைத்துத் தட்டிக் கொட்டியவாறே, தேக்க மரத்தடிக்குச் செல்கிறான் செல்லன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மா மணல் ஒண்டுமில்லை. கையிலையும் ஒரு சதத்துக் காசு மில்லை. இண்டைக்கு இரவைக்குப் பொடியளுக்கு என்னத்தைத் தேடுறது?' என்று துறையால் திரும்பும்போது ஆழ்ந்த சிந்தனையில் வந்தவனுக்கு, கந்த முருகேசனார் சிலையடியில் வரும்போது, 'இண்டைக்கு பிள்ளையார் கோயி லிலை முருகேசற்றை தானமாம்' என்று யாரோ கதைத்துக்கொண்டது தேனா கக் காதுகளில் பாய்கிறது. மூன்று பிள்ளைகளைப் பெற்றுக்கொடுத்து விட்டு மாரடைப்பால் அவனது மனைவி மூன்று வருஷங்கட்கு முன்பு மாண்டதன் பிறகு மாடாயுழைப்பதுடன் நித்தமும் மாலையில் தீன் தேடுவதும் அவனது தலையில் வீழ்ந்துவிட்டது. பத்து வயதும் நிரம்பாத மூத்த அவனது மகள், அடுத்தடுத்த வருடங்களில் பிறந்த இரண்டு மகன்கள்... அவர்களால்தான் என்ன செய்ய முடியும்?

காலையில் உண்ட பழஞ்சோறு போக, ஆனைப் பசியுடன் அவ னைக் காத்திருந்த பிள்ளைகள், அவன் வருவதைக் கண்டதும் காணாதது மாக... ''ஐயா, கோயில்லை பூசையாம். வா போவம்'' என்று சொன்னபோதே அவர்களது அகோரப் பசியை அவனால் உணர முடிந்தது. வெளுத்து வந்த உடுப்புக்களைத் திண்ணையில் போட்டவன், மூடலை எடுத்துக்கொண்டே பெருமூச்சுடன்...,

''பிள்ளையாரே'' - பூசை முடிந்து ஆலய வாசலில் அடியவர்கள் கைதட் டும் ஒலி பஞ்சடைந்த செல்லனின் காதுகட்கும் பசுமையாகவே கேட்கிறது.

வெற்றிலைத் தாம்பாளத்துடன் குருக்கள் வெளியேறிய போது குறிப்புணர்ந்து, தீர்த்த மடத்தில் 'காட்ஸ்' விளையாடிக் கொண்டிருந்த இளை ஞர்களும், வடக்கு வீதியில் கிளித்தட்டாடிய பிள்ளைகளும் ஆட்டங்களை இடைநிறுத்திவிட்டே ஆலயத்தை நோக்கி ஓடி வருகின்றனர்.

காதுகளிரண்டினையும் செவ்வரத்தம் பூ அலங்கரிக்க, மார்பில் சந்த னம் பரிணமிக்க கோயிலுக்கு வெளியே வந்த முருகேசர், ஆலய முன்றிலில் பந்திகளாகப் பரந்திருக்கும் சனங்களை ஒரு கணம் பார்த்துவிட்டு, வரிசையில் நின்ற ஐந்தாறு இளைஞர்களை அழைக்கிறார். ''தம்பியவை சோத்துப்பெட்டி பிடிக்க ஆள் தேவை. ஒல்லுப்போலை வாருங்கோடி.''

சேட்டுடன் நின்ற இளைஞர்களில் சிலர் சேட்டைக் கழற்றி நண்பர்க ளிடம் கொடுத்துவிட்டு, சாரத்தை மடித்துக் கட்டியவாறே கோயிலுக்குள் நுழை கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து நின்று கூத்தடிக்கும் சிறுவர்களைக் கம்பு கொண்டு கட்டுப் படுத்திக்கொண்டு நின்ற அருணாசலத்தாரை அழைத்த முருகேசர், ஆலய முன்றிலில் பரந்திருக்கும் சனங்களைக் காட்டி காதில் எதையோ கூறுகிறார். அதைக் கேட்டு அருணாசலத்தாரும் தலை ஆட்டிவிட்டு மீண்டும் தனது கட மையில் ஈடுபடுகிறார்.

பந்திக்குள் புகுந்து வந்த அருணாசலத்தார் சோற்றுப் பெட்டிகளு டன் மூன்று இளைஞர்கள் வெளிவருவதைக் கண்டதும் ஆலய வாசலிற்கு ஓடுகிறார். ''தம்பியவை! சனம் எக்கச்சக்கமாக வந்திருக்கு! சோத்தை அளந்து போடவேணும்!'' என்று கூறியவாறே சோற்றுப் பெட்டிக்குள் தன்கையை வைத்து அளவு காட்டுகிறார்.

''மண்டலாய், நீ வடக்கை போ. சண்முகம், நீ பொடியனின்ரை பக் கம் போ. எட தம்பி வேலோன், நீ இங்காலை தேர்முட்டியடிக்குப் போ.'' - சோற்றுப் பெட்டிகளுடன் வந்த இளைஞர்களைப் பிரித்துவிடுகிறார் அவர். யாவற்றையும் மேற்பார்வை செய்து கொண்டு முருகேசர் உண்டியல் பெட் டிக்கருகில் கை கட்டியவாறே நிற்கிறார். அடிக்கொருதரம் அவரது கண்கள் தெற்கு வீதியில் 'எதையோ' எதிர்பார்க்கின்றன.

சகலதையும் கவனித்தவாறே... தேக்க மரத்திற்குக் கீழே இருந்த செல்லனின் மகள்... ''ஐயா, எங்கடை பந்திக்கு இன்னும் ஏன் ஒருதரையும் விடேலை?'' என்று ஏக்கத்துடன் கேட்டாள்.

''கடைசியாகத் தான் மோனை விடுவினம்.''

அப்போ... பெரிய கைப்பெட்டி நிறையச் சோறு, காய் கொண்டு வெள்ளை வேட்டியுடன் ஒருவர் கோயிலை விட்டு வெளியேறுகிறார்.

''அவையளுக்கு அவ்வளவு சோறோ ஐயா?''

''ஓம் மோனை. அது படையல் சோறு. பரம்பரை பரம்பரையாக அவையளுக்குத் தான் முதல் சோறு குடுக்கிறது.''

''அவை உவ்வளவு சோத்தையும் வைச்சிருந்து நாளை, நாளைண்டைக் கும் தின்னுவினம் என்னையா?'' - ஊரில் எங்காவது சடங்குகள் நடந்தால் வரும் குடிமைச் சோற்றை வைத்து 'தண்ணீர் ஊற்றி' நாலைந்து நாட்களுக்குத் தாம் வயி றாறுவதை மனதிருத்தி செல்லனின் இளையது வினவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பேக்கதை பறையிறாய். அவை வளவுக்கை நெல்லு மூட்டை மூட்டையாக் கிடக்கு. உதுகள் ஏன் அவைக்கு?'' - செல்லனின் 'நடுவில்' இது.

''அப்ப என்ன செய்வினம்?''

''ஆடு, மாட்டுக்கு வைப்பினம்.''

''உவ்வளவு சோத்தையுமோ?''

''சோறு.... சோறு...!'' - வடக்குப் பந்திக்கு சோறு கொடுத்துக்கொண்டிருந்த மண்டலாயர் சோறு அடிப்பெட்டிக்குள் போகவே அடிக்குரலெடுத்தார். அருணாசலத்தார் பெட்டி நிறைய சோறு கொண்டு வந்து மண்டலாய் வைத்திருந்த பெட்டியை நிரப்புகிறார். ''தம்பி மண்டலாய், நீ கூடப் போடுறாய்... அளந்து போடு. சோறு மட்டுமட்டு.''

''சரியண்ணை சமாளிக்கிறன்.''

சற்றுத் தூரம் சென்று வந்த அருணாசலத்தார் திரும்பவும் மண்டலாயின் அருகில் வந்து மெல்லிய குரலில் கூறுகிறார். ''தம்பி... பக்கத்திலை என்ரை மருமோள் பொடிச்சியிருக்கிறாள். பாத்து என்ரை பங்கையும் அந்த மூடலுக்கை போட்டுவிடு.''

''ஓமண்ணை. போட்டுவிடுறன்.''

''அரோகரா, அரோகரா.'' - கோபுரத்தில் பட்டு குரல்கள் எதிரொலித்தன. இளைஞர் பந்திப் பக்கமாகச் சென்ற சண்முகம் வெற்றுப் பெட்டியை இரு கைகளாலும் தன் தலைக்கு மேல் உயர்த்தியவாறே கோவிலுக்குள் நுழைகிறார்.

இளைஞர் பந்தி சிதறுகிறது.

''சனியனுகள், பந்தியளைக் குழப்புதுகள். இஞ்சை எங்கடை பந்திக்கு...'' - செல்லனின் அருகில் நின்ற கதிரன் இது.

''அதுகளுக்கென்ன? வீட்டிலை வேளாவேளைக்குச் சோறு கிடைக்கும். போதாக் குறைக்கு பூசைச் சோத்தையும் திண்டிட்டு நிண்டு குதியன் குத்துதுகள்.'' - செல்லன் அலுத்துக் கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அங்கையென்ன குழப்பம்?'' வடக்குப் பந்தியைச் சிதறவிடாது அருணாசலத்தார் மண்டலாயின் பக்கத்தில் நிற்கிறார்.

''அண்ணை இந்த மூடலுக்கை மூண்டுபேருக்கு.''

''ஆரடா மூண்டு பேர்? ஆக்களைக் காட்டு.''

''எனக்கும், இவனுக்கும், தம்பிக்கும்...''

''எங்கையடா மற்றவன்?''

''வீட்டை நிக்கிறான்.''

''வீட்டையோ? ஏன் கொப்பு, கோத்தைக்குமா சேத்துத் தாறம். கொண்டுபோவன்...'' ஏதோ பகிடி விட்ட நினைப்பில் அருணாசலத்தார் நிமிருகிறார். சற்று நேரத்தில் மண்டலாயர் சோற்றுப் பெட்டியைத் தன் தலைக்கு மேல் உயர்த்துகிறார்.

''அரோகரா, அரோகரா.'' - வடக்குப் பந்தியும் சிதறுகிறது.

''மண்டலாய், பெட்டியை உள்ளை கொண்டு போ.'' - தேக்க மரத்தடியில் மட்டும் இன்னும் தேங்கி நிற்கும் சனக்கூட்டம் பக்கமாக மண்டலாயின் பார்வை திரும்பியபோது அருணாசலத்தாரின் குரல் ஒலிக்கவே, அவர் பெட்டிப் பாம்பாகி கோவிலுக்குள் நடையைக் கட்டுகிறார்.

தேர் முட்டியடிப் பந்திப் பக்கம் சென்ற வேலோன் நிமிர்ந்த போது அருணாசலத்தார் அருகிலேயே வந்து விட்டார்.

''அரோகரா, பிள்ளையாருக்கு அரோகரா.''

''பொறண்ணை. மரத்தடிப் பந்திக்கு இன்னும் சோறு வைக்கேல்லை.''

''வேலோன், பெட்டியை இஞ்சை கொண்டா.'' - அருணாசலத்தார் அவசரங் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தேக்க மரத்தடியிலையும் ஒரு பந்தியெல்லே அண்ணே இருக்கு?''

''சோறு மட்டுமட்டடா தம்பி. பிறகென்ன... மச்சான் வெறுங்கை யோடையே வீட்டை போறது?''

''அப்ப... அதுகள் சோறு வாங்காமலே போறது?''

''அதுகள்... அதுகள் எண்டு எளிய சாதியளுக்காக நீ ஏன் மோனை வக்காலத்து வாங்கிறாய்?''

''அத்தான், உங்கை என்ன சச்சரவு...? பெட்டியை உள்ளை கொண்டு போங்கோ. தம்பிமார் உங்களைத் தான் உள்ளை போங்கோடியவை.'' - தெற்கு வீதியில் 'எதையோ' எதிர்பார்த்துக் கொண்டு நின்ற முருகேசர் விடய மறிந்து தேர்முட்டியடிக்கு ஓடி வந்து விட்டார்.

''அண்ணை, மரத்தடிப் பந்திக்கு இன்னும் சோறு வைக்கேல்லை.''

''தம்பி... சோறு மட்டுமட்டடி. அதுதான்... அதுகளை விட்டுட்டு பெட்டியைக் கொண்டு உள்ளை வா மோனை.''

''அண்ணை, தானமெண்டால் தானமாயிருக்க வேணும். எல்லாருக் கும் குடுத்திட்டு அதுகளுக்கு.''

''தம்பி, நிலவரமறியாமல் பறையிறாய். சோறு மட்டு மட்டு. பந் திக்கு சோறு வைச்ச பொடியளுக்கும், இனிக் காத்தாலை தொடக்கம் பூசைக் காய்களரிஞ்சு பாடுபட்டவைக்கும் புறிக்கவேயடா சோறு மட்டுமட்டு.''

''தானம் எண்டால் அதுதான். பாடுபட்டவைக்கு சோறு போட வேணுமெண்டால், நீங்களெல்லாரும் வீட்டை கூடியிருந்து ஒரு பெரிய விருந்து வைச்சிருக்கலாமே.''

''அத்தான், அவன்ரை விசர் நியாயங்களை விட்டிட்டு பெட்டியை வேண்டிக் கொண்டு நீங்கள் உள்ளே வாங்கோ.''

''இதுகளைப் போல ஒரு வேளை சோத்துக்காக அவலப்படுகிற சனங்களுக்கு ஒரு நேரமாவது வயிறாறச் சோறு போடுறதுக்குத்தான் அன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதானங் குடுக்கிறது, அண்டை அயலார் எல்லாம் கூடி வந்து அவிச்சுப் போட்டு புறிச்சு வீட்டை கொண்டு போறதுக்கில்லை பூசை குடுக்கிறது. வீட்டிலை நெல்லுமூட்டை நிரம்பியிருக்கிறவைக்குப் பெட்டி பெட்டியாச் சோறு அனுப்புறியளே... அதிலை என்ன புண்ணியம் கண்டியள்?''

''அத்தான், பெட்டியை வாங்கிக்கொண்டு நீங்கள் உள்ளை வாங்கோ. அவன்ரை வியாக்கியானங்களைக் கேட்டுக் கொண்டு நிக்க எங்களுக்கு நேரமில்லை. அலுவல்கள் கனக்கக் கிடக்கு.'' - குட்டிபோட்ட நாயானார் முருகேசர்.

''அன்னதானம் குடுக்கினமாம் கண்டறியாத அன்னதானம்...'' - பெட்டியை விட்டாலும் வேலோன் பேச்சை விடுவதாக இல்லை.

தெற்கு வீதியால் வந்த முருகேசரின் கார் மடப்பள்ளி வாசலில் வந்து நின்றது. இப்போதுதான் முருகேசர் உசாரானார். கார் 'டிக்கி' திறக்கப்பட்டது.

''ஐயா, பசிக்குது... சோறு'' - பொறுமையின் எல்லையைத் தாண்டிச் செல்லனின் இளையது அழ ஆரம்பித்து விட்டது.

தேக்க மரத்தின் கீழ் இருந்த ஐம்பது, அறுபது சனங்களும்... சிதற ஆரம்பித்தனர். மூடலைத் தட்டிக் கொட்டியவாறே மடைப்பள்ளிப் பக்கம் செல்கிறான் கதிரன்.

''கதிரன் நில். எங்கை போறாய்? உனக்கு வெட்கமாயில்லையே? நடந்ததைப் பாத்த பிறகும் பிச்சை கேட்கப் போறியே? உன்னைப் போலக் குனியிறவங்களும் இருக்கிறதாலை தான் அவங்களும் குட்டிக் கொண்டிருக்கிறாங்கள். என்ன பெரிய பட்டினி? இவ்வளவு நாளும் இருக்காததே? உதை விட ஈரத்துணியா ஒண்டை எடுத்து வயித்தை இறுக்கிக் கட்டிப் போட்டுக் கிடந்திடலாம்.'' - எழுந்து நின்று செல்லன் கூறுகிறான்.

''ஐயா சோறு...''

கார் 'டிக்கியும்', 'கரியரும்' சோற்றுப் பெட்டிகளால் நிரம்பின. கார் புறப்பட்டு விட்டது. இப்போது முருகேசர் வெளியேறுகிறார். பின்னே தலையில் பெட்டிகளுடன் அருணாசலத்தார் வெளிப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ நப்பாசையில் மரத்தடியில் இன்னும் சிலர் சிதறிய படியே... நிற்கிறார்கள். ஆனால், கதிரன் அப்போதே சென்றுவிட்டான்.

பொழுதும்... மைமலாகி விட்டது.

வெளியே வந்த முருகேசர் வாசலில் நின்றவாறே மூன்றுதரம் தோப் புக்கரணம் போடுகிறார்.

''பிள்ளையாரே.'' - கைகளைத் தட்டி விட்டு நடையைக் கட்டு கிறார் அவர்.

தேக்க மரத்தடியில்... சனங்கள் மெல்ல, மெல்லக் கலைய ஆரம்பிக் கின்றனர்.

நடந்து கொண்டிருக்கும் முருகேசரைச் செல்லன் வெறித்துப் பார்த் தவாறே நிற்கிறான். வர... வர... முருகேசரின் உருவம் செல்லனின் கண்களில் குறுகிக் கொண்டே செல்கிறது!

**- மல்லிகை : 1981**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி

தொழிற்சாலை அலுவலர்களின் வேலை நேர முடிவினை உணர்த்தும் சங்கொலி கேட்டுக்கொண்டிருந்தபோதே, பாதிப் பேருக்கு மேல் வாசல் 'கேற்'றையுந் தாண்டி பஸ் தரிப்பிடத்தினை நோக்கி சாலை வழியே சென்று கொண்டிருந்தனர். இந்த வேகம் காலையில் வேலைக்கு வரும்போதே இவர்களுக்கு இருந்திருந்தால், அமெரிக்காவையோ, ஜப்பானையோ இன்னமும் நாம் உதாரணம் காட்டிக் கொண்டிருக்கும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்காது என்று நினைத்தவனாக, வாசலில் இருக்கும் காவலாளர் காரியாலயத்தில் தனது இலாகாச் சாவியை ஒப்படைத்து விட்டு, இவன் வீதிக்கு வருகிறான்.

கிழக்கு மேற்காக நீண்டு செல்லும் சாலையின் இரு பக்கமாகவும் தொழிலாளர் விரைந்து கொண்டிருந்தனர். வழமையாக மேற்குத் திசை நோக்கும் இவன், மாறாக இன்று கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். ஐந்து மணிக்கெல்லாம் சங்கொலியுடன் போட்டியிட்டு ஒரு பாட்டம் இறைக்கும் அந்தி மழை இன்று விடுமுறை பெற்றுக்கொண்டது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. ஆட்டோக்கள், கார்கள், பஸ்கள், லாறிகள் என இரைச்சல் சத்தத்தினால் தம்மை இனங்காட்டி வந்த வாகனங்கள் இவனை முந்தியும் நோக்கியும் சென்று கொண்டிருந்தன.

இரவிற்கு அறைக்குச் சென்று, அன்றாட அலுவல்களை எல்லாம் முடிந்த பின்பாக சுந்தர ராமசாமியையோ, வண்ண நிலவனையோ புரட்டுவதுபோக, இன்றைய முக்கிய வேலையாகச் செய்ய வேண்டியதாக, பல நாட்களாகவே திட்டமிட்டிருந்த பாரதி வீட்டு விஜயத்தினையே இப்போ இவன் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறான். இவன் தங்கும் அறையிலிருந்து பாரதி வீடு கணிசளவு தூரத்தே இருப்பதனால், சனி, ஞாயிறுகளில் அதனை வைத்துக்கொள்வதில் மேலதிகமாக ஐந்தோ, பத்தோ பஸ்ஸிற்கு விரையமாகுவதைத் தவிர்த்துக்கொள்வதற்காகவே, தொழிற்சாலையிலிருந்து நடைதூரம் இருக்கும் இந்த விஜயத்தினை இன்று நிறைவேற்றுவதாகத் தீர்மானித்திருந்தான்.

பாரதி இப்போ வீட்டில் என்ன செய்து கொண்டிருப்பாள்? காரியாலயத்திலிருந்து திரும்பிவந்த கையோடு மாறனுக்கும் தேநீரைக் கொடுத்துவிட்டுத் தானும் தேநீர் அருந்தியவாறு இன்றைய நிகழ்வுகள் பற்றிக் கதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கொண்டிருக்கலாம். அல்லது ஒரு பக்கமாக 'ரேப் ரெக்கோட்டரில்' ஏதாவது ஒரு இசைக்கச்சேரி போய்க்கொண்டிருக்க, மறுபக்கமாக அண்மை யில் வெளியான ஒரு சிறுகதைத் தொகுப்பிலோ, நாவலிலோ மூழ்கிப்போய் இருக்கலாம். எந்த அலுவல்களையும் திட்டமிட்டுச் செய்வதும், தினமும் கொஞ்ச நேரமாவது வாசிப்பில் ஈடுபட்டு உண்மையான தேடலினை மேற் கொள்வதும் பாரதியின் பழக்கங்களில் போற்றத்தக்கது. அதுவே இவனுக்கும் அவள்பால் ஒரு ஈடுபாட்டினை ஏற்படுத்தியது!

★ ★ ★

அது ஒரு தை மாதத்துத் திங்கட்கிழமை. தொழிற்சாலையின் கணக் குப் பகுதியில் கணக்காளராக நியமனம் பெற்று பாரதி வந்த முதல் நாள் அது. தொழிலாளரது சம்பளத் திட்டம், தொழிலாளர் திறன் சம்பந்தமாக சில தரவு களைப் பெறுவதற்காக தொழிற்சாலையின் தலைமை மேற்பார்வையாளன் என்ற முறையில் பாரதி இவனை அழைத்திருந்தாள். பரஸ்பர அறிமுகங்களின் பின் விடயங்களைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த போது ஒவ்வொன்றையும் அவள் அணுகிய விதம் இவனை மிகவும் கவர்ந்திருந்தது. ஒரு அதிகாரி போலன்றி, விடயதானங்களை விரிவாக அறிந்துகொள்ளும் ஆர் வத்துடன், தக்க மரியாதையையும் இவனுக்குத் தந்து, அவள் தரவுகளைச் சேக ரித்துக்கொண்ட முறை, ஆரம்பத்திலேயே இவனுக்குப் பாரதி மீது ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது.

வேலை விடயங்களுக்காக மட்டுமன்றி தனிப்பட்ட நட்பு ரீதியிலும் சந்திப்புகள் தொடர்ந்தன. சில சமயங்களில் 'இன்ரர்கொம்' வழியாகவும் உரையாடல்கள் நிகழ்ந்தன. இருவருக்கு ஏதோ ஒரு விடயத்தில் அதிகளவில் ரசனை ஒத்துவரும்போது அவர்களில் ஒரு அன்னியோன்னியம் உருவாகுவது தவிர்க்க முடியாததுதான். அந்த வகையில் இவர்கள் இருவருக்கும் இலக்கி யம் ஒரு சாதனமாக அமைந்திருந்தது. சதா நாட்டு நிகழ்வுகளையும், அரசியல் பிரச்சினைகளையும் அலசும் தொழிலாளர், இவனையும், பாரதியையும் அசா தாரணமானவர்களாகக் கணித்துக்கொள்ளுமளவிற்கு இலக்கியமே பேச்சாக இருவரும் ஓய்வு நேரங்களைக் கழித்தனர்.

பிரபஞ்சன், சுந்தர ராமசாமி, மௌனி, அம்பை என நிறையவே படித்திருந்தாள் பாரதி, தவிரவும் டானியல், ஜீவா, நந்தி, இளங்கீரன், சி.வி., எஸ்.பொ., செ.கணேசலிங்கன், தெளிவத்தை ஜோசப், தெணியான், செங்கை ஆழியான், முத்துலிங்கம் என்று எல்லாமே அவளுக்கு அத்துப்படி. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது இலக்கிய ரசனை இவனையும் விட விரிவடைந்திருந்தது. ஒரு தர மான விமர்சகராக நின்று பாரதி இவனது படைப்புக்களையும் ஆராய்ச்சி செய் தாள். அபிப்பிராயங்கள் சொன்னாள்.

மார்கழி மாதத்து ஒரு ஞாயிறு விடுமுறை நாளின் மாலைப் பொழுது. இவன் தனது அறையிலிருந்தபோது அண்மைக்கால நூல்கள் சில வற்றினைப் பெற்றுக்கொள்வதற்காக இவனது 'அட்றஸ்' தேடியே பாரதி வந்து சேர்ந்திருந்தாள்.

பாரதியின் எதிர்பாராத வரவினால், உண்மையில் குழம்பிப்போய் விட்டது, இவனது 'றூம் மேற்' ரஞ்சித் தான். வந்தவளை அமரவைத்து சிறிது நேரம் உரையாடிவிட்டு, சண்முகன், சட்டநாதன், புலோலியூர் சதாசிவம், சாந்தன், மண்டூர் அசோகா, தாமரைச்செல்வி, கோகிலா மகேந்திரன் என இவன் வைத்திருந்த எல்லாவற்றையுமே கொடுத்து, அழைத்துச்சென்று பஸ் ஏற்றிவிட்டு வந்த போது, இவனைப் பார்த்து ரஞ்சித் சொன்னான். ''மச்சான், உன்ரை ஊர் 'அட்றஸ்' ஒருக்கா எனக்குத் தேவை.''

''எதுக்கு?'' 'சேட்டை' கழற்றி சுவரில் கொழுவியவாறே, இவன் கேட்டான்.

''இல்லை உன்ரை வீட்டுக்காரருக்கு ஒரு கடிதம் போடவேண்டி யிருக்கு... அதுதான்.''

''விடமாட்டியளே... ஒரு பெண் பிரசுகளோடை கதைக்கப், பழக விடமாட்டியளே.''

''தாராளமாகக் கதைக்கலாம், பழகலாம் மச்சான். எதுக்கும் 'லிமிற்' எண்டு ஒண்டு இருக்குத்தானே? இப்பிடி வீடு தேடி வந்து வழியிற அளவுக்கு நீ வைச்சிருக்கக்கூடாது.''

''அவ இப்ப வந்தது எதுக்கு எண்டு உனக்குத் தெரியுந் தானே? அது வுமல்லாமல் அவ என்னையும் விட மூண்டோ, நாலு வயதுக்கு மூத்தவ.''

''தங்களை 'மெயின்ரெயின்' பண்ணிக்கொள்ளுறதுக்காக சில பெட் டையள் வயது குறைஞ்ச பொடியங்களிலை தான் 'இன்ரறஸ்ராக' இருப்பாள வையாம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உனக்கு அக்கா, தங்கைச்சி இல்லை எண்டது எனக்குத் தெரியும். அதை அடிக்கடி ஏன் எனக்கு உணர்த்திக்காட்டுறாய்?''

இந்த ரகமாக இருவரது கதைகளும் உச்சத்திற்குப் போய், காது என்று ஒன்றிருந்தால், அகராதி கூடக் கிடந்து முழிக்கும் 'மொழி'களின் துணையுடன், இறுதியில் அன்றைய பட்டிமன்றம் வெற்றி, தோல்வியின்றி நிறைவு பெற்றது.

அநேகமாக இப்போ இவன் பாதி வழி கடந்திருப்பான்.

சந்திக்கு வந்துவிட்டதற்குச் சான்றாக ஒரு மூலையில் பொதுசன மல சலகூடம் கிடந்து நாறியது.

வேகமாக அவ்விடத்தைக் கடந்து, முன்னே வழியை இடைமறித்தி ருந்த படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தான்.

★ ★ ★

அடுத்த ஆண்டு ஆனி மாதத்தில் ஒரு வியாழன் மத்தியானப் பொழுது. சாப்பாட்டுக்குப் பின்னதாக இவன் தொழிற்சாலை சாப்பாட்ட றைக் கதிரையில் மூட்டைப் பூச்சிகளுக்கு இரத்ததானம் செய்து கொண்டி ருந்தபோது, அவசர அவசரமாக வந்த பாரதி, இவனருகே அமர்ந்து ஏதோ சொல்லத் தயங்கிக் கொண்டிருந்தாள்.

''இது என்னுடைய பேசனல் மற்றர்'' என்று ஆரம்பித்து இறுதியில் ''இதுக்கு உங்களின்ரை அபிப்பிராயம் என்ன?'' எனக் கேட்டாள்.

''எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேணும் பாரதி'' எனக் கூறிய இவன், தனது இலாகா சென்று ஆற, அமர இருந்து யோசித்துப் பார்த்தான்.

பாரதியோ 'குவாலிபைட்' எக்கவுண்டன். ஆனால், அவளைக் காதலிக்கிற, கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிற மாறனோ ஒரு சாதா ரண 'ஸ்ரோர்' கீப்பர். இந்த ஏற்றத்தாழ்வு கல்யாணமான புதிதில், ஆரம்ப காலங்களில் ஒரு பொருட்டாகத் தெரியாவிட்டாலும், காலப்போக்கில் உளக் குமுறல்களை ஏற்படுத்தாதா? இப்படியான ஒரு வேறுபட்ட அமைப் பில் கூட வெற்றிகரமாக வாழும் பலரது பெயர்கள் பட்டியலாக இவன் முன் நீண்டு வந்தது. அந்த ரீதியில் இங்கும் ஒரு நல்ல வாழ்வினை அமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொள்ள பாரதியின் ஆளுமையால் முடியும் என்ற நம்பிக்கையே முடிவில் இவனுள் மேலிட்டது.

மேலும் இதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாது, வழிந்து கொண்டிருந்த் தேநீர் குவளையினை 'பியூன்' கொண்டு வந்து வைத்துவிட்டுப்போன கொஞ்ச நேரத்தில் 'இன்ரர்கொம்' ரிசீவரை இவன் எடுத்தான்.

''ஹலோ.''

''யேஸ் பாரதி ஹியர். என்ன முடிவுக்கு வந்திருக்கிறீங்க வேலோன்?''

''நீங்களே முடிவாச் சொன்ன பிறகு இதிலை நான் சொல்ல என்ன இருக்குப் பாரதி? 'பட் வண் திங்' வசதியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுறதுக்கு எவ்வளவோ 'சாண்ஸ்' இருந்தும் நீங்கள் இப்படியான ஒரு விஷப் பரீட்சையிலை இறங்கிக் கொள்ளுறதுதான் எனக்கு வியப்பாக இருக்கு.''

''அதைப் பற்றிய அபிப்பிராயத்தைத்தான் நான் உங்களைக் கேட்டிருந்தன். எனக்குத் தேவையானதெல்லாம் சுதந்திரமான வாழ்வு. என்னுடைய இலட்சியங்களிலையோ, இலக்குகளிலையோ தலையிடாத ஒரு கணவன். எத்தனையோ பேர் கல்யாணத்துக்கு முன்னாலை பெண் சுதந்திரம், சம உரிமை, பெண் விடுதலை எண்டெல்லாம் வாய்கிழியப் பேசிப்போட்டு, கழுத்திலை தாலியேறினவுடனை பெண்ணுக்கென்ற ஒரு அளவிலை ஒரு வட்டத்துக்குள்ளையே வாழ்ந்து கொண்டிருக்கினம். அதைத் தான் நான் வெறுக்கிறன். என்னுடைய ரசனையிலை, கொள்கையிலை எந்த விதத்திலையும் தலையிடாது, பாரதியைப் பாரதியாகவே வாழ வைக்கிற ஒரு கணவனைத்தான் நான் விரும்புகிறன். அந்த வகையிலே மாறன் என்னோடை கடைசி வரை 'கோப்பறேற்' பண்ணுவார் எண்டே நான் நினைக்கிறன்.''

''அதாவது, மகாகவி பாரதியாரின்ரை கனவை நனவாக்கப் போறீங்க பாரதி.''

''ஒவ்கோஸ். மற்றது இன்னொரு விசயம். ஆண்டாண்டு காலமா பெண்கள்தான் விட்டுக்கொடுத்து வாழ வேணுமெண்டு நியதியில்லை. அப்படி வாழ ஆண்களும் பழகிக்கொள்ள வேணும். ஒவ்வொரு குடும்பத்திலையுமே இது ஒரு நடைமுறையாக மாறவேணும். இதுதான் என்னுடைய பொலிசி.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாரதிப் பெண் போல் பலரும் பாரினில் புகழ் கொண்டாலும், 'றியலி' பாரதிப் பெண்ணுக்கு ஒரு வரவிலக்கணமாக வாழ்ந்து காட் டப்போறது நீங்கள்தான் பாரதி. 'அட்வான்ஸ்' ஆகவே எனது வாழ்த்துக்கள்'' என்றவாறே 'லயினை'க் கட் பண்ணிவிட்டான் இவன்.

அன்றிரவு அறைக்குச் சென்றதும் ரஞ்சித்திடம் இது பற்றி இவனா கவே கதை எடுத்தான். சகலதையும் சுவரில் தொங்கிய சுகாசினியின் படத் தைப் பார்த்தவாறே கேட்டுக்கொண்டிருந்து விட்டு முடிவில் ரஞ்சித் எம்.ஆர். ராதாவின் குரலில் சொன்னான். ''பஸ் மிஸ்ஸிங்.''

''மச்சான், 'அட்வான்ஸ் லெவல்' பாஸ் பண்ணிப்போட்டு 'வாசிற்றி' கிடைக்கும் எண்ட நம்பிக்கையிலை நான் ஊரிலை நிண்டபோது, கொஞ்ச நாள் கராட்டி பழகிறதுக்கு பருத்தித்துறை மெத்தைக் கடையடி குட்டி மாஸ்ர ரிட்டைப் போட்டு வந்தனான்... தெரியுமோ?'' என்று இவன் கேட்டுத் திரும் பியபோது, ரஞ்சித்தின் கட்டிலில் மூன்று நான்கு நுளம்புகள் மட்டும் பறந்து கொண்டிருந்தன. அதேசமயம் 'பாத்ரூமிற்குள்' இருந்து ஏதோ 'கடாமுடாச்' சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

இப்போதும் ஏதோ ஆரவாரச் சத்தம் கேட்டு இவன் நினைவு திரும் புகிறது. அருகே உள்ள விளையாட்டு மைதானத்தில் சிறுவர் சிலர் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தார்கள். துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஒரு நோஞ்சான் பையன் 'சிக்சர்' 'வோர்' என விளாசி மைதானத்தையே ஒரு கலக் குக் கலக்கிக் கொண்டிருந்தான்.

★ ★ ★

அன்று ஒரு விடுமுறை நாள். பாரதி - மாறன் திருமணம், திருமணப் பதிவு காரியாலயத்தில் மிக எளிதாக நடைபெற்றது. தொழிற்சாலையிலிருந்து இவன் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தான். வேறும் ஒரு சில வெளியிடத்து நண்பர்களும் வந்திருந்தார்கள்.

திருமணம் முடிந்த கொஞ்ச நாட்களில் பாரதி தொழிற்சாலையை விட்டு விலகி வேறொரு நிறுவனத்தில் சேர்ந்துகொண்டாள். தம்பதிகளாக ஒரே இடத்தில் தொழில்புரிவதைத் தவிர்த்துக் கொள்ளவே இந்த நடவடிக்கையாம். தொழிற்சாலையை விட்டுச் சென்றாலும், ஆரம்ப நாட்களில் தொலைபேசி மூலமாக இவனுடன் தொடர்புகொள்ள பாரதி தவறுவதில்லை. கதைகள் பற் றிய விமர்சனங்களுடன் ஒரு சில கடிதங்களும் வந்ததாக இவனுக்கு ஞாபகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களின் பின் மாறனுக்கும் வேறெங்கோ தொழில் வாய்ப்புக் கிடைக்கவே, அவனும் தொழிற்சாலையிலிருந்து விலகிக்கொண்டான்.

அன்று ஒரு முப்பதாம் திகதி. தொழிற்சாலையில் தனது இறுதி நாள் என்று இவனையும், கூடப் பணிபுரிந்த தனது நண்பர்களான இஸ்மைல், லயனல், லியனகே மூவரையும் அழைத்துத் தனது வீட்டில் ஒரு விருந்து வைத்தான் மாறன். உபசாரங்களில் மூழ்கிப் போயிருந்த பாரதியுடன் அன்று இவனால் அவ்வளவுக்குக் கதைக்க முடியாது போய்விட்டது.

கடந்த சில நாட்களாக தனது காரியாலய தொலைபேசி 'அவுட் ஒவ் ஓடர்' ஆக இருப்பதாகச் சொல்லி, இதனால் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியவில்லை எனப் பாரதி இவனுக்கு ஒரு கடிதம் போட்டிருந்தாள். அந்தக் கடிதம் கூட வந்து மூன்றோ நான்கு மாதங்களுக்கு மேல் இருக்கும்.

அண்மைக் காலங்களாகத் தொடராகப் பத்திரிகையில் வெளிவந்து பெரிதும் 'பரபரப்பை' ஏற்படுத்திய இவனது குறுநாவல் பற்றிய எந்தவித அபிப்பிராயமும் பாரதியிடமிருந்து இன்றுவரை வராதது பெரும் ஏமாற்றத்தை இவனுக்கு ஏற்படுத்தி விடவே, எப்படியாவது அவளை நேரில் சந்திக்கவேண்டும் என்ற அவா இவனுள் ஏற்பட்டது. அதன் பிரகாரமே இன்று பாரதி வீட்டுக்குச் செல்வதாக இவன் தீர்மானித்திருந்தான்.

பாரதியின் வீட்டுக்குப் போவதான தனது முடிவை இன்று காலை இவன் ரஞ்சித்திற்கு சொன்னபோது பதிலுக்கு அவன் சொன்னது, இப்போ இவனுள் ஒலித்துக் கொண்டது. ''பாரதியின்ரை 'ரெலிபோன்' மட்டுமல்ல, ஆளே இப்ப 'அவுட் ஒவ் ஓடர்' எண்டு தான் நான் நினைக்கிறன். இதுக்குள்ளே நீ அங்கை இப்ப போய்வர வேணுமெண்டு அங்கலாய்க்கிறது எனக்கெண்டால் அவ்வளவு நல்லதாகப் படேலை. கடவுளேயெண்டு உன்ரை முகரையிலை லட்சணமா, உருப்படியா இருக்கிறது மூக்கு ஒண்டு மட்டும்தான் வேலோன், வீணா அதையும் அங்கை போய் உடைச்சுக் கொண்டு வராதை. நீ ஒரு எழுத்தாளன். உனக்கெல்லாம் 'அட்வைஸ்' பண்ண வேண்டிய அவசியம் எனக்கில்லை. ஏதோ நீ இனி யோசிச்சுச் செய்.''

மைதானத்தைக் கடந்து குச்சொழுங்கைக்கு வந்தவனை முகப்பில் ஒரு பெட்டிக்கடை வரவேற்குமாப் போல் அமைந்திருந்தது. அதனையும் கடந்து வீட்டு இலக்கங்களை எண்ணியவாறே முன்னேறிக் கொண்டிருந்தான். முன்னர் ஒரு தடவை வந்திருந்ததாலும், வீட்டு இலக்கம் ஞாபகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததாலும், இடத்தைக் கண்டுபிடிப்பதில் சிரமமேதும் இருக்கவில்லை. வீதியால் இறங்கி, வீட்டுக் கதவோரம் சென்று ஓரிரு தடவைகள் தட்டினான்.

''செண்பகமே... செண்பகமே'' என தனக்கும் தமிழில் பாடத் தெரியும் என்பதைப் பாரதி வீட்டு வானொலியில் ஆஷா நிரூபித்துக்கொண்டிருந்தாள். இந்தப் பரிசோதனை முயற்சிகளால் பாழாய்ப் போவது என்னவோ தமிழ்த் திரையுலகம்தான் என இவன் நினைத்தவாறே, மீண்டும் கதவைத் தட்டினான்.

பாடல் சத்தம் தேய, இப்போ யன்னலருகே 'யேஸ்' என்ற குரலோடு ஒரு பருவக்குமரி பளிச்சிட்டாள். தான் தட்டிய கதவு சரிதானா என இவன் மீண்டும் ஒரு தடவை பார்த்தான். தலைகீழாகத்தான் என்றாலும் இலக்கம் சரியாகத்தான் இருந்தது. 'ஐ வோன் ரு சீ மிஸிஸ் மாறன்' என்றான், குழம்பிப் போயிருந்த தன் தலைமயிரை கையால் கோதி விட்டவாறே.

அந்தப் பெண் கதவைத் திறந்து இவனை 'ஹோலிற்குள்' வரவழைத்து, 'ரேக் யுவர் சீற் ஹியர், சீ வில் கம்' என்று சொல்லியவாறே, 'பாரதி, ஏ விசிற்றர் வோர் யூ' எனச் சற்று உரக்கக் கூறிவிட்டு, முன்னறைக்குள் மறைந்து கொண்டாள்.

இந்தச் சிட்டு 'எயர் லங்கா' அல்லது வேறெங்காவது ஒரு நல்ல 'வேமில்' வரவேற்பாளராக வேலை செய்பவளாக இருக்கலாம் என்று எண்ணியவாறே, ஒரு வசதிக்காக முன்னறையை நோக்கியவாறே மூலையில் தவமியற்றிய ஒரு கதிரையில் இவன் அமர்ந்து கொண்டான்.

வானொலியில் பாடல் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. ''செண்பகமே... செண்பகமே''. இவனது காற்சட்டைப் பொக்கெட்டிற்குள் இருந்த சீப்பு ஒரு தடவை வந்து தலையில் அமர்ந்துவிட்டு மீண்டும் மறைந்து கொண்டது.

''எட வேலோனே? 'விசிற்றர்' எண்டதும் இவரோடை 'பிறண்ட்ஸ்' ஆரோ ஆக்குமெண்டு நான் நினைச்சன். என்ன கனகாலத்துக்குப் பிறகு இந்தப் பக்கம்?'' என்ற குரல் கேட்டு இவன் நிமிர்ந்தான்.

பாரதி முன்னால் நின்றாள். இவனால் அவளை மட்டுப்படுத்தவே முடியவில்லை. இந்தக் குறுகிய காலத்துள் என்னவாக மாறிவிட்டாள்? சற்றுத் தடித்து, முகமெல்லாம் பூரித்து கொஞ்சம் நிறம் மாறி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன நான் கேக்கிறன், நீங்கள் பேசாமல் இருக்கிறியள்'' என்ற வாறே எதிரில் இருந்த கதிரையில் வந்து அமர்ந்தாள் பாரதி.

''இல்லைத் தெரியாதே... நாட்டு நிலவரங்கள் அதுகள், இது களாலை 'விசிற்றிங்' எண்டு நான் இப்ப அவ்வளவா ஒரு இடமும் வெளிக்கி டுகிறதில்லை. அது சரி எங்கை மாறன் அண்ணாவைக் காணேலை?''

''அவரென்னும் வரேலை. இன்னும் கொஞ்ச நேரத்திலை வந்திடு வார். முந்தி, ஒண்டாத்தான் வாறனாங்கள். இப்ப எனக்கு 'ஒவ்வீசிலை' வேய் கிள் புரவைட் பண்ணுறதாலை நான் கொஞ்சம் நேரத்தோடை வந்திடுவன்.''

பாடல்கள் முடிந்து வானொலியில் செய்தி அறிக்கை ஆரம்பமாகிக் கொண்டிருந்தது.

''உங்கடை 'ஒவிஸ்' ரெலிபோன் இன்னமும் 'அவுட் ஒவ் ஓடர்' தானோ?''

''ம்! என்னுடைய 'டிறெக்ட் லைன்' இன்னும் 'அவுட் ஒவ் ஓடராகத்' தான் இருக்கு.''

''இல்லை, என்ரை குறுநாவல் ஒன்று தொடரா வந்திருந்தது. அதைப் பற்றிய விமர்சனம் ஒண்டும் நீங்கள் எனக்குச் சொல்லேல்லை. அதுதான் கேட் டனான்.''

இவன் சொல்லியும் பாரதி எதுவுதே பேசாதிருந்ததால், தான் சொன் னது அவளுக்குக் கேட்கவில்லையோ என்று நினைத்தவனாக, மறுபடியும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருந்தான்.

''இப்ப கொஞ்ச நாளா இவர் 'ஐலண்ட் பேப்பர்' தான் எடுத் துக்கொண்டு வாறார். அதனாலை தமிழ்ப் பத்திரிகைகள் எதுவுமே எனக்கு வாசிக்கக் கிடைக்கிறதில்லை. சீ, நான் 'மிஸ்' பண்ணிட்டனே? எப்பிடி நல் லாச் செய்திருந்தியளோ?'' தலைகுனிந்து இருந்தவாறே பாரதி கேட்டாள்.

''கதை தன்னுடைய மனதைத் தொட்டதாக தெணியான் விமர்சனம் எழுதியிருந்தார். கவனிப்பைப் பெறவேண்டிய எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர் எண்ட மாதிரி தெளிவத்தை ஜோசப் சொல்லியிருந்தார்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முன்னோடி எழுத்தாளர்கள் குறிப்பிட்டுச் சொல்லுற அளவுக்குக் கதை இருந்திருக்கு எண்டால் அப்ப அது ஒரு வெற்றிப் படைப்பாகத்தான் இருந்திருக்கும். 'கட்டிங்ஸ்' இருந்தால் தாருங்கோவன். நானும் ஒருக்கால் வாசிச்சுப் பாப்பம்.''

''றூமிலை இருக்கு. வேணுமெண்டால், கொண்டுவந்து தாறன்.''

''முந்தின மாதிரி இல்லை. உண்மையிலை இப்ப... இப்ப நான் வாசிக்கிறதே வலு குறைவு. 'வேக்காலை' வந்து, பிறகு வீட்டு வேலைகள் எண்டு எங்கை நேரம் கிடைக்குது? 'வீக் எண்ட்ஸ்' வந்தால் 'விசிற்றிங்' அது, இது எண்டு இவர் எங்கையாவது இழுத்துக்கொண்டு போயிடுவார். தனிய வெளிக்கிட்டுப் பத்திரிகைகள், புத்தகங்கள் எண்டு ஒண்டுமே வாங்க முடியிறதில்லை. அவ்வளவு பிஸி. இன் வைக்ற்... பழைய பாரதியாக இப்ப நான் இல்லை.''

''கனத்தைப் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். மீண்டும் ஒரு தடவை அறியத் தருகிறேன்!'' என வானொலியில் மரண அறிவித்தல் போய்க் கொண்டிருந்தது.

கடைசியில் தான் சொன்னது இவனுக்குக் கேட்டிருக்குமோ என்னவோ என்ற ஒரு சந்தேகத்தில் பாரதி மறுபடியும் சொன்னாள் ''இன் வைக்ற் பழைய பாரதியாக இப்ப நான் இல்லை. ஒரே பிஸி.''

அப்போ கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே பாரதி தான் மெல்ல எழுந்து சென்று கதவைத் திறந்து விட்டாள். மாறன் வந்து நின்றான். ''இங்கை பாருங்களேன் ஆர் எண்டு.'' இவனைக் காட்டியவாறே பாரதி கணவனைப் பார்த்தாள்.

மாறன் இவனை நோக்கினான். பின் 'ஹலோ மிஸ்டர் வேலோன். ஹௌவ் ஆர் யு' என்றவாறே சிரித்தான். சிரிப்பில் ஒரு வரட்சி தெரிந்தது.

இவனும் பதிலுக்கு 'எப்படி' என்று கேட்டுக்கொண்டே வகுப்பில் வாத்தியார் நுழையும்போது மாணவர் எழுந்து பின் அமரும் பாணியில் ஒரு முறை செய்து கொண்டான். எதிரே மாறனும், அவனருகில் பாரதியுமாக அமர்ந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இங்கை, வர்ற 'சண்டே' ஒருக்கா இவருடைய 'றூமுக்குப்' போவமே?'' பிடரி மயிரை விரலால் வருடியவாறே பாரதி ஒரு பக்கமாக மாற னைப் பார்த்தாள்.

''ஏன் ஏதேனும் விசேஷமா?'' 'சேட்' மேல் பொத்தானைக் கழற்றி விட்டு, கதிரையில் சாய்ந்தவாறே, மாறன் பார்வையை பாரதி பக்கமாகத் திருப்பினான்.

''இல்லையப்பா. இவருடைய 'ஸ்ரோரி' ஒண்டு இருக்காம். அதை ஒருக்கா வாங்கி வரவேணும்.''

''எட அதுக்கே? நான் நினைச்சன் ஆளுக்கு 'வெடிங்கோ', ஏதோவாக் குமெண்டு. ம் 'சண்டே'தானே, பாப்பம்.'' தான் கொண்டுவந்த தோல்ப்பை யினை பாரதியிடம் கொடுத்தவாறே, மாறன் இவனைப் பார்த்தான்.

''ரண்டு பேரும் கதைச்சுக் கொண்டிருங்கோ. நான் ஒருக்கா உள்ளை போயிட்டு வாறன்'' என்றவாறே கணவன் கொடுத்த பையினைப் பத்திரமாக எடுத்துக்கொண்டு பாரதி உள்ளே சென்றாள்.

இஸ்மைல், லயனல், லியனகே போன்ற தொழிற்சாலையின் ஸ்ரோர்க் கீப்பர்களது நிலவரங்கள் பற்றிக் கேட்டறிந்து கொள்வதில் மாறன் ஆர்வங் காட்டிகொண்டிருந்தான்.

லியனகேக்கு பேபி கிடைத்தது, இஸ்மைலின் சம்சாரம் மவுத்தா கிப் போனது, 'எக்கவுண்டனோடு' கொழுவுப்பட்டதாலை 'மனேஜ்மன்ற்' லயனலை வேலையிலிருந்து 'சஸ்பென்ட்' பண்ணியது உட்பட, சகல செய் திகளையும் இவன் சொல்லிக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் 'யஸ்ட் எ மினிட்' என்றவாறே மாறனும் உள்நோக்கிச் சென்றான்.

இப்போது இவனது பார்வை முன்னறைப் பக்கமாகத் திரும்பியது. கதவில் திரைச்சேலை ஓர் நிலையில் நில்லாது, முன் பின்னாக ஆடிக் கொண் டிருந்தது. 'செண்பகமே... செண்பகமே' பாடல் மீண்டும் ஒருமுறை இவனுள் ஒலிப்பதைப் போல் உணர்வு! அப்போ கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே, திரைச்சேலையை விலக்கியவாறே ஓடிவந்த அந்தப் பெண் கதவைத் திறந்து விட்டாள். வந்தவன் ஒரு புன்சிரிப்புடன் அந்தப் பெண்ணிடம் தான் காவி வந்த பையினைக் கொடுத்துவிட்டு, வாசல் கதவை மீண்டும் தாளிட்டுக்கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். இருவருமாக முன்னறைக்குள் நுழைந்து கொண்டனர். அறையினுள் நுழைந்ததும் அவன் கதவை அடித்துச் சாத்தினான். கதவு இடைவெளிக்குள் திரைச்சேலை அகப்பட்டு கசங்கியபடி தொங்கிக்கொண்டிருந்தது.

''வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா'' என்று உள்ளிருந்த வானொலியில் பெங்களூர் ரமணியம்மாளின் பக்திப் பாடல் ஒன்று மிக சத்தமாக ஒலித்துக்கொண்டிருந்தது. இப்போது இவனுக்கு இடம்மாறியிருக்க வேண்டும் போல ஒரு உணர்வு. அதே சமயம் தட்டில் தேநீருடன் பாரதி உள்ளறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள். தொடர்ந்து எதையோ கொறித்துக் கொண்டே மாறனும் வந்து அமர்ந்துகொண்டான்.

வழமையாக மாறனின் முகத்தில் தெரியும் வெளிச்சம் இன்று இல்லாததைப்போல இவனுக்குத் தென்பட்டது. 'ஆண்டாண்டு காலமாக நான் பாவிப்பது பனடோல்' என்ற விளம்பரப் 'போஸ்ரறில்' உள்ளவனைப் போல் காணப்பட்டான்.

இப்போது பாரதி தனது காரியாலய நடப்புகள் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள். தனக்குக் கீழ் வேலை செய்யும் உதவியாளர்கள் யாழ்ப்பாணம் போனால் வேளை காலையுடன் திரும்பி வராது விடுவதனால் வேலைகள் எல்லாம் 'அறியேஸ்' ஆகி விடுவதாக அவள் குறைபட்டுக்கொண்டிருந்தாள்.

வானொலியில் நிலைய வித்வான்கள் வயலின் வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

மாறன் இன்னமும் வெளியில் எங்கோ வெறித்துப் பார்த்தபடியே இருந்தான். உரையாடலில் பங்குபற்றுவதற்கான அறிகுறிகள் அவனில் தென்படுவதாக இல்லை. ஏழு மணியை அறிவிக்க வானொலி விட்டு விட்டு கூவிக்கொண்டிருந்தது.

''அப்ப நான் வரப் போறன்.'' எழுந்தவாறே இவன் கூறுகிறான்.

''பை த பை... வாற சண்டே இவருக்கு வேறை ஏதோ 'புறொகிறாம்' இருக்காம். அதனாலை நாங்கள் உங்களட்டை வர வசதிப்படாது எண்டு நினைக்கிறம். அடுத்தடுத்த கிழமைகளிலை ஒரு நாளைக்கு வர 'றை' பண்ணுறம்'' கூறியவாறே பாரதி எழுந்து நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தற்ஸ் ஒகே.'' வழிந்துகொண்டிருந்த வியர்வையை கைக்குட்டை யால் இவன் துடைத்துக்கொண்டான்.

''ஒருக்கால் வேலோனை சந்தியிலை கொண்டுபோய் விட்டுட்டு வாங்களன்.'' புருஷனைப் பார்த்து பாரதி சொல்கிறாள்.

''பரவாயில்லை, வந்து வந்து இப்ப எனக்கு இடம் நல்லாப் பிடிபட் டுட்டுதானே... ஐ கான் மனேஜ்'' என்றவாறே இவன் வீதிக்கு வருகிறான். ''குட் பாய்.'' மூன்று குரல்கள் ஒலித்தன. மூன்றாவது குரல் சற்று கனமானதாக வீதியிலிருந்து வெளிவந்தது.

குச்சொழுங்கையால் மிதந்து வேகமாகவே மைதான முன்றிலுக்கு வந்துவிட்டான். சன சந்தடியின்றி விளையாட்டு மைதானம் வெறிச்சோடிப் போய்க்கிடந்தது. விரைவாகக் கால்களை வைத்து முன்னேறிக்கொண்டிருந் தான். வழியை இடைமறிக்குமாப் போல் முன்னே பத்துப் பதினைந்து படிக் கட்டுக்கள் மேலே உயர்ந்து சென்று கொண்டிருந்தன.

படிகளில் ஏறும்போது இவன் எண்ணிக் கொண்டான். 'இனி என் மூக்கைப் பற்றிக் கவலைப்படும் அவசியம் ஏதும் ரஞ்சித்திற்கு இருக்காது.' இறுதிப்படி கால்களில் தட்டுப்பட்டது. ஒருமுறை வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான். அந்த மைதானம், குச்சொழுங்கை எதையுமே இனங்காண முடி யாதவாறு சகலதுமே இருளில் மூழ்கிப் போய்க் கிடந்தன.

**- மல்லிகை : 1985**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயணம்

''தம்பி, நேரம் பதினொண்டரையாச்சு. 'நேசறி' விடுகிற நேரம் வந்திட்டுது. ஒருக்கால்ப் போய் திரையனைக் கூட்டிக் கொண்டு வாறியே?'' - ஆழ்ந்த நித்திரையிலிருந்து அப்போது தான் பாயை விட்டெழுந்த என்னிடம் அக்கா வந்து கேட்டா.

''ம்... எனக்கு முதலிலை ஒல்லுப்போலை தேத்தண்ணி போட்டுத் தா.'' என் பதில் கேட்டு அடுப்படிக்குள் செல்கிறா அக்கா.

கொழும்பிலிருந்து நேற்றுக் கருக்கலோடு புறப்பட்டு கொடிகாமம் வந்தடையப் பொழுது மைமலாகி விட்டது. வரணியில் கூட்டாளி ஒருவரது வீட்டில் தங்கிவிட்டு தட்டிவான் எடுத்துப் பின் ஊர் வந்து சேர காலை எட்டு மணியைத் தாண்டிவிட்டது. நெடு நாட்களாக என் உடன்பிறந்தவளைக் காணாமலிருந்த சோட்டை, அதிக நேரம் உரையாடிவிட்டு பிரயாண அசதியில் சற்று அயர்ந்து விட்டேன்.

''ஊருக்கு வந்து ஒரு வருடமாச்சு. அக்கா, உங்களை எல்லாம் காண ஆசையாக இருக்கு. தீபாவளிக்கு வரட்டே?'' என்று சில மாதங்களுக்கு முன்பு அக்காவைக் கேட்டெழுதியிருந்தேன்.

''என்ரை ராசா... இப்போதைக்கு உந்த எண்ணம் ஒண்டும் வேண்டாம். நிலவரங்கள் சரியில்லை. பிரயாணங்கள் செய்யிற நேரங்களிலை தான் வலு அவதானமா நடக்கவேணும். தை பிறக்கட்டும் பார்ப்பம்'' என்று அக்கா மறுமொழி போட்டிருந்தா.

கொழும்பு வாழ்க்கையை நினைக்கும்போது, எனக்கு வாழ்க்கையே வெறுக்கின்றது. விடிந்ததும் காரியாலயம். பின் இருண்டதும் அந்த அறையில் போயிருந்து தனிமையான சஞ்சாரம். மன ஆறுதலுக்கோ, அன்றி மனம் விட்டு உரிமையுடன் கதைக்கவோ எவருமே இல்லாத அலுத்துப்போன பிரமச்சாரிய வாழ்க்கை. காசைக் கொடுத்து உடம்பைக் கெடுத்துக்கொள்ளும் கடைச் சாப்பாடு. தாகம் வந்தால் குடிக்கத் தண்ணீரே போதியளவற்ற தலை நகர வாழ்க்கை. இருபது வயதிலிருந்து கடந்த ஏழு வருடங்களாக இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையற்ற சுழல் சம்பவங்கள். கொழும்பில் குடும்பமாக இருக்கும் என்னை யொத்த வாலிபர்களைப் பார்க்கும்போது எனக்குப் பொல்லாத எரிச்சலாக வும், ஏக்கமாகவும் இருக்கும்.

நான் அப்படியாக ஒன்றும் அனாதையல்ல. என் குடும்பத்தவருடன் கூடி வாழ முடியாதபடி எங்களது தொழில் நிலவரங்கள், வரும்படிகள். அடிக் கடி ஊர் வந்து சென்றால் எந்தவித ஏக்கமும் இருக்காதுதான். ஆனால், இது பாதுகாப்பாகப் பிரயாணம் கூடச் செய்ய முடியாதபடி நாட்டு நிலவரங்கள், போக்குவரத்து வசதிகள், கிழமைகள் தவறாது அக்காவின் கடிதங்கள் வரும். என் சுகம் விசாரித்து, எனக்காகப் பிரார்த்தித்து, ஆனாலும்?

''வேலோன், வெள்ளனச் சொல்ல அயத்துப் போனன் தம்பி. 'மொண்டசொறி' முன்னை மாதிரி நெசவுசாலைக் கட்டடத்திலை இல்லை. இப்ப சாமியாற்றை மடத்திலை.'' தேநீர்க் கோப்பையை நீட்டியவாறே அக்கா சொல்கிறா.

''ஏன் நெசவுசாலைக்கு என்ன நடந்தது?''

''கடற்கரை கல்லூரிகளிலை இப்ப 'ஆமிக் காம்ப்' இருக்கு. அத னாலை இப்ப ஊர்ப்பள்ளிக்கூடத்தோடை தான் கல்லூரியையும் சேர்த்திருக் கினம். கொட்டில்கள், கட்டிடங்கள் போதாதெண்டு நெசவுசாலை, சுருட்டுத் தொழிற்சாலை, பனங்கட்டித் தொழிற்சாலை எல்லாம் இப்ப வகுப்புகள் நடத்துகினம். பத்தாததுக்கு கோயில் தீர்த்த மடத்திலையும், மகிழமரங்களுக் குக் கீழையும் கூட பொடியள் இருந்து படிக்குதுகள்.''

இது எப்போதோ பத்திரிகையில் பார்த்த செய்தியும் கூட. இப்போ தான் எனக்கு ஞாபகத்திற்கும் வந்தது.

''பிரயாண அலுப்பு. நீயும் பஞ்சிப்படுகிறாய் போலை கிடக்கு. கொத்தானும் இண்டைக்குச் சுணங்கித்தான் வருவன் எண்டுட்டுப் போனவர். எனக்கும் ஏலாமல் கிடக்கு... அல்லாட்டி நானே பையப் பையப் போய்...'' மிகவும் சங்கடப்பட்டு அக்கா விறாந்தையில் இருக்கின்றா.

அக்காவை உற்றுப் பார்க்கிறேன். 'நாம் இருவர் நமக்கிருவர்' என வியாக்கியானம் சொல்லி வந்த அக்கா, இப்போ மீண்டும் தாய்மையுற்றிருப் பது எனக்கு வியப்பாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு இரண்டு பிள்ளைகளும் போதும் எண்டு சொல்லி மும்முரமா குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிச்சு வந்தாய்... இப்ப என்ன நடந்தது?'' எனது மனதில் எழுந்த கேள்வியைக் கேட்கு முன்னதாகவே அக்கா செல்கிறா...''இப்ப நாட்டிலை நடக்கிற முகப்பாத்திகளைப் பார்க்கைக்குள்ளை குடும்பத்துக்கு இரண்டு பொடியளே போதாது போலை கிடக்கு. அதனாலை இனிமேல் குடும்பக் கட்டுப்பாடுகளைத் தீவிரமாக ஆதரிக்க வேண்டியதிலை நியாயம் இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு இனிக் குடும்பம் சடம்பமாக இருக்குதோ அவ்வளவுக்கவ்வளவு அது எங்கடை சந்ததிகளுக்கும் நல்லது.'' அக்காவின் கருத்து எனக்குப் புதிதாக இருந்தது. அது பிரச்சாரத்திற்குரியது போலவும் இருந்தது.

சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது.

''சுறுக்காப் போடா தம்பி. இன்னும் கொஞ்ச நேரத்திலை 'நேசறி' விட்டுடும். பொடியைக் கவனமாகக் கூட்டிக் கொண்டு வா. சரியான வெய்யிலாகவும் கிடக்கு. இணலான இடங்களாகப் பார்த்து வாருங்கோ.'' அக்காவின் அவசரமறிந்து இருக்கையை விட்டெழுந்து செல்கிறேன்.

★ ★ ★

பதினைந்து மாதங்களுக்குள் ஊர் மாறித்தான் போய் விட்டது. மூத்ததம்பி வாத்தியார் வீட்டு முடக்கடியில் இலந்தை மரத்திற்கு கிழக்கால் பாழடைந்து போயிருந்த பழைய வீடொன்று புதுப்பொலிவு பெற்று விளங்கிற்று. அந்த வீட்டினைச் சூழ மண்ணைப் பொட்டழிகளாக்கி மதில் போட்டிருந்தார்கள். உள்ளே சில புது முகங்கள். அந்த இளவட்டங்கள் என்னை வித்தியாசமாகப் பார்த்தார்கள். 'யார் இது பிறத்தியாள் போல கிடக்கு?' என்பதைப் போல.

அவ்வப்போது ஊர் வந்து செல்லும் நண்பர்கள் மூலம் இவை பற்றி நான் கேள்விப்பட்டாலும், இப்போதுதான் நேரில் பார்க்கின்றேன்.

குச்சொழுங்கைகளுக்கால் மிதந்து இப்போ நான் பிள்ளையார் கோவில் வீதிக்கு வந்து விட்டேன். முச்சந்தி மதகிலிருந்த ஓர் கிழவி முகத்தை மூடியிருந்த மூடலை எடுத்து விட்டு என்னைப் பார்த்தாள்.

''என்னணை ஆச்சி. அப்பிடிப் பார்க்கிறியள்?'' நான் தான் குரல் கொடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆரது... கண் வலுவா மங்கிப் போனதிலை ஆளை மட்டுக்கட்டே லாமல் கிடக்கு.''

''நான் தானணை.''

என்னை உற்றுப் பார்த்த கிழவி, இனங்கண்ட பூரிப்பில் ''எட எங் கடை கொத்திவளவில் உமையாத்தையின்ரை மூத்தவளின்ரை பொடியனே? அண்டைக்கு கொக்கை ராசேசு கறி வேண்ட வந்த இடத்திலை சொன்னவள், தம்பி வாற கிழமையளவிலே வாறானெண்டு. எப்பவடா மோனை வந்தனி?''

''காத்தாலைதானணை.''

''என்னடா மோனை, ஆள் வலுவாக் கொட்டுப்பட்டுப் போனாய்? கறுத்துக் கருவாடாய்ப் போனாய்? என்ன சங்கதி? சரியான கேவலமா இருக் கிறாய்?''

''தெரியாதேயணை கண்காணாத இடத்திலையிருக்கிறது, கடைச் சாப்பாடு திங்கிறது.''

''காலாகாலத்திலை ஒண்டைப் பார்த்து கொழுவிப் போட்டாயெண் டால்... கொக்கை ராசேசுக்கும் அண்டைக்கு இதைப்பற்றி விளம்பரமாகச் சொன் னனான். ம்... என்ரை பேரனும் இருந்திருந்தானெண்டால்... இவ்வளவுக்கு.''

''ஓமணை ஆச்சி நானும் கேள்விப்பட்டு வலுவாக் கவலைப்பட்ட னான்.''

''ஓ! அவனும் உன்னோட்டப் பொடியன்தானே? நாலு பெட்டை யளுக்குப் பிறகு அருமை பெருமையாய்ப் பிறந்து, முட்டுப்பட்டு வளர்ந்து, கடைசியிலை இப்படியா வாழ்மானம் வந்திட்டுது.''

''என்னணை செய்யிறது. எங்கடை பொடியள் சிலருக்கு இது ஒரு நியதியாப் போச்சு.''

''பனையாலை விழுவாங்கள். பதறுவாங்கள். ஒரு ஈன இரக்கம் பார்க்கிறாங்களே? கடைசியிலை பொடியன்ரை பிரேதத்தைத் கூட...'' கிழவி யின் குரல் அடைத்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நெடுகவும் இப்படி அழிவு வருமெண்டில்லை. எதுக்கும் காலம் ஒரு நல்ல மறுமொழி சொல்லுமணை.'' தூரத்தே பல பாலகர்கள் மிக வேக மாக வருவது கண்டு என் மருமகனின் ஞாபகம் வந்தவனாக, கிழவியிடமி ருந்து விடைபெற்று சாமியார் மடத்தை நோக்கிச் செல்கிறேன்.

கோவிலைத்தாண்டி மடத்தை அடைந்தபோது அங்கு 'ரீச்சரும்' சில பாலகர்களும் மட்டுமே எஞ்சியிருந்தனர். என்னைக் கண்டதும் எனது மரு மகன் 'ரீச்சர் போட்டுவாறன்' என்று 'ரீச்சருக்கு' கையைக் காட்டிவிட்டு ஓடி வந்து என் கையைப் பற்றுகிறான்.

''மாமா எப்ப வந்தனி?''

''காலமை தான் திரையன்''

''தம்பிக்கு என்ன கொணந்தனீ?''

''அப்பனுக்கு அப்பிள், ஜாம், கேக், மள்ளாக்கொட்டை சுவீற், எல் லாங் கொண்டு வந்தனான்.''

''வேறை...?''

''வேறை... வேறை... தம்பி எழுதப் பேப்பர், பெஞ்சில், பேனை எல்லாங் கொணந்தனான்.''

''அதை விட...''

''அவ்வளவுதான் திரையனுக்கு. இனி அடுத்த முறை நீ கேக்கிற தெல்லாம் வாங்கி வருவன்.''

''நீ அடுத்த முறை வர நான் பெருத்திடுவன், என்ன மாமா?'' எனக் குச்சிரிப்பாகி விட்டது. நான் அருமையாக ஊர் வருவது இந்தப் பிஞ்சு உள்ளத் துள் கூட எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

''ஓமப்பன். நான் அடுத்த முறைக்கு வர தம்பி பள்ளிக்குடத்திலை படிப்பான்.'' என்கிறேன் பதிலுக்கு நான்.

''அப்ப அது கொண்டு வருவியோ?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எது?''

''ஏ.கே.போட்டி செவன்.''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒருவாறு சமாளித்தவனாக, ''என்னத்துக்கு ராசா உனக்கு அது?'' என்றேன்.

''அது எதுக்கெண்டு உனக்குத் தெரியாதே?''

''தெரியும்... தெரியும்...''

எப்படி, எதைச் சொல்லி இக்கதையை மாற்றலாம் என்று எண்ணியவனாக, ''அது சரி திரையனுக்கு இண்டைக்கு நேசறியிலே என்ன படிப்பிச்சவ ரீச்சர்?'' என்று கேட்டேன்.

''குண்டு போடுகிற போது, 'ஷெல்' அடிக்கிறபோது எப்பிடி நடக்கவேணுமெண்டு ரீச்சர் சொல்லித் தந்தவ''

''அதைவிட வேறை என்ன படிச்சனீங்கள்?'' மருமகனின் கையிலிருந்த புத்தகப் பையையும், தண்ணீர்ப் போத்தலையும் வாங்கி என் தோளில் போட்டவாறே நான் கேட்டுக்கொண்டு நடந்தேன்.

''அதுகளைப் பற்றித்தான் இண்டைக்கு, வேறையும் நாலைஞ்சு அண்ணாமார் வந்து செய்துகாட்டினவங்கள்.''

கோவில் தேர்முட்டியை அண்மித்துக்கொண்டிருந்தோம். தூரத்தே அந்தியேட்டி மடத்தில் சில முதியவர்கள் ஏதோ விளையாட்டில் மூழ்கிப்போயிருந்தார்கள்.

''மாமா அவை என்ன விளையாடினம் தெரியுமோ?'' என் கைகளை உலுப்பியவாறே மருமகன் கேட்டான்.

சற்று உற்றுப் பார்த்து விட்டு, நான் சொல்கிறேன்... ''நாயும் புலியும்.''

மருமகனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. கைகளால் தன் வாயைப் பொத்தியவாறே அடக்கமுடியாத சிரிப்புடன் அவன் சொல்கிறான். ''மாமா உனக்குச் சரியா மூளை கலங்கிப் போச்சு. அது 'ஆமியும் புலியும்' விளையாட்டு மாமா.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. யாரும் வருகிறொர்களா என்று திரும்பிப் பார்க்கிறேன். நல்லவேளை எவருமே இல்லை. முருகனிடம் கைகட்டி பாடம் கேட்கும் சிவனின் சிற்பம் கோவில் ராஜகோபுரத்திலிருந்து கம்பீரமாக... என் கண்களில் திரையிட்டது.

தூரத்தே... தீர்த்த மடத்திலும், கோவிலைச் சுற்றிய மகிழ மரங்களுக்குக் கீழேயும் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. ஆசன வசதிகள் இன்றி சிறுவர்கள் புற்றரையில் இருந்தவாறே பாடங்கள் பயின்று கொண்டிருந்தார்கள். இப்போ நாம் கோவிலைத் தாண்டி வீதிக்கு வந்துவிட்டோம்.

மருமகனைத் தமாஷ்படுத்த எண்ணியவனாக, ''உனக்குத் தம்பியோ தங்கச்சியோ பிறக்க வேணும்?'' என்று கேட்கிறேன்.

''எனக்குத் தம்பி தான் மாமா வேணும்.''

''என்னடா முந்தித் தங்கச்சி பெத்துத் தா எண்டு அம்மாவை உபத்திரப்படுத்துவாய். இப்ப தம்பி தான் வேணுமெண்டு நாண்டு கொண்டு நிக்கிறாய். ஏன், என்ன சங்கதி?''

''தம்பி எண்டால் தான் மாமா சண்டை போடுவான்.''

இனி இவனுடன் பேச்சுச் பறைச்சல் வைத்துக்கொள்வதில்லை எனத் தீர்மானித்துக்கொண்டேன். அப்படி ஏதாவது கதைத்துக்கொண்டால் என் அறியாமையால் நான்தான் 'நாற வேண்டி' நேரிடும் என்ற பயப்பிராந்தியே தவிர, எனது மௌனத்திற்கு வேறு காரணங்கள் ஏதுமில்லை.

★ ★ ★

அமைதியாக இருந்த வானத்தில் திடீரென ஒரு விமானம்; ''தம்பி, அங்கை பாரடா ஒரு பிளேன்.'' பூரிப்புடன் வாயெல்லாம் பற்களாக நான் மருமகனுக்கு ஆகாயத்தைக் காட்டுகிறேன்.

''மொக்கு. அது பிளேன் இல்லை, 'பொம்பர்'. குண்டு எறிஞ்சு எங்களைப் பச்சடி போடப்போறாங்கள் மாமா. வா கெதியா வீட்டை ஓடுவம்.'' மருமகன் முன் சென்று என்னை இழுத்துச் செல்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள், ஆறுமுகப்பா கடை, வாசிகசாலை யாவும் அமைதியாகின்றன. நாமிருவரும் இப்போ கோவில் வீதியைக் கடந்து கந்தமுருகேசனார் சிலையையும் தாண்டி முச்சந்தி ஊடாகக் குச்சொழுங்கைக்குள் இறங்கி விட்டோம்.

ஒன்று இரண்டாகி இப்போ மூன்று 'பொம்பர்கள்' மிக அண்மையாக, நாலு பனை உயரத்தில் வானில் வட்டமிடுகின்றன. எனக்கு நடுக்கம் பிடிக்க ஆரம்பித்து விட்டது. ''தம்பி, இப்ப என்னடா செய்யிறது?'' நான் மருமகனை வினவுகிறேன்.

''மாமா, குண்டு போடத் தொடங்கப் போறாங்கள். இஞ்சை வா... ஓடிவா எனக்குப் பின்னாலை.'' அவன் முன்னே ஓடுகிறான். பின்னால் நான் செல்கிறேன்.

அப்போது எம்மை விலத்திப் பல இளைஞர்கள் கனத்த ஆயுதங்களுடன் கோவில் வீதிப் பக்கமாக ஓடுகிறார்கள். வரும்போது மூத்ததம்பி வாத்தியார் வீட்டு முடக்கடியில் வீட்டில் நான் பார்த்த அதே புதுமுகங்கள். மிஞ்சி மிஞ்சிப் போனால் அவர்களுக்கு வயது இருபதுக்கு மேல் இருக்காது.

குச்சொழுங்கையில் உள்ள வீடொன்றின் பின்வளவால் மருமகன் என்னை அழைத்துச் செல்கிறான். வளவின் கோடிப்புறமாக ஒரு அகன்ற ஆழமான அகழி. அங்கே பெண்களும், பிள்ளைகளும், குழந்தைகளுமாகப் பலர். மருமகன் காட்டிய குழிக்குள் இறங்கி நாமும் பதுங்கிக் கொள்கிறோம். சூழ இருந்த சில பெண் பிள்ளைகள் என்னைப் பார்த்து ஏதோ முணுமுணுக்கிறார்கள். உடுத்திருந்த வெள்ளை வேட்டி அரையால் வழுகியதைப் போல இருந்தது எனக்கு. முகம் சுத்தமாகச் சிவந்து விட்டதை உணர்ந்து கொண்டேன்.

''டும்... டும்ம்...'' வானைப் பிளக்கும் சத்தங்கள். ''மாமா... எங்கட பொடியள் சுடத் தொடங்கி யிட்டாங்கள், இனிப் பயப்பிடாதை, 'பொம்பர்' போய்விடும்'' மருமகன் என் காதருகில் குசுகுசுத்தான்.

இப்போதுதான் எனக்குத் தெம்பு வந்தது. எண்பத்தி மூன்றின் ஆடிக் கலவரத்துக்குப் பின்பு இன்று தான் முதற்தடவையாக இப்படி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்திருக்கிறேன். ஆடிக் கலவரம் அந்நிய மண்ணில், ஆனால்... இது எமது சொந்த மண்ணில், நாம் பிறந்த மண்ணில். இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட...,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எழும்பு மாமா, 'பொம்பர்' போட்டுது. நாங்கள் இனிப் போவம். அம்மா பாவம் பயப்பிடப்போறா.'' மருமகன் ஏறி முன்னால் போக, நான் பின்னால் செல்கிறேன்.

உடுத்திருந்த அதே வீட்டுச் சேலையுடன் அக்கா எங்களை நோக்கி ஓடிவந்து கொண்டிருக்கிறா. அவவின் இடுப்பிலிருந்தவாறே இளையவன் பெருங்குரல் எழுப்புகிறான்.

''நான் பதறிப்போனன். என்ரை ரண்டு பிள்ளையளுக்கும் என்ன நடந்ததோ எண்டு, நான் சரியாப் பயந்து போனன்.'' இளைக்க இளைக்கத் திரையனின் முகத்தை தடவியவாறே அக்கா சொல்கிறா. சேலைத் தலைப் பால் எனது வியர்வையையும் துடைத்து விடுகிறா.

''மாமா வந்தது நல்லதாப் போச்சு, என்ன திரையன்?'' திரையனை அணைத்தவாறே அக்கா கேட்டா.

''அக்கா, உண்மையிலை திரையன் தான் என்னைப் பவுத்திரமாகக் கூட்டிக்கொண்டு வந்து உன்னட்டைச் சேர்த்திருக்கிறான். நான் வெறும் உருப் படிக்குப் போனனே தவிர, எனக்கு எல்லாம் சொல்லித் தந்தது, வழி காட்டி னது உன்ரை மகன் தான் அக்கா. உண்மையிலை தம்பியட்டையிருந்து தான் நான் அறிய வேண்டிய சங்கதிகள் நிறைய இருக்கு. இவ்வளவு காலமும் பய ணம் வந்து போயிருக்கிறன். ஆனால், இந்தப் பயணம் தான் எனக்கு ஒரு புதிய படிப்பினையைத் தந்திருக்கு அக்கா.''

அக்காவின் கண்களில் நீர் பனித்தது.

இப்போ நான் முன்னால் சென்று கொண்டிருக்கிறேன்.

**- மல்லிகை : 1985**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புக் கணக்கு

இன்று எப்படியும் நான் அவளிற்கு கூற நினைத்ததைக் கூறி விடவே வேண்டும்.

மேசை லாச்சிகளைத் திறந்து காசுப்புத்தகம், பேரேடு மற்றும் 'பைல்களை' எடுத்து மேசையில் அடுக்குகிறேன். 'பென்சில்', 'பேனா', 'கல்குலேட்டர்', 'கோலிங் பெல்' என ஒவ்வொன்றாகப் பரப்புகிறேன். நேரம் ஒன்பது என்பதற்கு அறிகுறியாக அடுத்த தெரு 'பிளாஸ்டிக்' கம்பனி சங்கு ஒலித்தோய்கிறது. வழமையில் இந்நேரமெல்லாம் வந்து 'குட்மோணிங்' சொல்லி கையொப்பமிட்டு, 'வோஷ்ரூம்' பக்கம் சென்றுவிடும் அவளை இன்று மட்டும் இன்னமும் காணோமே?

நான் பணிபுரியும் இந்த ஸ்தாபனம் அப்படி ஒன்றும் பெரிதான தல்ல. எங்கள் 'பொஸ்', சகலதுக்கும் பொறுப்பாக நான், எனக்கு உதவியாளராக 'புக்கீப்பரான' அவள், இன்னும் ஒரு 'டைப்பிஸ்ட்' கிளார்க் (அவளது பெயர் கௌசிகாவோ அல்லது கௌரிகாவோ என்பதில் எனக்குப் பலத்த சந்தேகம் இருப்பதால் பொதுவாக 'மிஸ்' என்றே அழைத்து வருகிறேன்). மற்றும் உள், வெளி வேலைகளைக் கவனிக்க செந்தில், உபாலி என இரு ஆபிஸ் பையன்கள். மொத்தம் ஐவருக்கும் மாதச் சம்பளமாக முப்பத்தோராம் திகதியோ, அல்லது முப்பதாம் திகதியோ 'பொஸ்' பதினையாயிரம் ரூபா காசோலையில் கையெழுத்திட்டு என்னிடம் தருமளவிற்கு, இவ்வளவுக்குள் தான் எங்கள் வட்டம்.

இந்த 'ரேடிங்' கம்பனியின் காரியாலயத்திற்கு நான் பணிபுரிய வந்தது ஒரு இருபத்தைந்தாம் திகதி என்பது மட்டும் எனக்கு நல்ல ஞாபகம். ஆனால், அது மாசியிலா, பங்குனியிலா என்பது அவளைக் கேட்டுத்தான் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் இப்பேர்ப்பட்ட விவகாரங்கள் உட்பட சகல விடயங்களிலும் சிறந்த ஞாபகசக்தி அவளிற்கே உண்டு. நான் பதவிக்கு வந்த முதல் நாள் நிகழ்ச்சி மட்டும் எனக்கு நல்ல ஞாபகமாக இருக்கிறது. என்னை தன் முன்னாலிருத்தி விட்டு 'பொஸ்' தனதறைக்கு இந்த நால்வரையும் அழைத்து ஒவ்வொருத்தராக எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஸ்தாபன நடைமுறைகளையும், தானில்லாத வேளைகளில் பொறுப்புகள் என் கைவசமே எனவும் கூறியவர் என்னை மணமகன் போல என் இருக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அழைத்து வந்ததும், அவளை மட்டும் மீண்டும் அழைத்து ''சில நாட்களுக்கு இவருக்கு ஹெல்ப் பண்ண வேண்டும்'' எனக் கூறியதும் ''ஓகே சேர்'' என அவள் பவ்வியமாக உரைத்ததும் என் நெஞ்சாங்கூட்டை விட்டு என்றுமே அகலாத 'பிளாஷ் பேக்குகள்'.

வாரத்தில் எமக்கு ஐந்தரை நாட்கள் வேலை. ஆனாலும் எனக்கு ஏறத்தாழ எல்லா நாட்களுமே வேலையிருக்கும். வேலையினைப் பொறுப்பேற்ற முதல் நான்கைந்து கிழமைகளும் அவளும் தனது லீவில் அரைநாளை எனக்காகத் தியாகம் பண்ணிவந்ததும், சீறாமல் சினக்காமல் சகல நடைமுறைகளையும் எனக்கு எடுத்தியம்பிய அவளது பண்பும், பாங்கும் எனக்கு அவள் மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியது. மற்றைய மூவரையும் விட அவளுடனேயே நான் அதிகம் கதைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததும் அவள் மீது நான் அந்நியோன்னியமாகிவிட இன்னொரு காரணமாக அமைந்தது.

வேலைக்கு வந்த மூன்றாம் மாத முடிவிலாக இருக்க வேண்டும். ''ஒரு மணியாச்சு சாப்பிடக் கூட போகாமல் அப்படி என்ன வேலை வேண்டிக்கிடக்கு!'', ''என்ன மூட் அவுட் ஆக இருக்கிறீங்க சுகமில்லையா? பனடோல் தரட்டுமா?'' என்றெல்லாம் கேட்குமளவிற்கு அவள் என்னுடன் பழக ஆரம்பித்து விட்டாள்.

''உங்களுக்கென்ன வீட்டிலை 'பேறன்ஸ்', 'சிஸ்ரேஸ்', 'பிறதேர்ஸ்' என குடும்பமே கொழும்போடையிருக்கு. எனக்கு அப்பிடியா?'' என்பேன். ''ஓ! சூட்டிக்கு அம்மா ஞாபகம் வந்திடுச்சா?'' என்பாள். ''ஏன் உங்க அம்மாவையும், தங்கச்சியையும் கொழும்புக்கு 'கோல்' பண்ணுங்களன்?'' என்றாள் இன்னொரு நாள். ''குடும்பத்தைக் கூப்பிட்டுட்டு கொழும்பிலை எங்கை கோட்டை றெயில்வே ஸ்ரேஷனிலையா இருப்பது?'' என்றேன்.

அன்றொரு வெள்ளிக்கிழமை. 'உங்களுக்கு லஞ்ச் இண்டைக்கு என்ரை பொறுப்பு'' என்றாள். ''ஏன் இண்டைக்கு உங்க பிறந்த நாளா?'' என்றேன். ''அப்பிடி எதுவுமில்லை... நீண்ட நாளா கடையிலை சாப்பிடுறீங்களே... ஒரு 'சேஞ்சுக்கு' இண்டைக்கு எங்கட வீட்டு சாப்பாட்டையும் ஒருக்கா 'ரேஸ்ட்' பண்ணிப் பாருங்களேன்...'' என்று கூறினாள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ''நீங்கள் என்ன நம்பர்?'' என்று கேட்டேன் நான் ஒருநாள். ''என்ன நீங்கள் எண்டு எனக்கு பெரிய மரியாதை தரவேண்டியிருக்கு?'' என்றாள் பதிலாக! ''அப்ப என்னடி என்று அழைக்கலாமா?'' என்று கேட்டேன். ''அது உங்க இஷ்டம்'' என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன கழுத்திலை சுழுக்கா?'' என்றாள் இன்னொரு நாள். ''எப்படி தெரியுது பார்க்க?'' என்று கேட்டேன். ''கண்றாவியா இருக்கு'' என்றவள் ஆபீஸ் பையன்களில் உபாலி என்பவனை அழைத்து ஏதோ ஒரு 'பிளாஸ்டர்' வாங்கி வரும்படி தனது 'ஹாண்ட்' பாக்கிலிருந்து ஒரு பத்து ரூபா தாளை எடுத்து நீட்டினாள். ''என்னுடலுக்கு ஒத்தடம் நீ தரலாம். என் உள்ளத்திற்கு ஒத்தடம் யார் தருவார்?'' என்றேன். ''பெரிய கண்ணதாசன் என்ற நினைப்பு'' என்ற வசனம் பதிலாக வந்தது.

மற்றுமொரு நாள் அவள் இப்படிக் கேட்டாள். ''மாசா மாசம் ஐயாயிரமோ ஆறாயிரமோ சம்பளம் எடுக்கிறீங்க... இப்படிப் பாசமலர் பட பாணி 'றவுசரும்', 'பாட்டா' சிலிப்பருமா போடுவாங்க? செந்தில், உபாலியைக் கூடப் பாருங்க! எப்பிடி 'ரிப்ரொப்'பாக 'றெஸ்' பண்ணுறாங்க எண்டு.'' அதற்கு நான் ''ஆக்களின்ரை பதவியும் அந்தஸ்தும் போடுகிற உடுப்பிலையா இருக்கு? இது என்னோடை பாணி, இதை மாற்ற எவராலும் முடியாது'' என்றேன். ''என்னால் கூடவா?'' என்றாள் முகத்தை கோணலாக்கியவாறே.

அவளுடன் பழக ஆரம்பித்து ஆறு மாதங்களின் பின்... அண்மையில் ஒருநாள் ''எனக்கு இலங்கையை விட்டுச் செல்ல ஒரு சான்ஸ் கிடைச்சிருக்கு'' என்றேன். ''என்ன சொல்லுறியள்'' என்றாள். ''விரைவிலை எனக்கு நீ பிரியாவிடை தர வேண்டியிருக்கும்!'' என்றேன் வேறொரு வழியாக. அவள் கண்களில் ஒரு நீர்ப்படலம் மிதந்து வந்தது. ''என்ன நடந்தது உனக்கு?'' என்றேன். ''ஏனோ தெரியல்ல... காலையிலை இருந்தே கண்கள் கலங்குது... தடிமன் குணமோ தெரியல்லை...'' என்றவள், ''ஏன் அப்பிடி எந்த நாட்டிற்குப் போகப்போறீங்க?'' என்றாள். நான் மௌனமானேன். ''அப்பிடி எதுவுமே செய்திடாதீங்க. அதுக்கப்புறம் எனக்கு விசரே வந்திடும்'' என்றவள் தேநீர்க் குவளையுடன் 'வோஷ்ரூம்' பக்கம் சென்றுவிட்டாள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த இரண்டொரு நாட்களின் பின்... நாமிருவர் மட்டுமே தனியாக இருந்த ஒரு காலைப் பொழுதில், ''எங்கள் இரண்டு பேரிற்குமிடையிலை எவ்வளவு ஒற்றுமை பார்த்தீர்களா?'' என்றாள். ''அப்படி என்ன பெரிய ஒற்றுமையைக் கண்டுவிட்டாய்?'' என்றேன். ''என் பெயர் காவேரி, மூன்றெழுத்து. வேலோன், உங்க பெயரும் மூன்றெழுத்து. அன்பு, பாசம், கருணை, நேசம் இவைகளும் மூன்றெழுத்து... இதைக் கவனித்தீர்களா?'' என்று கேட்டாள், கையால் மேசைமீது கிடந்த காகிதத்தில் கோலமிட்டவாறே.

''ஏன் பிரிவு, சோகம், அழிவு, நாசம் இவைகளுக்குக் கூடத்தான் மூன்றெழுத்து'' என்றேன். ''போடா விசரா'' என்பது பதிலாக வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவங்களின் பின்புதான் இனியும் காலந் தாழ்த்தாது நானாவது முதலில் 'அதை' அவளிற்குக் கூற வேண்டும் என்ற முடிவுக்கு வந்து, இன்று எப்படியும் கூறியே விடவேண்டும் என்ற தீர்மானத்திற்கும் வந்திருக்கிறேன்.

★ ★ ★

நேரம் ஒன்பதரையைத் தாண்டி விட்டது. 'டைப்பிஸ்ட்' கிளார்க்கைப் பார்த்தேன். கேள்விக்குறியொன்றுடன் அவவும் என்னை நோக்கினா. 'என்ன இண்டைக்கு உங்கடை காயைக் காணேலை?' என்று கேட்குமாப்போலிருந்தது அந்தப் பார்வை. பின்னால் உபாலி எதையோ 'பைல்' பண்ணிக்கொண்டிருந்தான். முன்னால் செந்தில் 'பொஸ்சின்' 'றூமை' துப்புரவாக்கிக் கொண்டிருந்தான். மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தேன். பத்து மணிக்கு பத்து நிமிடங்கள் மட்டுமே இருந்தன. 'ஏன் மிஸ் இண்டைக்கு காவேரி வர மாட்டாவா?' என்றேன் 'டைப்பிஸ்ட்டைப்' பார்த்தவாறே. ''ஏன் உங்களுக்குத் தானே தெரியணும்'' என்பது பதிலாக வந்தது. கேட்காமலே விட்டிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

வந்த எரிச்சலை எவர் மீதாவது கொட்டித் தீர்க்க வேண்டும் போலிருந்தது. தூசி துடைத்து முடித்து விட்டு வளமாக செந்தில் வந்துகொண்டிருந்தான். ''என்னப்பா செந்தில் இன்னும் 'ரீ' பிறிப்பயர் பண்ணேலையா?'' என்றேன். 'ரீக்கு' லக்ஸ்பிறே தீர்ந்து போச்சு சேர்!'' என்றான். 'பெற்றிக்காஷில்' இருந்து எடுத்து ஒரு நூறு ரூபாத் தாளை நீட்டியவாறே, ''ஏன் இதை முன்னமே சொல்லித் தொலைக்கக்கூடாதா?'' என்றேன். ''சேருக்கு இண்டைக்கு 'மூட் அவுட்' போலை'' என்று கதவுக்கு அப்பால் சென்று, அவன் 'முணுமுணுத்துக்' கொண்டது 'டைப்பிஸ்டிற்கும்' கேட்டிருக்கலாம்.

வானொலி காலைத் தமிழ் வர்த்தக நிகழ்ச்சிகள் நிறைவுற்றதற்கான சாத்தியக் கூறுகள் அடுத்ததாயுள்ள 'கொமினிக்கேஷனிலிருந்து' ஒலித்தது. எவரோ கதவடியில் வரும் ஓசை கேட்டது. நிமிர்ந்து பார்க்கிறேன். அவள் தான். திருமணப் பெண்ணாக மெல்ல... மெல்ல... அடியெடுத்து காவேரியே தான் வந்து கொண்டிருந்தாள். என்னையறியாமலே என்னுள் ஒரு உற்சாகம் ஊற்றெடுத்தது. 'குட்மோணிங்' என்றவாறே என்னைக் கடந்து பின் சென்றாள். 'குட் ஆவ்ரநூன்' என்றேன் என் கடிகாரத்தைப் பார்த்தவாறே. 'கோயிலுக்குப் போட்டு வந்தன். அதுதான் கொஞ்சம் 'லேட்டாப்' போச்சு'' என்று கூறிக்கொள்வதும், என் காதில் வந்து விழுந்தது.

''இனி ரீ தேவையில்லைத்தானே?'' என்றான் பில்லையும் மீதிப் பணத்தையும் நீட்டியவாறே செந்தில். ''என்ன நீ சொல்லுறாய்?'' என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை சேர் 'லஞ்ச்' அவர் ஆகுது அதுதான்' என்றவன், மேலும் என் கண்க ளில்படாது பின்பக்கமாக நழுவிவிட்டான்.

திரும்பி, ''இங்கை வாங்கோ. இந்த 'காஷ்புளோ' இஸ்ரேட் மெண்டை ஒருக்கா 'பிறிப்பயர்' பண்ணித் தாங்கோ'' என்றேன். பேனையும் 'பைலுமாக' வந்து என் முன் அமர்ந்து கொண்டாள். அவளது அலையலையான கூந்தலில் இருந்து வீசிய நறுமணம் 'குப்பென' என் நாசியில் வந்து ஏறிற்று.

''அதுக்கு முன்னாடி நான் ஒரு விசயம் சொல்ல வேணும்'' என்றேன். ''நான் கூட ஒரு 'நியூஸ்' உங்களுக்குச் சொல்ல வேணும்'' என்றாள். முதலில் சொல்வது யார்? ஒரு வேளை இவள் 'அதையே' சொல்ல வருகிறாளா? அம் மாளாச்சி! அதற்குள் நான் முந்திக் கொள்ள வேண்டுமே?

''வயதுக்கு மூத்தவன் நான். அதனாலை முதல்லை நான் சொல்லு றன். அப்புறம் நீ சொல்லு!'' என்றேன். ''நோ... நோ... முதல்லை நான்தான் சொல்ல வேணும். முதன்முதலா உங்களுக்குத்தான் சொல்லவும் வேணும்'' என்று சிணுங்கினாள். 'சரி சொல்லடி'' என்றேன். என் நெஞ்சு 'படக்... படக் கென்று' சத்தமாக அடிப்பது அவளுக்கும் கேட்டுவிடும் போலிருந்தது.

''எனக்கு வர்ற 'சண்டே' என்கேஜ்மெண்ட்! அதுதான் இண்டைக்கு வர லேட்'' என்றாள் குனிந்தவாறே. ''என்ன நீ சொல்லுறாய்?'' என்றேன். சத்தமான என் குரல் கேட்டு 'டைப்பிஸ்ட்' ஒரு தடவை தன் வேலையை நிறுத்திப் பின், தொடர்ந்தாள். ''எனக்கும் என்னோடை போய்பிரண்டிற் கும் வர்ற சண்டே சிம்பிளா 'என்கேஜ்மெண்ட்' நடக்க இருக்கு எண்டு சொன்னன்'' என்றாள். ''இதை ஏன் இவ்வளவு நாளும் எனக்குச் சொல் லேல்லை?'' என்று கேட்டேன். ''எதையும் முடிவானதுக்கு அப்புறம்தானே சொல்லவேணும்? அதுதான் இண்டைக்கு முதன்முதலா உங்களுக்கு சொல் லுறன்'' என்றாள் என்னைப் பார்த்தவாறே.

அப்ப நான் சொல்ல நினைத்தது...? நான் சொல்லத் துடித்தது...? அதற்கு இனி அவசியமே இல்லை!

''ஓகே... நீங்க என்ன சொல்ல வந்தீங்க? அவளது குரல் என்னை நினைவுக்குக் கொண்டு வந்தது. 'அது... அது... எனக்கும் என்ரை கசின் சாந் திக்கும் மே மாசம் இருபத்தைந்தாம் திகதி 'றிஜிஸ்ரேஷன்' நடக்க இருக்கு. அதைத்தான் 'அட்வான்ஸ்' ஆகவே உனக்குச் சொல்ல நினைச்சன்' என்ற உண் மையை நான் சொல்ல நினைத்தாலும் எதையுமே கூறாது, கூற வேண்டிய அவசியங்கள் ஏதும் இல்லாது புரட்டிக்கொண்டிருந்த புதிய 'பைலை' எடுத்து அவள் முன்னால் போட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு 'கப் ரீயை' செந்தில் கொண்டு வந்து என் மேசை மீது வைத்துச் சென்றான். ''என்ன சொல்லுங்களேன்!'' என்றாள், கால்களை நிலத்தில் அடித்தவாறே.

''ஆறேழு மாதங்களுக்கு முந்தி நாங்கள் கொள்முதல் செய்த பொருளொன்றை நீ 'விக்ஸ்ட் அசெட்ஸ்' ஆகப் பற்று வைச்சாயோ எண்டு நான் போட்ட கணக்குத்தான் தப்பாயிட்டுது. நீ அதை 'கறண்ட் அசெட்ஸ்' ஆகச் சரியாத்தான் பற்று வைச்சிருக்கிறாய் எண்டு இப்ப இந்த 'பைலைப்' புரட்டின போதுதான் எனக்குப் புரியுது... ஒரு நிம்மதியாவும் இருக்கு!'' என்றேன் நான். புருவத்தை உயர்த்தியவாறே, ''என்ன நீங்கள் சொல்லுறீங்க?'' என்று கேட்டாள்.

''ஒரு முறைதான் சொல்ல முடியும். நீ ஒரு 'குவாலிபைட் புக்கீப்பர்' எண்ட முறையிலை புரிஞ்சாப் புரிஞ்சு கொள்'' என்றவாறே தேநீர்க் குவளையைக் காலியாக்குகிறேன்.

''அட் லீஸ்ட் நீங்க சொன்ன 'என்றியை' 'லெட்ஜரிலை'யாவது காட்டுங்களன்'' என்றாள். ''ஐ ஆம் வெறி சொறி மைடியர். இது லெட்ஜருக்கு வராத டபிள் என்றி'' என்று நான் சொன்ன போது, முன்னால் வெளிச்சம் தெரிந்தது. தனது அறை 'ரியூப்' லைட்டைப் போட்டுவிட்டு 'பொஸ்' தான் தனது இருக்கையில் அமர்ந்து கொள்கிறார்.

''ரீயைக் குடிச்சிட்டு நீ ஸ்ரேட்மண்டைப் பிறிப்பயர் பண்ணு. நான் பொஸ்ஸை ஒருக்கா பார்த்திட்டு வாறன்'' என்ற போது, ''இந்த 'ஸ்ரேட்மெண்டிற்கு' இப்ப என்ன அவசரம்? வழமையாக இருபது இருபத்தைந்தாந் தேதிகளிலைதானே 'பிறிப்பயர்' பண்ணிக் குடுப்பன்... ஏன் இந்த மாசம் இப்பவே கேக்கிறீங்க?'' என்றாள் வியர்க்கும் முகத்தை கைக்குட்டையால் துடைத்தவாறே.

''எதையும் முன்னரே செய்துவைச்சிட்டா அல்லது சொல்லி வைச்சிட்டால்... தப்பான கணக்குகள் உருவாக ஏது இருக்காது இல்லையா?'' என்றேன்.

''புரியாத ஆள் தான். போங்க நீங்க'' என்றவள் புதிய 'பைலைத்' திறந்து, அமைதியாகத் தன் வேலையை ஆரம்பித்தாள்.

'நான் மட்டுமா?' என்று சொல்ல நினைத்தாலும் எதையுமே கூறாது, கையொப்பமிடப்பட வேண்டிய காசோலை 'வவுச்சர்களை' எடுத்தவாறே, நான் 'பொஸ்சின்' அறைக்குச் செல்லத் தயாராகுகிறேன்.

**- வீரகேசரி வாரவெளியீடு : 1986**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் சிந்துமோ வானம்?

ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு கோவிலின் வெளிவாசல் பக்கமாக செருப்புகள் வைத்த இடத்திற்கு வந்தபோது தான் என் பெயரை அழைத்த வாறே தூரத்தே எவரோ ஓடி வருவதை என்னால் அவதானிக்க முடிந்தது.

''எட சீலன்! கனகாலத்துக்குப் பிறகு'' அண்மித்தவனைப் பார்த்துக் கூறியவாறே செருப்புக்களைத் தேடிப்பிடித்து காலில் மாட்டிக் கொள்கிறேன்.

''உள் வீதியிலையே உன்னை நான் கண்டுட்டன். நீ கும்பிட்டு முடியக் கதைப்பம் எண்டிருந்தன், அதுக்கிடையிலை வெளிவீதிக்கு வந்திட்டாய்'' மூச்சிரைக்க சீலன் கூறுகிறான்.

''இவ்வளவு காலமா நீ எங்கை இருந்தனீ?'' அவனது தோளில் கையைப் போட்டவாறே நான் கேட்கிறேன்.

''எயிற்றித் திறீ றயிற்ஸ்சோடை சவுதிக்குப் போய் போனமாதம்தான் திரும்பி வந்தனான்.''

''ஓ! அப்ப நீ அதிஷ்டசாலி தான். இப்ப சில வருஷங்களா நாங்கள் பட்ட துன்ப துயரங்கள் எல்லாம் உனக்கு செய்திகளாகத்தான் அங்கை வந்திருக்கும். இலங்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் எல்லாத்தையும் நீ 'ரெலிவிஷனிலை' தான் பார்த்திருப்பாய்.''

''இன்னும் உன்ரை சில குணங்கள் மாறேலை வேலோன்.''

''கொண்டு பிறந்த கொள்கையும் குணங்களும் கட்டையிலை போகுமட்டும் மாறாது சீலன்.''

''நீ என்ன என்னை 'றோட்டுக்கு' கூட்டிக்கொண்டு போறாய் போலை?'' வாசலை அண்மித்துக் கொண்டிருந்த போது சீலன் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிறகுமென்ன கோயிலுக்குள்ளேயே தஞ்சம்? அந்த நிலை இப்ப எங்கடை சொந்த ஊர்களிலே தான்.''

''நிகழ்காலங்களை பற்றி நீ சொல்லுகிறாய். என்ரை நிலையைப் பற்றி நான் சொல்லுறன். கோயிலுக்குள்ளை அம்மாவும், 'சிஸ்ரேசும்' நிற்கினம். கொஞ்சம் பொறு. அவையளும் வரட்டும்.''

''அப்ப குடும்பமே கொழும்பிலை தானோ?''

''இரண்டு 'சிஸ்ரேஸ்' இங்கை 'வேக்' பண்ணுகினம். அதனாலை அம்மாவும் வந்து துணையாக நிக்கிறா. கொட்டகேனாவிலை 'அனெக்ஸ்' எடுத்து இருக்கிறம்.''

நடந்து சென்ற நான் வாசலோடு அமைந்த இருக்கையில் அமர்கிறேன். அருகில் சீலன் வந்து இருந்தான். கல்லூரியில் பின்னர் கணக்கியல் நிறுவகத்தில் இவன் என்னருகே இருந்த அந்த நாட்கள் மின்னலாக ஒரு கணம் மனதில் ஒளிர்ந்தது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 'அட்வான்ஸ் லெவல்' படித்தபோதே சீலனை நான் சந்தித்தேன். படிப்பு முடிந்து பின்னர் 'எக்கவுண்டன்சி' செய்வதற்காக கொழும்பிற்கு வந்த பின்பும் 'ரியூஷன்' சென்ரர்களிலும் சில நாட்கள் இவனுடன் பழகியிருக்கிறேன். படிப்பை ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளேயே கலவரம் வெடித்தது. பின்பு தொடர்புகளே இன்றி உறவுகள் விடுபட்டுப் போனது. ஐந்து வருடங்கள் கடந்து கொழும்பில், பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலில் இன்று...

''என்ன நீ செய்யிறாய்? 'எக்சாம்' ஏதாவது 'பாஸ்' பண்ணினியோ?''

''சாட்டெட்டிலை பிறிலிமினெறி பாஸ் பண்ணி இப்ப 'லைசன்சியேட்' படிக்கிறன். அத்தோடை வேலையும் பார்க்கிறன். அது சரி சவுதியிலை உன்ரை முயற்சி என்ன மாதிரி?''

''ஹொட்டேல் ஒண்டிலை 'நைற் ஓடிற்றரா' இருந்தனான் மச்சான். ஐந்து வருஷத்திலை உழைச்சதிலை ஒரு மாதிரி நல்லூரிலை இரண்டு 'சிஸ்ரேசுக்கும்' வீடுகட்டி, சின்னவளுக்கும் அத்திவாரம் போட்டுட்டன். அத்தோடை ஆளுக்கு இரண்டு லட்சம் 'பாங்கிலையும்' போட்டிருக்கிறன். இனித் திரும்பப் போய்த்தான் எச்ச சொச்சங்கள். அது சரி உன்ரை 'லைவ்' எப்பிடி, வேலோன்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்திமூன்று ஆவணியில் கொழும்புத் துறைமுகத்திலிருந்து கப்பல் ஏறிப்போய் காங்கேசன்துறை மண்ணில் காலடி வைத்தது தொட்டு எண்பத்தியேழு 'மேயில்' நடந்த வடமராட்சித் தாக்குதல் வரை என் வாழ் வில் நிகழ்ந்த மாறுதல்களை ஒன்றுமே விடாது இவனுக்கு ஒப்புவித்தேன்.

கதைகளைக் கேட்டதும் நண்பன் எனக்கு வாழ்த்துக் கூறும் தோர ணையில் கைகொடுத்தான். ''என்னடாப்பா? இன்னமும் உயிரோடை இருக் கிறதுக்கா கைகொடுக்கிறாய்?'' என்று நான் கேட்டபோது, அமைதியாகச் சிரித்தவாறே தனது சரிதையையும் சொல்ல ஆரம்பித்தான்.

கலவரத்தில் இவனது தந்தை தவறிப்போனது. அதனால் படிப் பைத் தொடர முடியாத நிலையில் தந்தையின் பொறுப்பை தான் ஏற்று அதை நிறைவு செய்யும் நோக்கிற்காக சவுதி சென்றது. இப்போ சகோதரிகளின் சங்க திகளைப் பார்க்க லீவில் வந்திருப்பது.

''இவதான் அம்மா. இது வான்மதி, இவள் பாமினி. அம்மா நான் முந்தி அடிக்கடி சொல்லுவன் புலோலிப் பொடியன் ஒண்டு என்ரை 'பிறண்ட்' எண்டு. அவன்தான் இவன்.'' பரஸ்பரம் நிகழ்ந்த அறிமுகங்களின் பின்னர் அமர்ந்திருந்த இருவரும் எழுந்து நின்றோம்.

ஆலய வளவை விட்டு வெளியேறி கொச்சிக்கடைச் சந்தியால் திரும்பி சீலனின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தோம்.

எனது தொழில் நிலவரங்கள் பற்றி சிரத்தையுடன் சீலனின் அம்மா கேட்டு அறிந்து கொண்டா. என் வயதை ஒத்த எங்களூர் பையன்கள் சிலரது பெயர்களைச் சொல்லி அவர்களது 'இனத்தவரா' நான் என்றும் வினவினா. ஓரளவிற்கு அவவிற்குத் தெரிந்த ஒரு பொடியனின் பெயரை அடிப்படையில் வைத்து என் குடும்பத்தை இனங்காட்டினேன்.

''உம்மடை 'பிறண்ட்' சீலனாலை தான் நாங்கள் இப்ப தலை நிமிர்ந்து நடக்கிறம் தம்பி! பாருமன் இந்த முறை வந்து நிக்கிறதுக்கிடையி லேயே தன்ரை சகோதரிகளின்ரை அலுவல்களையும் முடிச்சுப்போட வேணு மெண்டு வலு பிரியப்படுகிறார். கடவுளே எண்டு இதுகளை இந்த முறை கரைசேர்த்துப் போட்டாரெண்டால் இனி 'ஜவ்னாக் கம்பஸ்சிலை' படிக்கிற இளைய பொடிச்சியின்ரை அலுவல் ஒண்டுந்தானே? அதை ஆறுதலாகவும் முடிக்கலாந்தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ வாகன இரைச்சல்கள் சற்றுமே இல்லாத குச்சொழுங்கை வழியாக நாம் திரும்பிக் கொண்டிருந்தோம். பொழுது சற்று இருட்டிவிட்டிருப்பதைக் கூட இந்த ஒழுங்கைக்குள் வந்த பின்புதான் நான் உணர்ந்து கொண்டேன். குச்சொழுங்கை சிறிது தூரம் சென்றதும் ஒடையாக உருமாறிற்று. இரண்டு பக்கங்களிலும் சுவர்கள் நிமிர்ந்து நிற்க நிலத்தில் வலது பக்கமாக சாக்கடை ஒன்று நீண்டு சென்றது. சாக்கடையிலிருந்து வீசிய சிறுநீர் நெடி வயிற்றைக் குமட்ட வைத்தது.

சிவப்புத் தகரக் 'கேற்றுக்களில்' வெள்ளை இலக்கங்கள் தம்மை வெவ்வேறு வீடுகளாக வேலி போட்டுக்கொண்டு வந்தன. ஏழாம் இலக்கம் 'ஐ'ப் பிரிவு என வந்ததும் எங்கள் குழுவின் வேகம் குறைந்தது. நீண்டநேர மௌனத்தை சீலனின் அம்மாதான் முதலில் கலைத்தா. ''தம்பி, நாங்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளை போறம். நீ போய் சந்திக்கடையிலே ஒரு 'பக்கெட்' பால் வாங்கி வா. நீங்கள் இரண்டு பேரும் போனால் இப்போதைக்கு வரமாட்டியள். இவர் நிக்கட்டும். நீ மட்டும் போட்டு ஓடிவா.''

'கேற்றைத்' திறந்து உள்ளே நுழைகிறோம். வாசல் கதவையும் திறந்தபோது தான் அந்த 'அனெக்ஸ்' தன் அழகை அள்ளிக் கொட்டியது. ஒரு பெரிய 'ஹோல்' பின்பக்கமாக அறைக்கு வழி விட்டிருந்தது. அறையின் வாசலில் அழகான திரைச்சேலை ஒன்று தொங்கிக் கொண்டிருக்க, 'ஹோலின்' வலது பக்கமாக வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. இடது புறத்தே 'சோக்கேஸ்', குளிர்சாதனப்பெட்டி, மேசை, எதிரும் புதிருமாகக் கதிரைகள். முன்பக்கத்தில் வட்டமாக நான்கு பெரிய நாற்காலிகள். நவீன ஓவியங்கள் சுவரை நிரப்ப, சுவர் ஓரங்களை 'ஒக்கிட்ஸ்'செடிகள் அலங்கரித்தன.

முன்புறமாக இருந்த ஒரு நாற்காலியில் நான் அமர்ந்து கொண்டேன். பெண்கள் அனைவரும் உள் சென்றனர். சிறிது நேரத்தின் பின் சீலனின் அம்மா வந்தா. தொடர்ந்து வந்த பாமினி மூலையில் இருந்த ரெலிவிசனை 'ஓன்' பண்ணி, சத்தத்தைச் சரி செய்துவிட்டு, மீண்டும் உள் நுழைகிறாள். 'ரி.வி.யில்' விளம்பரங்கள் போய்க் கொண்டிருந்தன.

''இவ மகள் வான்மதி. 'வெற்னறி' சேஜன்ரா மொரட்டுவவில வேலை பார்க்கிறா. இனிச் சம்பளமும் ஆறுக்கு மேலை எடுக்கிறா. நாங்கள் 'டொக்டர்', 'என்சினியர்' எண்ட 'லெவல்களிலை' எல்லாம் எதிர்பார்க்கேலை. உமக்குத் தெரிஞ்ச இடமேதாவது இருந்தால்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மூளைக்குள் 'சட்டென' எந்த இடமும் தட்டுப்படவே இல்லை. எனது வயதை ஒத்தவர்கள் இவவுக்கு தோதுவராது. இனி என்னை விட சற்று வயதில் கூடிய பலரும் குடியும், குடித்தனமுமாக இருப்பவர்கள். எஞ்சியிருப்பவர்கள் சிலருக்கும் அசைய முடியாத குடும்பப் பொறுப்பு. இந்த லட்சணத்தில் நான் யாரை என சிபார்சு செய்வது?

எதையுமே சொல்ல முடியாதவனாக நான் இருந்தபோது, திரைச்சேலையை விலக்கியவாறே தட்டில் பிஸ்கட், பழங்கள் சகிதம் பாமினி வந்தாள். என் அருகிலிருந்த மேசையில் அவற்றை வைத்த போது ரி.வி.யில் அடுத்த விளம்பரம் ஒளிர்ந்தது.

''இவ சீலனுக்கு நாலு வயது இளையவ. 'கொம்பனி'யில 'எக்கவுண்ஸ்' கிளார்க்கா வேலை பார்க்கிறா. அத்தோடை இப்பத்தான் 'ஏ.ஏ.ரி.' எண்டு 'எக்கவுண்டன்சி கோஸ்' செய்ய ஆரம்பிச்சிருக்கா. 'அட்வான்ஸ் லெவலிலை' கொமேஸ் செய்ததாலை முதலாவது சோதனை எடுக்கத்தேவையில்லையாம். இப்ப இரண்டாவது சோதனைக்கு 'அப்பிளை' பண்ணியிருக்கிறா. 'எக்கவுண்சிலை' கொஞ்சம் கஷ்ரப்படுகிறாள் தம்பி. நீர் 'சாட்டெட்' தானே செய்யிறீர்! முடிஞ்சால் இடையிடை வந்து கொஞ்சம் ஹெல்ப் பண்ணுவீரோ?''

''ஓ! யேஸ் எனக்குப் 'புறபுளம்' இல்லை. ஆனால், 'எக்சாம்' வருகிற நேரங்களிலைதான் கொஞ்சம் சிரமமாக இருக்கும். மற்றபடி வந்து சொல்லிக் குடுக்கிறன்.'' நான் சொன்னதை உள்வாங்கிய பாமினி ஒரு புன்சிரிப்புடன் உள்சென்று விடுகிறாள். வலது பக்க மூலையிலிருந்த மின் விசிறி திடீரென சுழல ஆரம்பிக்கிறது. அப்போ சீலன் உள் நுழைந்தான். சிகரெட் நெடி அவனில் 'குப்பென' வீசிற்று. ''அம்மா பக்கட் பால் முடிஞ்சு போச்சுதாம்.''

''பரவாயில்லை. நேற்று உடைச்ச 'ரின் மில்க்' பிறிச்சுக்குள்ள கிடக்கு. நான் போய் 'ரீ' போட்டுக்கொண்டு வாறன். நீ உன்ரை 'பிறண்டோடை' கதைச்சுக் கொண்டிரு. ஏன் தம்பி, நீர் 'பிஸ்கட்' எடுக்கலையே? பழங்களும் இருக்கு. பார்த்து எடும்.''

''ஓ, எடுப்பம்... என்ன அவசரம்?''

சீலன் மீண்டும் கதைக்க ஆரம்பித்தான். எனது மட்டுப்படுத்திய வருமானத்தை வைத்து நான் வாழ்க்கை நடத்தும் விதம் இவனுக்கு வியப்பாக இருந்தது. இவனது வெளிநாட்டுப் பார்வையில் இது வில்லங்கமான விடயந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடாப்பா வேலோன்? 'கொலிச்சிலை' எங்களோடை படிச்ச ஒரு பொடியங்களையுமே இப்ப கொழும்பிலை காணேலை? கட்டை ரவி, சடையப்பன், சிங்கன், முத்துலிங்கன், மூத்தண்ணன், தவத்தான், ஏ.ஆர்.வி. எண்ட எங்கடை 'கிளிக்கையே' காணக் கிடைக்குதில்லையே!''

''ஒருத்தருமே இப்ப இங்கை இல்லை சீலன். இயக்கமெண்டு கொஞ்சப்பேர் போனாங்கள். வெளிநாட்டுக்கு சிலர் பறந்தாங்கள். கலவரங்களிலை சிலர் காணாமல்போயிட்டாங்கள். இப்ப என்னைப் போல ஒண்டு, ரெண்டு பேர்தான் மிஞ்சியிருக்கிறம். மேலும் நாங்களும் இருக்கப்போகிறதும் எத்தனை நாளைக்கெண்டதை நிச்சயமாக சொல்ல முடியாது. ஒரு வேளை நீ அடுத்த தடவை வரக்குள்ளை நான் கூட இல்லாமல் போய்விடலாம் சீலன்.''

''ஏன் வேலோன், அப்பிடி விரக்தியாகச் சொல்லுறாய்? அதுபோக நீயும் ஏன் வெளிநாடு போக 'றை' பண்ணக்கூடாது?''

''அதுக்குப் பல காரணங்கள் சீலன். ஆறு, ஏழு எண்டு கட்டி அக திகளா வெளிநாட்டுக்குப் போறளவிற்கு எனக்கு வசதியில்லை. சவுதிப்பக்கம் போகிறது பற்றியதும் இன்னமும் தீர்மானிக்கேல்லை. கொஞ்சநாள் போகட்டும் பார்ப்பம். அதுசரி உன்ரை 'சிஸ்ரேசின்ரை' பிரச்சினைகளை எப்படி நீ 'ரைகிள்' பண்ணப் போகிறாய்?

''நானும் சிலோனுக்கு வந்து இண்டையோடை மூண்டு கிழமை முடியுது. சம்மந்தம் ஒண்டுதானும் பொருந்தி வருகுதில்லை. கடைசி வான்மதியின்ரை விஷயத்தையாவது முடிப்பமெண்டு பார்த்தால், வாற 'புறப்போசல்கள்' எல்லாம் பாதியோட போயிடுது.''

''ஏன் என்ன பிரச்சனை?''

''சாதி, சாதகம், பதவி, அந்தஸ்து எண்டு நாங்களே 'கிறியேற்' பண்ணுகிற பிரச்சினைகள் தான். கலியாணத்தை முடிச்சு வைக்க வேண்டுமெண்டு அவசரங் காட்டுகிறாவே தவிர, அம்மா இன்னும் பழைய நுணுக்கங்களை கைவிடுகிறாவே இல்லை'' என்று சீலன் சொன்ன போது, சற்றே செருமியபடி தாயார் வந்து எதிரில் அமர்ந்தா.

'சட்டென' சீலன் எழுந்து உள்ளே செல்ல, தாயார் கதையை ஆரம்பித்தா. ''தம்பி என்ன கடைச்சாப்பாடுதானே? ஆளைப் பார்க்கத் தெரியுது. நாளைக்கு நீர் 'பிறீ' தானே? மத்தியானம் 'லஞ்சுக்கு' வாருமன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை மறைத்த படி என் முன் பாமினி வந்தபோது சற்று நிமிர்ந்து பார்த்தேன். முகத்தில் புன்சிரிப்பும், கைகளில் தேநீர்க் குவளையும் பரிமாறிற்று.

தாய்க்குப் பதில் சொல்ல நான் வாயெடுத்த போது, சிகரெட்டும் கையுமாக இருமியபடி சீலன் உள்ளிருந்து வந்தான். 'ரி.வி.'யில் நிகழ்ச்சி ஒன்று மாறிக்கொண்டிருந்தது.

''அம்மா, நான் அப்போ சொல்லவே மறந்துபோனன். இவனுக்கு போன மாதம் ஒரு பெண் குழந்தை கிடைச்சிருக்கு. மீரா எண்டு பெயர் வைச்சிருக்கிறான். தொடக்கு கழிய குழந்தையை கோயிலுக்குக் கொண்டுபோகவேணுமாம். முப்பத்தொண்டுக்கும் போகேலாமல் போச்சுதாம். இரண்டுக்கும் பொதுவா நாளைக்கு காலமை ஊருக்குப் போகிறானாம்.''

சிரிப்பும் கதையுமாக இருந்த சீலனின் அம்மாவின் முகம் திடீரென 'சீரியசான' பாவம் காட்டிற்று. ஒரு சில விநாடிகள் மௌனம். பின் வார்த்தைகளைக் கூட்டி கதைக்க ஆரம்பித்தா. வார்த்தைகளில் ஒரு தொய்வு தெரிந்தது. ''எட உமக்கு 'வெடிங்' முடிஞ்சுதே? அப்ப உன்ரை 'பிறண்ட்' பெரியாள் தான் சீலன்.''

''சாந்தி எண்டு ஒண்டுவிட்ட தாய்மாமன்ரை மகளைத்தான் 'மறி' பண்ணியிருக்கிறானாம். வடமராட்சி 'அற்றாக்குள்ளை' தான் ஆளுக்கு 'வெடிங்' நடந்ததாம். கலியாண வீடு நடந்த அடுத்த நாளே 'பங்கருக்குள்ளை' போக வேண்டி வந்துட்டுதாம்.'' சொல்லியவாறே சீலன் சிரித்தான். ஆனால், தாயோ பாமினியோ அதை ரசிக்கவில்லை. மூலையில் ஒளிர்ந்த 'ரெலிவிஷனை' 'ஒவ்' பண்ணிவிட்டு தாய் உள்ளே சென்றா. தொடர்ந்து பாமினியும் சென்றாள். சற்று நேரத்தில் சுழன்று கொண்டிருந்த மின்விசிறியும் ஓய்வுக்கு வருகிறது.

''போறதுக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கு வேலோன். அதுக்கிடையிலை வான்மதியின்ரை விஷயத்தை எப்படித்தான் ஒப்பேற்றப் போகிறேனோ?'' அமைதியைக் கலைத்தவாறே சீலன் தான் ஆரம்பித்தான். சிகரெட் புகை வளையம், வளையமாக வெளிவந்தது.

''கறண்ட் 'புறபுளம்' இதுதான் மச்சான். வீடு 'ரெடி', 'டவுரி டொனேசன் ரெடி', காணி பூமி நகை நட்டு எல்லாமே 'ரெடி'. ஆனால் மாப்பிள்ளை தான் இல்லை. பொடியங்களின்ரை பற்றாக்குறையை நிகழ்ந்துபோன அழிவுகளை இப்பத்தான் புரியமுடியுது சீலன்.'' காலியான தேநீர்க் குவளையை மேசையில் வைத்து விட்டு, சீலனின் முகத்தைப் பார்த்தவாறே நான் நிமிருகிறேன். இப்போ சற்று புழுங்க ஆரம்பிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திரைகடலோடி எல்லாம் திரவியங்களைத் தேடிக் கொள்ள முடியுது. பொருளாதாரம், வசதிகளையெல்லாம் பெருக்கிக் கொள்ள முடியுது. ஆனால், எங்களாலை அக்கா தங்கைகளுக்கு ஏற்ற மாப்பிள்ளைகளைத் தேடிக்கொள்ளே லாமல் இருக்கே?'' நீண்ட பெருமூச்சொன்றுடன் சீலன் சொல்கிறான்.

''எங்கடை சமூகத்திலை வந்திருக்கிற இந்தச் சாபக்கேட்டிற்கெல் லாம் ஆர் சீலன் காரணம்? இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவு ஆருடைய கையிலை தங்கியிருக்கு?''

எதையும் பேசாமல் சீலன் எழுந்து உள் சென்று இன்னொரு சிகரெட் டினைப் பற்ற வைத்தபடி வருகிறான். மூலையில் கிடந்த 'கசெற் றெக்கோடர்' இப்போ இவனால் இயங்க ஆரம்பிக்கிறது.

''பழங்கள் எல்லாம் அப்பிடியே இருக்கு. நீ 'ரச்' பண்ணவே இல்லை போலை கிடக்கு'' என்று கேட்டவாறே, சீலன் இப்போ என்னருகே கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்து கொள்கிறான்.

''பரவாயில்லை. இப்ப இதுகளை எடுத்தால் பிறகு இரவைக்குச் சாப்பிடேலாது, மச்சான்.''

'ரேப்பில்' மேளக் கச்சேரி ஒன்று மெதுவான சத்தத்தில் போய்க் கொண்டிருந்தது. என் குடும்ப வாழ்க்கை பற்றி, எதிர்காலத் திட்டங்கள் பற்றி நாம் மனம் விட்டு கதைத்துக்கொண்டிருந்தோம். உள்ளிருந்து சமையல் வாசனை இதமானதாக வெளி வந்து கொண்டிருந்தது..

''உன்ரை 'மறேச்' என்ன மாதிரி சீலன்?''

''உனக்கு விளக்குமாறு காவின மூஞ்சூறுவின்ரை கதை தெரியுந் தானே?'' கேட்டவாறே சீலன் சிரித்தான்.

''தம்பி, நீர் இங்கை எங்கை இருக்கிறனீர்?'' திரைச்சேலையை விலக்கியவாறே தாயார் வந்தா. இப்போ உள்ளிருந்து வந்த பொரியல் மணம் மூக்கைத் துளைத்தது.

''வெள்ளவத்தையிலை.''

''பிறகேன் மினக்கெடுறீர்? இந்த நாளையிலை வேளை காலை யோடை வீட்டுக்குப் போயிட்டால் வீணான பிரச்சனைகளைத் தவிர்த் துக்கொள்ளலாம். மற்றது நீர் வெள்ளவத்தையிலிருந்து இஞ்சை வந்து போறது உமக்கும் சிரமமாயிருக்கும். அதோடை நீரும் 'எக்சாம்' எடுக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னீர். இவ பாமினி தான் 'கிளாஸ்மேற்றோடை' 'கொம்பயின் ஸ்ரடி' போட்டு 'மனேஜ்' பண்ணுகிறாவாம்.''

''அப்ப சரி... நான் போயிட்டு வாறன்.'' எழுந்தவாறே நான் சொல்கிறேன்.

''இரு சாப்பிட்டுட்டுப் போகலாம்.'' என்றவாறே சீலன் தாயைப் பார்த்தான். ''ஓம்... உமக்காகத்தான் இவ்வளவு அவசரப்பட்டு சமையல் முடிச்சனாங்கள். சாப்பிட்டுட்டுப் போம்.'' வார்த்தைகள் இழுபட்டன.

''நான் வரக்குள்ளை 'றூம் மேற்' ரஞ்சித்திட்டை எனக்கும் 'டினர்' எடுத்து வைக்கச் சொல்லிப் போட்டு வந்தனான். அது வீணாப் போயிடும். பிறகு ஒரு நாளைக்கு வாறன்.'' சொல்லியவாறே நான் வாசல் கதவைத் தாண்டுகிறேன்.

''ஊருக்குப் போய் நீ எப்ப திரும்புகிறாய்?'' வாசலைத் தாண்டி வந்து சீலன் வினவினான்.

''அடிக்கடி பிரயாணம் பண்ணுறதாலை அதிக நாட்கள் அங்கை நிக்கேலாது. அடுத்த கிழமைக்குள்ளை திரும்பி விடுவன்'' மழை மெதுவாகத் தூறிக் கொண்டிருந்தது.

''அப்ப இனி அடுத்த சந்திப்பு எப்ப?''

''இனி நீ வெள்ளவத்தைப் பக்கம் வந்தால் என்ரை 'றூமுக்கும்' ஒருக்கால் வந்து போவன்'' என்று சொன்னபடி எனது முகவரியைக் கூறுகிறேன்.

மழைத் தூறலின் பாரம் சற்று அதிகரிக்கவே 'சீயூ' பரிமாறிக் கொண்டு, சீலனை விட்டு விலகுகிறேன்.

பேரிரைச்சலுடன் மழை பொழிய ஆரம்பிக்கிறது. அப்போ வெள்ளவத்தைக்கான பேருந்து ஒன்று வலு வேகமாக வந்து கொண்டிருந்தது.

**- வீரகேசரி வார வெளியீடு : 1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விடியலுக்கு முன்.....!

மினி பஸ்ஸின் வாசலில் குவிந்து நின்ற சனங்களை இடித்து, விலக்கி வெளியில் கால்களை வைத்த போது தோளில் தொங்கிய 'றவலிங் பாய்க்கை' உரசிக்கொண்டு 'உர்ர், உர்ர்' என பஸ் தன் பயணத்தைத் தொடர்ந்தது. சனநெரிசலால் விலகியிருந்த 'பெலிற்றையும்', 'றவுசரையும்' சரி செய்தவாறே கையை உயர்த்தி கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் பத்து மணியைத் தாண்டியிருந்தது. பூட்டிய கடைகள் முன்னால் பழைய பத்திரிகையை விரித்து படுத்திருந்த பிச்சைக்காரர்களில் சிலர் பஸ்ஸின் இரைச்சலால் ஒரு முறை நெளிந்து, பின் திரும்பி மறு பக்கம் படுத்துக்கொண்டனர்.

வீதியைக் கடந்து கடல் பக்கமாக நடந்தான். கிரிக்கெட்டோ, கிளித்தட்டோ விளையாடலாம் போல விளையாட்டு மைதானமாக காலி வீதி ஒரே வெளியாய் ஓய்ந்து கிடந்தது. இவன் திரும்பும் குச்சொழுங்கையின் பெயர்ப் பலகையுடன் பச்சையும், சிகப்புமாகப் பிணைந்து இருக்கும் தபால் பெட்டிகளை அரணாக்கி அரசியல்வாதிகளின் தொனியில் ஏதோ சதா பேசிக் கொண்டிருக்கும் அந்த மனநோயாளி கூட உடுத்திருந்த ஊத்தைச் சாரத்தினால் தன்னை மூடிச் சுருண்டு படுத்துவிட்டான்.

குச்சொழுங்கையில் வெளிச்சம் கொஞ்சம் குறைவாகவே இருந்தது. நிதானமாக நடந்தும் ஒரு குழியில் காலை விட்டு நிரம்பியிருந்த தண்ணீரைத் தெறிக்க வைத்து ஒரு கணம் தன் 'பலன்ஸை' இழந்து திடீரென சுதாகரித்து மீண்டும் நடக்க ஆரம்பித்தான். இன்றும் அந்திமழை தன் சேவையைச் செவ்வனே நிறைவேற்றித்தான் இருக்கிறது. இவன் தங்கியிருக்கும் வீட்டின் முன்புறத்தே கிழக்குப்பக்கமாக ஓர் அறையில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. 'கேற்' பூட்டி விட்டார்களோ? என்னவோ?

மதிலோடு கதைபேசியவாறிருந்த தொலைபேசிக் கம்பத்தைத் தேய்த்தவாறே வேகமாகச் சென்று 'கேற்றில்' கை வைத்தான். நல்லவேளை, 'கேற்' பூட்டப்படாது இன்னும் கொழுவித்தான் இருந்தது. ஓசைபடாது கொழுக்கியை எடுத்து உள்நுழைந்து மீண்டும் கொழுவும் போது இவனையும் மீறி 'டொங்' எனச் சத்தம் கேட்டது. வாசலில் சுருண்டு படுத்திருந்த 'றெக்சி' திடீரென எழுந்து இவனை உச்சிமுதல் கால்வரை பார்த்துவிட்டு கழுத்தைத் திருப்பி, உடலை ஒருமுறை உதறி மீண்டும் முடங்கிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னறையில் இருந்து 'நியூஸ்பேப்பரும்', மூக்குக் கண்ணாடியுமாக ஓடிவந்த முதியவர் 'எட வேலோனே?' என்று விட்டு, கொஞ்ச நேர இடைவெளியின் பின், ''பஸ்ஸோ, றெயினோ'' என்று கேட்டார். ''வவுனியா பஸ் கனகராஜன் குளத்தடியிலை 'செக்கிங்' காலை கொஞ்சம் 'டிலேயாப்' போச்சு. 'றெயினை' 'மிஸ்' பண்ணிட்டன். பிறகு அநுராதபுரத்துக்கு வந்து 'பஸ்ஸிலை' தான் வாறன்'' எனப் பாடமாக்கி வைத்த தேவாரமாக வார்த்தைகளை ஒப்புவித்துவிட்டு பதிலுக்காகப் பார்த்திராதவனாக ஓடைப்புறத்தால் பின் வாசல் நோக்கி நகர்ந்தான்.

இப்போ 'றூம்மேற்' ரஞ்சித் என்ன செய்கிறானோ? 'லங்கா புவத்தின்' ஆதார செய்திகளையும், பீ.பீ.சி.யையும் கேட்டு விட்டு யாழ்ப்பாணத்திலுள்ள தனது தாயாருக்கோ, அல்லது வேறு 'எவருக்காவதோ' கடிதம் எழுதிக்கொண்டிருக்கலாம். இல்லாவிடின் வானொலி ஒரு பக்கமாக சீர்காழியின் குரலிலோ, அல்லது பெங்களூரின் குரலிலோ இரைந்துகொண்டிருக்க மறு பக்கமாக வளைந்து, குறட்டை விட்டுக் கொண்டிருக்கலாம்.

ஓடையால் மிதந்து பின் புறத்தை அடைந்தான். 'றூமில்' இன்னும் 'லைட்' எரிவதை கதவின் கீழ் இடைவெளி வீட்டுக்காரனுக்குக் கோள் சொல்லிக்கொண்டிருந்தது. 'மச்சான், இன்னும் படுக்கேல்லை!' என்று நினைத்தவனாக, மெலிதாக கதவில் 'டொக் டொக்' எனச் செய்தான். ரஞ்சித் குதித்தெழுந்ததால் கட்டில் ராகமிசைத்தது. உள்புற பூட்டை அழுத்தித் திறந்து கதவை இழுத்தான். உதறியபடி கதவு 'ஆ' வெனத் திறந்து கொண்டது. 'லபக்' என உள் நுழைந்தவன் கதவைச் சாத்தியவாறே, ரஞ்சித்தின் முகத்தைப் பார்த்தான்.

''வருக! வருக! சாந்திமணாளனே வருக! என்ன புதன்கிழமை வேலைக்கு வாறனென்டுட்டுப் போனாய் இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமையுமாச்சு...'' கையில் வைத்திருந்த குமுதத்தையோ, விகடனையோ தனது மேசையில் போட்டவாறே ரஞ்சித் கேட்டான்.

''என்னடாப்பா செய்யிறது? ஹர்த்தால், கடையடைப்பு எண்டு ரண்டு நாள் கழிஞ்சுது. 'கேவியூ' போட்டு 'றவுண்ட்டப்' பண்ணி கலாதிப் படுத்தினதிலை ரண்டு நாள் வெளிக்கிடேலாமல் போச்சுது. இண்டைக்குத் தான் ஓரளவுக்காவது நகர முடிஞ்சுது!'' 'ரவலிங் பாய்க்'கை கட்டிலில் 'தொம்' மென' வைத்தவன், தனது மேசை மீதிருந்த கடிதங்கள் மீது பார்வையைத் திருப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒவ்வீசிலை இருந்து உனக்கு 'ரெலிகிறாம்' வந்திருந்தது, வேலைக்கு வரச் சொல்லி. 'சிக் பெக் லீவ்' எண்டு வழமை போலை உன்ரை 'பொஸ்' சில்வாவுக்கு 'றிப்ளை' பண்ணியிருக்கிறன்.''

''எங்கடை பிரச்சினைகள், கஷ்ரங்கள் அவங்களுக்கு எங்கை விளங்கப் போகுது? ஏதோ வேணுமெண்டு அங்கை படுத்துக் கிடக்கிறம் எண்ட மாதிரி அவங்களின்ரை நினைப்பு. நாட்டு நிலவரத்தை சாதகமாக்கி சீவிக்கப் பாக்கிறம் எண்ட மாதிரி ஒரு சந்தேகம்.''

''நாங்கள் இப்பிடியே 'சவர்' பண்ண வேண்டியதுதான். அது போக மகள் மீரா எப்பிடி?''

''சீ ஸ் ஒல்றயிற். உடம்பு பிரள ஆரம்பிச்சிருக்கிறாள். பத்து நாளும் அவளை மடியிலை வைச்சிருந்தது தான் உருப்படியாக நான் செய்த ஒரே வேலை.''

''அப்ப நான் நினைச்சதுக்கு மாறாக சாந்திக்கு பெரிய ஆறுதல்தான் குடுத்திட்டு வந்திருக்கிறாய்'' என்று கூறிச் சிரித்தவாறே நண்பன் இவனது மேசை விளக்கினை ஒளிரவிட்டு, அறை விளக்கினை அணைத்துவிட்டு படுக்கையில் சென்று விழுந்தான்.

வானொலியில் இனிய வயலின் இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. குன்னக்குடி வைத்தியநாதனோ அல்லது வேறொரு தமிழ்நாட்டு கலைஞனோ வாசித்ததாக இருக்கலாம்.

இவனது பார்வை மீண்டும் மேசைப் பக்கமாகத் திரும்பிற்று. மேசை விளக்கில் சிலந்தி, வலை பின்னியிருந்தது. ஒட்டடையும், தூசியும் மேசையினை மொத்தமாகக் குத்தகை எடுத்திருந்தது. சப்பாத்துத் துடைக்கும் பழைய 'பெனியனை' எடுத்து எல்லாவற்றையும் துடைத்தெடுக்க வேண்டுமெனத் தான் நினைத்தான். ஆனால், எழும்ப முடியாதவாறு தோள்மூட்டு 'விண் விண்' என வலித்தது. முதுகெலும்பு, இடுப்பு யாவும் உடைந்து விட்டதோ போன்ற ஒரு உணர்வு.

கட்டிலில் இருந்தவாறே எட்டி மேசை மீதிருந்த கடிதங்களை இழுத்தெடுத்தான். மேசை மீது படிந்திருந்த தூசியில் கோடிட்டவாறே கடிதக் கோவைகள் கட்டிலில் வந்து விழுந்தன. காரியாலயத்திலிருந்து வந்த தந்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கியின் மாதாந்தக் கூற்று, சவுதியிலிருந்து வந்த நண்பன் சீலனின் கடிதம், அந்த மாதத்துக்கான மல்லிகை இதழ், வழமையாக வரும் தாய் மாம னார் கடிதம் ஆக ஒவ்வொன்றும் தம்மை இனங்காட்டிக் கொண்டன.

வயலின் இசைக்குப் போட்டியாக ரஞ்சித் 'குர், குர்' என குறட்டை எழுப்பிக் கொண்டிருந்தான்.

போட்டிருந்த 'பெனியனும், சேர்ட்டும்' 'பிசு, பிசுப்பாக' உடலோடு ஒட்டி ஒரே அரியண்டமாக இருந்தன. பதினாறு மணித்தியால வியர்வை அல் லவா? கட்டிலை ஊன்றி மெல்லென எழுந்து, உடுப்புக்களை களைய ஆரம் பித்தான். கொடியில் தொங்கிய சாரத்தை உருவி எடுத்து, உடுத்துக் கொண் டான்.

'குளிப்பு' ஒண்டு அடிச்சால் நல்லாத்தான் இருக்கும். ஆனால் தண் ணிச் சத்தம் கேட்டு வீட்டுக்காரன் எழுந்துவிட்டால்? முகமாவது கழுவி வர லாம் என குனிந்து கட்டிலுக்கடியில் இருந்த 'சோப் கேசை' இழுத்தான்.

இழுத்த இழுவையில் 'கேஸ்' மூடி வந்து இவன் காலடியில் விழுந் தது. ஐம்பது சத நாணயமளவில், அல்லது அதற்கு சற்று குறைவானதாக மூன் று, நான்கு துண்டுகள் மட்டும் மூக்குச்சளியாக பெட்டிக்குள் இழுபட்டன. ஊருக்குப் போன போது பெட்டிக்குள் புதிதாக 'சோப்' வேண்டிப் போட வேண்டுமென எண்ணிக் கொண்டது இப்போதுதான் நினைவுக்கு வந்தது.

உடுப்புகளுக்குத் தேய்க்கும் சவர்க்காரத்தையும், கருவாடாகக் காய்ந்து வரண்டு சொந்த நிறமே தெரியாது மங்கிப்போன தனது துவாயையும் எடுத்தவாறே 'பாத்ரூம்' போனான். ஏறத்தாழ வீட்டின் எல்லா அறைகளிலி ருந்தும் 'குர், குர்' சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

'பைப்பினைத்' திறந்து விட்டு, அதன் கீழ் குந்தியிருந்தான். மெல் லிய சூடாக வந்த தண்ணீர் உடலுக்கு இதமாக இருந்தது. 'இந்தச் சத்தம் வீட் டுக்காரனுக்கு அதுதான் 'பீறிஸ்' மாத்தயாவுக்கு எங்கே கேட்கப் போகிறது?' என்ற தைரியத்தில், உடல் சூடு தணியும் மட்டும் குளித்தான். உடலில் வழுவ ழுத்த எண்ணெய் தன்மையை உப்புச் சவர்க்காரம் சுத்தமாக எடுத்திருந்தது.

மீண்டும் அறைக்கு வந்த போது வானொலி 'நமோ, நமோ' இசை த்துக் கொண்டிருந்தது. அதை 'ஓவ்' பண்ணி நண்பனின் மேசையில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு கொண்டு வந்த 'ட்ரெவலிங் பாக்கை' 'கிளியர்' பண்ணினான். மனைவி சாந்தி 'அயன்' போட்டு வைத்த இவனது உடுப்புகள், 'ஒவ்வீசாலை' வந்து 'ரீ' போட்டுக் குடிக்கைக்குள்ளே இதுகளிலையும் ஒவ்வொண்டு எடுத்தியள் எண்டால் பசியும் அடங்கும். உடம்பும் உறுதியாகும்', என்ற முன்னுரையுடன் வைக்கப்பட்ட பருத்தித்துறைவடை, பொரிவிளாங்காய், புளுக்கொடியல் பார்சல்கள், யாவற்றையும் எடுத்து உரிய இடங்களில் அடுக்கி வைத்தவன் அடியில் கிடந்த ஒரு கட்டு கடிதங்களை எடுத்து மேசையில் போட்டான். வெளிநாட்டிலிருக்கும் தனது மகனுக்காக பக்கத்து வீட்டு தங்கம் மாமி தந்த கடிதம் உட்பட கொழும்பு, பண்டாரவளை என உள்நாட்டுக்குரிய கடிதங்களுமாக ஏறத்தாழ இரண்டு டசின் அதில் இருந்தது.

வெறுமையாகி விட்ட 'ட்ரெவலிங்' பாக்கை சுவரில் நீண்டிருந்த ஆணியில் கொழுவிவிட்டு குனிந்த போது காரியாலயத்திலிருந்து வந்த தந்தி கட்டிலில் கிடந்து மீண்டும் பயம் காட்டிற்று. அதை எடுத்து கசக்கி மூலையில் போட்டதில், மனதில் 'ரென்ஷன்' கொஞ்சம் குறைந்ததைப் போல் இருந்தது.

மின்விளக்கில் தொங்கிக் கொண்டு தந்தி மீட்டிக் கொண்டிருந்த சிலந்தி வலையும் மேசையை ஒட்டி ஆக்கிரமித்திருந்த ஒட்டடை, தூசியும் மனதுக்கு என்னவோ செய்தது. ஓசைபடாது மேசைப் பொருட்களை எடுத்து கட்டிலில் வைத்து மேசையைச் சுத்தம் பண்ணி, பின்னர் கட்டிலையும் சுத்தமாக்கி பொருட்களை அடுக்கி விட்டு நிமிர்ந்த போது வீட்டின் பின்புற வாசல் பூட்டு திறபடும் சத்தம் கேட்டது. கையிலிருந்த பழைய பெனியனை சடாரென தூரத்தே போட்டுவிட்டு, எட்டி மேசை விளக்கினை அணைத்தான். இவன் எதிர்பார்த்ததை உறுதிப்படுத்துமாப் போலவே, பீறிஸ் மாத்தயாதான் காறித் துப்பும் சத்தம் வெளியில் கேட்டது.

கட்டில் மேல் மெதுவாக இருந்து பின் மெள்ள மெள்ளமாக சரிய ஆரம்பித்தான். தனக்கென காத்துக் கிடந்த கடிதங்கள், மாதத்துக்கான மல்லிகை எவற்றையுமே பிரிக்கக்கூட முடியாத தன் துர்அதிர்ஷ்டத்தை எண்ணினான். இன்னும் ஒரு பத்து நிமிடமோ, அல்லது கால் மணித்தியாலமோ அவகாசம் இருந்திருந்தால் மேலோட்டமாகவாவது சகலதையுமே பார்த்திருக்கலாம் தான். அதற்குள் இந்த வீட்டுக்காரன்?

காலி வீதி வழியே இரைந்து செல்லும் வாகனச் சத்தம் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது. காலி, மாத்தறை போன்ற வெளியிடங்களிலிருந்து கொழும்புக்கு வந்து சேரும் மினி பஸ்களாகவோ, அல்லது பொலிஸ் ஜீப்புகளாகவோ அவை இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கும்போது நேரம் பார்க்கக்கூட மறந்துபோன தன்னை நொந்துகொண்டான். நேற்று இந்நேரம் மனைவியின் அருகாமையில் உறங்கியதும், மகளுக்காக மாட்டப்பட்டிருந்த அந்த மங்கிய மின்னொளியின் அருகில் கடிகாரத்தைப் பிடித்து அடிக்கடி நேரம் பார்த்துக்கொண்டதும் நினைவுக்கு வந்தது. அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் எழுந்து சோற்றுடன், உருளைக்கிழங்குப் பிரட்டல், பருப்பு என இவனுக்குப் பிடித்தமானதெல்லாம் சமைத்து பகலுக்கும், இரவுக்குமென இரு 'பார்சல்களாக' பொலித்தீன் தாள் போட்டு பழுதுபடாதவாறெல்லாம் கட்டித் தந்த சாந்தியின் கடமை உணர்ச்சியை வியந்து கொண்டான். பத்து நாட்களும் வேலைக்குச் சாப்பாடும் மகளுக்குப் பராக்குமாக நேரம் போனதே தெரியவில்லை. உள்நாட்டில் நிகழும் பதற்ற நிகழ்வுகள் போக, உணவுக்காகவோ அன்றி வேறு எவற்றுக்காகவுமோ மனதைப் போட்டு அலைக்கழிக்க வேண்டாத சீவியம். ஆனால் இனி?

காலையில் ஆமர்வீதி சைவக் கடைகளில் ஒன்றில் நான்கு ஐந்து இடியப்பம், மத்தியானம் காரியாலயத்திற்கு வரும், 'பொல் சம்பல்', ஈரப்பலாக்காய் கறியோடு அரைவயிற்றை மட்டும் நிரப்பிக் கொள்ளும் அவிந்தது பாதி அவியாதது மீதியுமான சம்பா அரிசிச் சோறு, இரவில் பாணும் பட்டரோ முட்டையோ ஏதோ ஒன்று, இதற்குள் 'கண்டபடி' முட்டை எடாதையுங்கோ பிறசர் வரும். ரீயுக்கு சீனி குறைவாய் போடுங்கோ. பிறகு டயபிற்றிக் வந்தால் ஒண்டுஞ் செய்யேலாது! என வாரந்தவறாது கடிதங்கள் மூலம் சாந்தியின் 'அட்வைஸ்' வேறு.

வவுனியா பஸ்ஸை பிடிப்பதற்கென பருத்தித்துறை 'டிப்போவிற்கு' கொண்டு சென்று இவனைச் சேர்ப்பிப்பதற்காக, அதிகாலை ஐந்து மணிக்கு 'கேற்றடியில்' வந்து நின்று இவனது மருமகன் திரையன் சைக்கிள் 'பெல்லடித்த' போது, 'ரெடியாகி' வெளிக்கிட்டு வந்தவனை வாசல் வரை வந்து வழியனுப்புகையில், ''ஐடென்ரிக் காட்' பொக்கெற்றுக்குள்ளை தானே?'' என்ற வார்த்தையை மட்டும் சாந்தி இறுதியாகச் சொல்லிக் கொண்டாள். 'இந்த' அடையாள அட்டையிலை மூன்று உயிர் தங்கியிருக்கு என அப்போ இவன் நினைத்துக் கொண்டான்.

இன்று உடம்பு பிரட்டி எக்காளமிட்டுச் சிரித்து, முத்தந் தந்த மீரா அடுத்த முறை இவன் செல்லும் போது தவழ்ந்து வரலாம். ஒருவேளை வண்டிலை உருட்டி நடையும் பயிலலாம். கடந்த முறைக்கும், இந்த முறைக்கும் குழந்தையில் தான் எத்தனை வித்தியாசம்? இந்த வளர்ச்சி, பூரிப்பு எல்லாவற்றையுமே அடிக்கடி பார்த்து மகிழ இவனுக்குக் கொடுத்து வைக்கவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் சிறுவனாக ஊர்ப் பள்ளியில் சின்ன முதலோ, பெரிய முதலோ படித்த போது கிழமை தவறாது கொழும்பிலி ருந்து வந்து சென்ற தனது தகப்பனாரை எண்ணிக் கொண்டான் வெள்ளிக்கிழமை இரவுகளில் இடியப்பமும், முருங்கைக்காய் சொதியோ, தக்காளிப்பழக் குழம்போ சமைத்துவிட்டு அம்மா பத்து மணி வரை ஐயாவுக்காகத் தூங்கி வழிந்தது, இவன் மனதில் அந்தப் பள்ளிக்கூட நினைவுகள் மாதிரியே இன்னமும் பசுமையாக இருக்கிறது. அப்போ சனி, ஞாயிறுகளில் ஐயாவோடு தான் இவன் இருப்பான், உண்பான், உறங்குவான்.

ஆனால், இப்போ? வெள்ளி இரவு பஸ் எடுத்தால் கூட சனி பகலில் தான் ஊர் செல்ல முடிகிறது. அதற்குள் இடை வழியில் கண்ணி வெடி, ஊரடங்கு, ஹர்த்தால் என்று ஏதாவது நிகழ்ந்தால், வவுனியா ஆச்சிரமமோ, அல்லது வரணியில் யாராவது தெரிந்தவர்கள் வீடோ கதியெனக் கிடந்துவிட்டு செவ்வாயோ, புதனோ தான் வீடு செல்ல முடிகிறது. போய் அடுத்த சனியோ, ஞாயிறோ சந்தர்ப்பம் பார்த்து இங்கு வந்து சேர வழமை போல் காரியாலயத்திலிருந்து தந்தி வந்து மேசையில் கிடக்கும். இனி மூன்றோ, நான்கு மாதங்கள் பொறுத்துத் தான் அடுத்த பயணம் பற்றி அதிகாரியுடன் 'பேச்சுவார்த்தை' நடத்த முடியும். அதுவும் மனைவிக்கு உடல் நலக் குறைவென்றோ, அல்லது குழந்தைக்கு சோறுதீத்து, காது குத்து என்றோ 'காது குத்தி' சமயங்களில் அம்மா ஐயாவுக்கு வலு சீரியஸ் என்பது போல முகாரி ராகத்தில் முகத்தை வைத்திருந்து... சிவாஜி கணேசனது பழைய படங்கள் பெருமளவில் பார்த்து வைத்திருந்ததில் இவனுக்கு அதெல்லாம் அத்துபடி.

நாளைக்கு காரியாலயத்தில் நடப்பதை கூட இவனால் தீர்க்கதரிசனம் பண்ண முடிகிறது. எட்டரைக்கு மட்டுமட்டாக 'அற்றண்டென் சீற்றில்' கையெழுத்து வைத்துவிட்டு இருக்கையில் இருந்ததுமே இவனது பெயர் சத்தமாக அழைக்கப்படும். கண்ணாடிக் கதவைத் திறந்து உள்நுழைந்ததும் அதிகாரியின் கடுகடுப்பான முகம் தலைகீழாக இவன் விழித்திரையில் விழும். ''வட் ஹபன்ட் ரு யூ?'' என்பதே ஒரே கேள்வியாய் அமையும். இனி நடந்தவற்றை ஆங்கிலப்படுத்தி, அதிகாரிக்குப் புரியவைத்து, அவரது அபிப்பிராயங்களையும், 'அட்வைஸ்களையும்' 'சிவனே' எனக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு இறுதியாக, அரோகராப் பரியாரியாரின் 'மெடிக்கல் சேட்டிபிக்கட்டை சப்மிற்' பண்ணி 'லீவ் சிற்றில்' கையெழுத்தும் வாங்கி மேசைக்கு வர 'லஞ்ச் பார்சல்' இவனுக்காகக் காவலிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தான் புத்தகங்களைத் திறந்து 'அரியேஸ்' வேலை பற்றிச் சிந்திக்க வேண்டும். அவற்றினைச் செய்து முடித்து, வழமைக்குத் திரும்ப நாட்களை 'அலோக்கேற்' பண்ண வேண்டும்.

பால் விநியோகிக்கும் லொறி பெருஞ் சத்தத்துடன் காலி வீதியில் சென்று கொண்டிருந்தது. இப்போ மணி பன்னிரெண்டரையாகவோ, அல்லது ஒரு மணியாகவோ ஆகியிருக்கும். மூன்று மணிக்கெல்லாம் எழுந்து குளிக்கும் 'ஐயா' என அங்கு தங்கியிருப்பவர்களால் அழைக்கப்படும் முன்னறை முதியவர் இன்னும் கொஞ்ச நேரத்தில் 'பாத்ரூமில்' தண்ணீரை நிரப்ப தகரத்தை நிமிர்த்தலாம்.

இவனுக்கு நித்திரை இன்னும் வருவதாக இல்லை. பயணம் வந்த இரவில் இப்படிப் படுத்துப் புரண்டு சிந்திப்பதும், இனி அடுத்த பயணம் பண்ண எத்தனை கிழமைகள் செல்லுமோ என அங்கலாய்ப்பதும், திருமணமான பின் இவன் வாழ்வில் இன்றொடு பதினாறாவதோ, பதினேழாவதோ தடவையாக நிகழ்கிறது. இந்த பஸ், ரெயின் எல்லாம் ஒழுங்காக ஓடி கொடிகாமத்தில் போய் பிரதி வெள்ளி இரவுகளும் இறங்கும் நாள் வரும் போது மன அலைச்சல், உடல் அலைச்சல் இன்றி எப்படியாக நிம்மதியாக வாழலாம்? என்று கூட, சற்று மிகையான எதிர்பார்ப்புத் தான் ஆனாலும் முடிவில் இவன் எண்ணத் தவறுவதில்லை.

வடக்குத் திசையில் ஜன்னலூடே வெகு உயரத்தில் ஏதோ வெளிச்சம் தோன்றி, மறைந்தது போல இவன் உணர்ந்தான்.

'கூ... கூ...' இரவைக் கிழித்துக் கொண்டு எரிபொருள் 'ரெயினோ' சரக்கு 'ரெயினோ' ஏதோ ஒன்று தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருப்பது, மிக அண்மித்ததாகவே இப்போ இவனுக்குக் கேட்கிறது.

வடக்கில் அதே வெளிச்சம் இன்னோர் தடவை மிக அருகாமையில் தோன்றி மறைந்தது.

**- வீரகேசரி வார வெளியீடு : 1989**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழம்பூக்கள்

கடற்கரைக் காற்று பலமாக வீசிற்று.

காரியாலயக் காகிதக் கோவையினை மார்போடு அணைத்தவாறு நடந்து கொண்டிருந்தாள் மாலினி. கலைந்த கேசங்கள் அவள் முகத்தில் உருண்டு விளையாடின. உடுத்திருந்த அந்த வெள்ளைச்சேலை காற்றின் திசைக்கு ஈடுகொடுக்க முடியாது சாய்ந்து திரும்பிற்று. இயற்கையே எதிர்த் தாலும் அதில் எதிர் நீச்சலிட்டு மனதில் உறுதியாகிவிட்ட 'அந்த' முடிவின் வைராக்கியம் முகத்தில் பரிணமிக்க - காற்றைக் கிழித்தவாறே நெடுஞ் சாலை வழியே வேகமாக முன்னேறினாள் அவள்.

பொங்கியெழும் கடலலைகள் பேரிரைச்சலோடு சாலையோர மதி லில் வந்து மோதுவதைப் போல - சாலையில் நடந்தாலும் அவள் மனதில் காலையில் நடந்த அந்தச் சம்பவமே வந்து மோதிற்று. எண்ணத்தின் முதலி லேயே ஏதோவொன்று வேம்பாக 'சீ! பச்சோந்திப் பிறவி!' என்றவாறே காறி யுமிழ்ந்தாள் அவள். அந்த எச்சில் காற்றில் வட்டமிட்டவாறே அவளையே வந்து மோதிற்று.

பட்ட காலிற்தான் படும், கெட்ட குடியேதான் கெடும் - முதுமொழி சிந்தையில் மொய்க்க இன்று காலையில் மாறன் சொன்னதை முடிவில் கேட் டதை எண்ணி மனம் வெந்தாள்.

மாறன்... பச்சைக் கிளியாய், இருந்தவன். இன்று அசல் பச்சோந்தி யாகவே மாறிவிட்டான். ம்... அவன் தான் கோடீஸ்வரனாகி விட்டானே... கடந்த வாரம் தொட்டு கணக்காய்வாளனாக அந்தக் காரியாலயத்திற்கு வந்த மாறனை இன்று நேற்றல்ல. இந்த மண்ணில் 'மலர்ந்த' இருபத்தியாறு வரு ஷங்களாகவே மாலினி அறிவாள்.

காலச் சுழல்காற்று மாலினி வாழ்வின் இருபத்தியிரண்டு ஆண்டுக ளைக் கடந்து வீசிய போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

உயர் வகுப்பையும் முடித்துவிட்டு தன்னைத் தாய் தந்தையாய் நின்று வளர்த்த தாய் மாமன் நாகலிங்கத்துடன் அவள் தங்கியிருந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறன் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தான். பெற்ற ஒரே மக னையும் பட்டப்படிப்பிற்கு அனுப்பிவிட்டு நோயால் வாடிய மாறனின் தாய் தங்கம்மாவைப் பராமரிக்க உடன்பிறந்த தமக்கை, தங்கை எவருமே இல் லாததால் பக்கத்து வீட்டு மாலினியே சென்றுதவ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டது. சுவாசகாசத்தால் முற்றி அன்றாட சமையலிற்கே தங்கம்மா அவலப் பட்ட அந்த வேளையில்தான் மாலினி அல்லும் பகலும் அயல்வீட்டில் உதவி செய்யவேண்டிய காலகட்டம் உண்டானது!

மரணப்படுக்கையில் விழுந்துவிட்ட தங்கம்மாவிற்குத் தூரத்துற வொன்றில் மருமகளான மாலினி செய்யும் உதவிகள் சொந்த மருமகள் ஆற் றும் சேவையினைவிட, உயர்வாகப்பட்டது.

''பிள்ளை மாலினி!'' - எனத் தங்கம்மா காட்டும் பரிவும், ''என் னணை மாமி?'' என்ற மாலினியின் ஆறுதல் வார்த்தையும் சங்கமித்து ஏதோ ஓர்வித உணர்வைத் தங்கம்மாவிற்கு ஏற்படுத்தியபோது விடுமுறைக்காக வீட் டுக்கு வந்த மாறனிடம் தங்கம்மா, கூறினாள்.

''மோனை எனக்கும் காலம் கிட்டிட்டுது... இண்டைக்கோ... நாளைக்கோ... எண்டிருக்கிறன்... அதுக்கு முன்னாலை... என்ர மனதிலை... கொஞ்சநாளா ஒரு ஆசை... படிச்சு முடிஞ்சு உத்தியோகமானாப் போலை... நீ அதை நிறைவேற்றி வைக்கோணும் மோனை...''

பாயில் படுத்திருந்த தங்கம்மா மகனின் கைத்தாங்கலோடு மால்கப் பில் சாய்ந்தவாறே கூறினாள்.

''என்னம்மா...? பேய்க்கதை கதைக்கிறாய்? உனக்கொண்டு மில்லை... பேசாமல் படுத்திரு...''

''என்னடாமோனை...? என்ரை நிலைமை எனக்குத் தெரியாதே? கதையை விட்டுட்டு... இதைக் கேள்... உவள்...? உங்கால் வளவில் மாலினி யைப் பற்றி... நீ... என்ன... நினைக்கிறாய்...?'' இருமிக்களைத்தவள் எச்சிலை அருகிலிருந்த மண்சிரட்டைக்குள் துப்பிவிட்டுச் செருமியவாறே கேட்டாள்.

''நான் என்னம்மா நினைக்கிறது? அவளைப் பற்றி...! பெத்தமக ளைப் போல இத்தனை கஷ்டப்பட்டு உன்னைப் பராமரிக்கிறாள்... வேளா வேளைக்குப் பத்தியம் மருந்தெண்டு தந்து எவ்வளவு கஷ்டப்படுகிறாள் பாவம்! அவளுக்கு நாங்களென்ன கைமாறுதான் செய்யப்போறமோ?'' உக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய கிடுகுத்துவாரத்தூடு தாயின் காலடியில் விழும் ஒளிக்கதிரை வெறித்துப் பார்த்தவாறே மாறன் கூறினான்.

''அதுதான்ரா மோனை நானும் யோசிச்சனான்... அந்தப் பொடிச் சியை இனியும் அந்தரிக்க விடுறது எங்களுக்கு அவ்வளவு நல்லாயில்லை. உன்ரை படிப்பு... முடிஞ்சாப்போலை அந்தப் பொடிச்சியை''

''அம்மா...!''

''ஓமடா மோனை பொடிச்சி என்ன லட்சணத்தாலை குறைச்சலோ, படிச்சதாலை குறைவோ? போதாக்குறைக்கு சமையல் தையலெண்டு... முப் பத்திரண்டும் பழகியிருக்கிறாள்... வலு பண்பான பொடிச்சி...!''

மாறனின் மௌனத்தைச் சம்மதமாக்கி தங்கம்மா, தொடர்கிறாள்.

''வீடு வாசல் காணிபூமி எதுவுமே இல்லையெண்டு... யோசிக் காதை மோனை...! பொடிச்சி குடியிருக்கிற அந்த ஒரு பரப்பு நிலத்தோடை உன்ரை முதுச வளவு இது கிடக்குத்தானே ராசா..... லச்சக்கணக்கிலை உனக்கு... நீ படிச்ச படிப்புக்கு... சீதனம் கிடைக்கலாம். ஆனால் இப்பிடி லட் சணமானவளா அமையாது ராசா! நகை நட்டு எண்டு நீ அங்கலாய்க்கலாம். ஆனால் அந்தப் பொடிச்சியே ஒரு தங்கப் பவுணடா! எந்தப் பிறப்பெடுத்தா லும்... இப்பிடி ஒரு பொம்பிளை அதுவும் சொந்தத்திலை எடுக்கிறது வலுக யிட்டம் மோனை'' - 'மூச்சுக் குறைந்தாலும்', மூச்சு விடாது தங்கம்மா கூறி முடித்தாள்.

''எல்லாம் படிப்பு முடிஞ்சதுக்குப் பிறகு யோசிக்கலாமணை... இப்ப என்ன அவசரம்...? பிறகு எல்லாத்தையும் நீதானே நிண்டு நடத்தி வைக்கப்போறாய்... பிறகென்ன?'' - காது பஞ்சடைந்திருந்தாலும் மாறன் கூறியதைத் தெளிவாய் விளங்கிய தங்கம்மா 'அம்மாளாத்தை' என ஆறுதல் கொண்டாள்.

விடுமுறை முடிந்து கலாசாலை சென்ற இரண்டாம் நாளே மாற னிற்கு அந்த அதிர்ச்சி காத்திருந்தது. தந்தைக்குத் தந்தையாகத் தாய்க்குத் தாயாக நின்று இருபத்திநான்கு ஆண்டுகளாக கருப்பனீர் காய்ச்சி, அப்பம் சுட்டு விற்று, மாடாடு வளர்த்து, மாடாயுழைத்து, அந்த வருவாயில் அவனை வளர்த்த அந்தத் தீபம் அணையாவிளக்கான அந்தச் சேதி மாறனை மட்டுமல் ல... கண்களில் கரைந்த நீரினை சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி. தாய்ப்பாசமே இன்னவென்றறியாத மாலினிக்கு அவ்வுணர்வை ஏற் படுத்திய அந்தப் பாசதீபம்...

மாலினி 'கல்லூரி வீதி'யைக் கடந்து இப்போ 'பிரதான வீதி'க்கு வந்து விட்டாள்.

இரண்டாண்டுகளின் பின் பட்டப்படிப்பை முடித்து மாறன் கணக் காய்வாளனாகத் தனியார் நிறுவனம் ஒன்றில் சேர்ந்ததன் பின்னர்தான் 'அந் தப்' பிரச்சினை உருவானது. தங்கம்மாவின் ஒன்றுவிட்ட தங்கை நாகம்மா விசுவமடுவிலிருந்து வந்தபோது பிரச்சினை ஒன்று விஸ்வரூபமானது!

''தம்பி மாறன்! எனக்கொண்டும் இப்ப அவசரமில்லை! இளைய வள் குமுதினிக்கு கல்மடுவிலை ஒரு சம்பந்தம் பேசினான். இருபதினாயி ரம் இனாமெண்ட பேச்சிலைதான் கலியாண எழுத்து முடிச்சனாங்கள்..... காசை நீங்கள் ஆறுதலாத் தாருங்கோ இப்ப எங்களுக்கொண்டும் அவசர மில்லை எண்டுதான் அப்ப சொல்லிச்சனம்... இனி இடையிலை இருக்கி றாக்கள் தெரியாதே, ஆரோ கிளறிவிட்டுட்டினம் போலை! பொடியனுக்கு இம்முறை வேளாண்மையிலை நட்டம் எண்டு சாட்டுச் சொல்லி காசு வைச் சால்தான் தாலி கட்டுவமெண்டு இப்ப நிக்கினம்... உன்ரை படிப்புச் செல வுக்காக கொம்மாட்டை நான் குடுத்து வைச்சிருந்த அந்தக் காசைத்தான் நான் இப்ப கேக்கிறன்... நானும் நீ பையப்பைய உழைக்கத் தொடங்கினதுக் குப் பிறகு ஆறுதலாக் கேட்பமெண்டுதான் இருந்தனான்... ஆனால், இப்ப எனக்கு...''

''நீங்கள் சொல்லுறது எனக்கும் புரியுது... அம்மா கூட இதைப் பற் றிப் பல தடவை என்னட்டைச் சொல்லியிருக்கிறா... குஞ்சியம்மா... இப்ப நானிருக்கிற நிலைமையிலை இதெல்லாம்...''

''இப்ப நானென்ன மோனை உன்னை உழைச்சுத்தா எண்டு கேக் கிறனே? அதுவுமல்லாமல் இனி நீ உழைச்சுத் தருமட்டிலும் கல்மடுவார் காவலிருப்பினமே தம்பி? நல்ல இடமா ஒரு இடத்திலை கலியாணம் செய்து இனாமாக் கொஞ்சக் காசை வேண்டித்தாவன்...?''

'நல்ல இடத்திலை கலியாணமா? நான் உங்களுக்கு எப்பிடி அதைச் சொல்லுவன்...?' - மனதிற்குள் மாறன் கூறிக் கொண்டான்.

''விசுவமடுவுக்கு வந்த மூட்டம் வட்டிக் கடையில் விசுவலிங் கத்தார் கூட இதைப்பற்றி என்னைக் கேட்டார். அவற்றை பொடிச்சி விம லாவை... அதுதான் பொம்பிளைப் பள்ளியிலை படிப்பிக்கிறாள். அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குத் தெரியுந்தானே... அவளை உனக்குச் செய்ய அவை புரியப் படுபின. விசுவலிங்கத்தார் வளவிலை செம்பெடுக்கில் குடுத்து வைச்சி ருக்கோணும் தம்பி..... எத்தினை பேர் வலியப் போய்க் கேட்டிருக்கினந் தெரியுமே? இருபது பரப்பிலே அந்த மாடி வீடு, அத்தோடை விசுவமடு விலை இருபத்தைந்தேக்கர் வயல் நிலம், இனிப் பொடிச்சிக்கு நகை, நட் டெண்டு போக ஒரு இலட்சம் காசு... தவிர இனாமாத் தேவையெண்டாலும் ஏதாலும் தாறனெண்ட வர். அது போக விசுவருக்கும் இது ஒரு பொடிச்சி தானே.... பின்னடிக்கு கிளிநொச்சியில் வட்டிக்கடையும் உனக்குத்தானே தம்பி வந்து சேரும்! நீ என்ன சொல்லுறாய் ராசா... எத்தினை பிறப்பெடுத்தா லும் இப்பிடிக் கொழுத்த சீதனத்தோடை அதுவும் ஊருக்கை ஒரு சம்பந்தம் உனக்கு வந்து வாய்க்காது.''

பேரிரைச்சலோடு வந்த பேருந்து ஒன்று மாலினியை முந்திச் சென்றது! இப்போ, சந்திக்கு வந்துவிட்டாள் மாலினி!

''இந்தக் கலியாணம் வெறும் பூச்சாண்டி காட்டுறநிலைதான் முடி யுமெண்டு அப்பவே எனக்குத் தெரியும்... கேக்கிறதுக்கு அண்ணன், தம்பி இல்லையெண்ட துணிவோ அவருக்கு? நாய் மாதிரி செய்விச்சுப் போட்டு நடுத்தெருவிலை விட்டுட்டான் படுபாவி! தோட்டத் தறைக்கை நிக்கயிக்கை சம்பளக்காரர் கூட நையாண்டி பண்ணுறாங்கள்... சீ! எங்கையிருந்து வந்துது எங்களுக்கெண்டு இந்தச் சீலக்கேடு?'' விசயம் யாவும் முடிந்ததன் பிறகு நாக லிங்கத்தார் நாகபாம்பானார்.

''நடந்தது நடந்து போச்சு இனி நெருப்பெடுத்து என்ன பலன்? நடக் கவேண்டிய அலுவலுகளைக் கவனியுங்கோ...'' சொல்லியவாறே அடுப் படிக்குள் நுழையும் மனைவி சிவக்கொழுந்தைப் பார்த்தவாறே ''நீ என்ன நோடாலம் கொத்துறாய்? இனி எந்த முகத்தோடையப்பா ஊருக்கை படியே றிச் சம்பந்தம் கேட்பன்?'' - என்று நாகலிங்கத்தார் வெப்பியாரப்பட்டார்.

''இஞ்சாருங்கோ! இஞ்சை ஒருக்கால் வந்திட்டுப் போங்கோ ஒரு கதை!'' - அடுப்படிக்குள்ளிருந்து மனைவியின் குரல் கேட்கவே - விரக்தி தழும்ப சென்றவர் ஏதோ ஒரு விடிவினைக் கண்டவர் போல முகமலர வந் ததைப் பார்த்ததும், மாலினிக்கே பேராச்சரியமாயிருந்தது... படித்துவிட்டு, தோட்டவேலைகளில் கணவனுக்குதவி புரியும் தன் தம்பியை மாலினிக்கு மணமுடித்தழகு பார்க்க சிவக்கொழுந்து ஆசைப்பட்டாள்.

''இதுக்கு நீ என்ன சொல்லுறாய் பிள்ளை?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதிலை நான் சொல்ல என்ன மாமா இருக்கு? மாமியின்ரை... ஆசைப்படியே நடக்கட்டும்.''

ஆதவன் அவள் வாழ்வில் புத்தொளி தந்தான். ஆறு மாதங்கள்... மாலினியுடன் வாழ்ந்துவிட்டு அவளது வாழ்வில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்திய ஆதவன் பின் உழைக்கவென கப்பலேறியபோதே அவளுக்கு ஆதாரமாய் நின்ற தாய்மாமனும் இருதய நோயால் கண்ணை மூடிவிட்டார். தனி மரமாகிவிட்டவள் தன்னையும் மாமியாரையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தங்கட்காளான வேளையில் அவள் பயின்ற உயர்கல்வி அவளிற்கு உதவிற்று. கிராமத்திலிருந்து ஒன்றரைக் கட்டைகட்கு அப்பாலுள்ள பட்டணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் லிகிதராய் அவள் நியமனம் பெற்றாள்.

அவள் நெற்றியில் திலகமேற்றித் திரவியம் தேடக் கப்பலேறியவன் திரும்பியே வரமுடியாதபடி விபத்தொன்றில் சிக்கி...

ஆறிலும் சாவு! நூறிலும் சாவு! ஆறுமாத வாழ்விலும் சாவா...? மாலினி ஓலமிட்டாள்.

''உப்பிடியே இருந்து என்ன மோனை செய்யப்போறாய்? முன்னையைப் போல கந்தோருக்குப் போனால்தானே... கையிலை வாறது ஒல்லுப் போலையெண்டாலும் காலத்தை ஓட்டலாம்... அதுவுமல்லாமல் உன்ரை மனதுக்கும் ஒரு ஆறுதலாயிருக்கும் மோனை.....'' - பலரின் ஏகோபித்த அபிப்பிராயம் இது!

நடைப்பிணமானவள் சிறிது காலத்தின்பின் காரியாலயத்திற்கும் நடந்துவர ஆரம்பித்தாள்... இரண்டு வருஷங்கள்... அப்பாடா... இரண்டு யுகங்களாகக் கழிகிறது!

கன்னத்தில் கோடிட்ட கண்ணீரை கைக்குட்டையால் அவள் துடைத்துக் கொண்டாள். சந்தைவீதியால் திரும்பி அந்தக் கிராமத்துள் நுழைந்து, கோவில் வீதியை அடைந்துவிட்டாள் மாலினி. அவள் 'பட்ட' மனதில் 'நினைவுக்கொடி' படர இத்தனை தூரம் நடந்துவிட்டாளாம்... இனி வருந் தூரமா அவளிற்குச் சிரமம்?

காரியாலய விற்பனைப் பகுதியில் விற்பனையாளராக மாணிக்கன் நியமனம் பெற்றுவந்த கடந்த ஆறு மாதங்களின் பின்பு... மாணிக்கனின் 'இணை' அவளிற்குக் கிட்டிய பிறகுதான் விரக்தியின் விளிம்பில் நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினிக்கு வாழ்வில் இனமறியாத ஓர் பிடிப்பு ஏற்பட்டது. முன்னரைப் போல சகலருடனும், சரளமாகப் பழக ஆரம்பித்தாள் அவள்.

தலைப்பிரசவத்தில் தாரத்தையிழந்து தனது ஒரே குழந்தைக்குத் தானே தாயாகி நின்று வளர்க்கும் மாணிக்கனின் அந்த வாழ்வை மாலினி மட்டுமல்ல, காரியாலயத்தில் உள்ள சகலருமே வியந்தனர்.

ஆனால், கணக்காய்வாளனாக காரியாலயத்திற்கு வந்த மாறனின் போக்கு... இலட்சத்துடன் சேர்ந்துவிட்ட அவனது அலட்சியக் கேள்வி!

''அதுதான் சொல்லுறன் மாலினி... சொத்துக்களை நான் அடைஞ் சாலும் நான் எதிர்பார்த்த சொந்தத்தை, இலட்சிய மனைவியை அடையமுடி யவில்லை! என்ரை மனுஷி விமலாவோடை வாழ்க்கை நடத்த முடியாது எண்டதை பின்னாலே தான் என்னாலை உணர முடிஞ்சுது! அவளோடை வாழ்ந்தும் வாழாமல் இருக்கிறதை விட அவளை விவாகரத்து செய்து போட்டு அம்மாவின்ரை ஆசைப்படி உனக்கு வாழ்வளிக்கிறதா முடிவு செய் திருக்கிறன் மாலினி....''

'யாருக்கு வேண்டியிருக்கு நீ அளிக்கிற வாழ்வு! ச்சீ...! பச்சோந் திப் பிறவி!' - என மனதிற்குள் கூறிய மாலினி, ''உது காலம் கடந்த ஞானம். அதுவுமில்லாமல் குழந்தைப் பிள்ளைத்தனமான முடிவும் கூட'' என்று மட் டும் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

''இந்தச் சமுதாயம் பொல்லாதது! இந்த இளவயதிலையிருந்தே தனிமரமா நீ வாழ முடியாது! நீ பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டனி. சிறு வயதிலையிருந்தே அதே நான் உன்னட்டை அவதானிச்சிருக்கிறன்... அதனாலைதான் நான் உரிமையோட கேக்கிறன்... என்னுடைய குழந் தையின் நல்ல எதிர்காலத்துக்காகவாவது அவனுக்கு நீ தாயாக முடியுமா? உன்னைப் போன்றவர்கள் தான் மாலினி அவனுக்கு ஏற்ற தாய்! என்ன சொல்லுறாய் மாலினி... நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்குவா! உன் முடிவு நல்லதாய் அமையட்டும்!'' - அன்று சாப்பாட்டு மேசையில் மாணிக்கன் சொன்னது இன்று காலையில் அவள் சிந்தையில் மொய்த்தது.

மாணிக்கனை அவனது பால்ய பருவமுதலே மாலினி நன்கு அறி வாள். நாகலிங்கத்தாரின் குளங்கரை தோட்டத்தறைக்கு மிளகு கண்டு இறைப் பிற்காக தந்தை குமரேசருடன் அவன் வரும்போது பல தடவைகள் அவள் கண் டிருக்கிறாள். அவளிற்கு அது நன்றாக ஞாபகத்திலிருக்கிறது! மிளகு கன்றிற்கு தண்ணீர் மாறுவதற்காக அவளும் அன்று மாமனுடன் தோட்டத்திற்குச் சென்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தாள். தோட்டத் தறைக்குள் நல்ல வெய்யில் எறித்ததால் மாணிக்கனையும் மாலினியையும் தோட்டத்து வைரவ கோயிலில் இருத்திவிட்டு நாகலிங்கத்தார் குமரேசருடன் தறைக்குள் இறங்கிவிட்டார். 'மண் விளையாட்டு' ஆரம்பிக்கிறது. காய்ந்து போன புகையிலைக் கட்டையொன்றினை சேலைத்துண்டால் சுற்றியலங்கரித்து அதை ஓர் பாவையாக உருவகித்த பின், 'இவனுக்கு நீ அம்மா... நான் ஐயா' - மாணிக்கன் சத்தமாகச் சொன்னான்.

''குமரேசன்ரை வாலுக்கு வந்த எண்ணத்தைப் பார்!'' - அதைக் கேட்டுவிட்டு, வேலிக்கப்பால் நின்ற வட்ட விதானையார் பக்கத்தில் நின்ற மனைவிக்குக் கூறினார். பாழ்பட்ட பாகுபாடுகள் பழையவர்களுடன் போய் விட்டது. யுகம் ஒன்று பிறந்து விட்டது என்று எண்ணிய மாலினிக்கு ''நீ என்ன அவன் மாணிக்கனோடை வலு ஒற்றுமையாக் கிடக்கு. அவன் ஆரெண்டு தெரியுமே...? திடலில் குமரேசன்ரை மோனெல்லே, அவை என்ன பகுதியாக்கள் எண்டது உனக்குத் தெரியுந்தானே?'' - என்று காசாளர் சாரதா காரியாலயத்தில் இன்று கேட்டபோது ஏமாற்றதே எஞ்சியது.

'கோவில் வீதி'யின் 'முடிவிற்கே' மாலினி வந்துவிட்டாள்.

★ ★ ★

தோட்டத்து வைரவர் கோவில் அவள் கண்களில் திரையிடுகிறது. ''இவனுக்கு நீ அம்மா... நான் ஐயா!'', எப்போதோ விளையாட்டிற்கு மாணிக்கன் சொன்னது இப்போதுதான் அவள் காதுகளில் தேனாகப் பாய்கிறது! - ஏனோ கன்னம் மிளகாய்ப்பழமாகச் சிவந்தது.

படிவழியேறி மாலினி வளவிற்குள் நுழைகிறாள். மாலின் முகப்பில் தட்டியில் படர்ந்து இப்போதுதான் மலர்ந்து மணம் கமழும் மல்லிகை தன்னை வரவேற்பதைப் போன்ற ஓர் பிரமை மேலிடுகிறது அவளிற்கு. மலர்ந்த முகத்தோடு தான் உடுத்து வந்த அந்த வெள்ளைச் சேலையை மாற்றுவதற்காக மாலிற்குள் புகமுன் முற்றத்தில் அவள் கவனம் திரும்பிற்று.

பட்டமரம் என சகலராலும் கூறப்பட்ட அவளது வீட்டு முற்றத்து மகிழ மரம் புதிய பூக்களை இறைத்துப் பொலிவுடன் தரிசனம் தந்தது.

**- வீரகேசரி வாரவெளியீடு : 1981**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீறல்கள்

இப்போ நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். இந்த முடிவுக்கு வந்த பிறகு, என் மீது சில நாட்களாக நான் கொண்டிருந்த வெறுப்பும், என்னில் ஏதோ ஒன்று தொலைந்து விட்டதான என் உணர்வும் மறைந்தே விட்டது.

வங்கியில் இருந்து கொண்டு வந்த வைப்புப் பத்திரங்களை வகைப் படுத்தி, உரிய கோவைகளுக்குள் சேர்த்துக் கொள்கிறேன். காலை பத்து மணி தொட்டு ஒரு மணி வரை கோட்டையில் உள்ள எல்லா வங்கிக் கிளை களுக்கும் 'பாண்ட்கேசை'யும் திறந்து காட்டி, ஏறி இறங்கி அலைந்த போது எரிச்சலாகவே இருந்தது. இன்று காலை காரியாலயம் வந்ததும் நேற்றைய காசோலைகளை வைப்பிலிடுவதற்கான பத்திரங்களை நிரப்பும் போது உண் மையில் நான் நானாக இருக்கவில்லை. ஆயிரத்தெட்டு வெட்டுக் கொத்துக ளுடன் ஏதோ கிறுக்கித்தள்ளி எல்லாக் காசோலைகளையும் வைப்பிலிட்டு விட்டு இங்கு வந்திருக்கிறேன்.

கடந்த இராத்திரி நடைபெற்ற சம்பவங்களின் பின்னால், தூக்கமே இல்லாது நான் கட்டிலில் புரண்டதும், காலையில் எழுந்து கடன்களை முடித் துவிட்டு ஆனந்திக்கு ஒரு வார்த்தை கூட சொல்லாது காரியாலயம் வந்ததும்... அந்த நேரம் தொட்டு வங்கிகள் வழியே அலைந்த நேரம் உட்பட இப்போ வரை என் தீர்மானங்களை அட்டவணைப்படுத்தி, இப்போ நான் இந்த முடி வுக்கு வந்திருக்கிறேன்.

என் 'கவுண்டரில்' இருந்தபடியே கந்தோரை ஒரு முறை கண் களால் வலம் வருகிறேன். 'எக்கவுண்டன்' கயல்விழியையும், 'டைப்பிஸ்ட்' பல்லவியையும் தவிர, மற்ற எல்லா இருக்கைகளுமே காலியாக இருந்தன. எல்லோருமே மதிய போசனத்துக்குச் சென்று விட்டார்கள்.

சுழலும் மின்விசிறிக்கு ஈடுகொடுக்க முடியாது என் மேசையில் இருந்த வங்கிக் கோவை ஒன்று தன் பக்கங்களைப் பின் நோக்கிப் புரளவிடு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1983** ஆடிக் கலவரத்தின் பின்னதாக கொழும்புக்கு மீண்டும் வேலைக் குத் திரும்பிய போது தான் எனக்கு பல்லவியின் அறிமுகம் கிடைத்தது. எந்தவித ஆயத்தங்களுமே இல்லாது ஒரு சில உடுப்புக்களுடன் மட்டுமே கொழும்பு திரும்பிய நான் சில நாட்கள் 'கம்பனி'யிலேயே தங்க வேண்டி நேர்ந்தது.

அந்தச் சமயங்களிலெல்லாம் சாப்பாட்டிற்கும், உடுப்புகளுக்கும் பெரிதும் கஷ்டப்பட்டு வந்தபோது, பல்லவி தான் தன் வீட்டிலிருந்து உணவு களையும், உடுதுணிகளையும் வரவழைத்து எனக்கு பெரிதும் உதவினாள்.

சில நாட்களின் பின் சில நண்பர்களுடன் சேர்ந்து கொள்ளுப்பிட்டி யில் ஒரு வீட்டில் தங்க வசதி ஏற்பட்ட பின்பும் கூட, பல்லவி தன் உதவிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். அந்தச் சந்தர்ப்பங்களில் தான் அவளின் பெருந் தன்மையையும், உயர்ந்த பண்பையும் நான் இனம் கண்டு கொண்டேன். விளைவு நாமிருவரும் நெருங்கிய நண்பர்களாகப் பழக ஆரம்பித்தோம்.

**1985** ஆம் ஆண்டு பிறந்தது. புத்தாண்டில் பல்லவியின் போக்கில் ஒரு புது மாற்றத்தை நான் உணர ஆரம்பித்தேன். என் நட்பை நாடியவள், அதற்கு மேலாக... என்னுடனேயே வாழவும் ஆசைப்படுகிறாள் என்ற சங்கதி ஆரம்பத்தில் எனக்கு உணர்வதற்குச் சற்றுச் சங்கடமாகவே இருந்தது.

விடயத்தை நண்பர்களின் காதில் போட்டு வைத்தேன். கிண்டல் கள், பாராட்டுக்கள், 'அட்வைஸ்கள்' இப்படிப் பல ரகங்களில் விமர்சனங்கள் வெளிவந்தன.

இறுதியாக... கயல்விழி அக்காவை நாடி இது பற்றி அபிப்பி ராயம் கேட்டேன். அளையூர் இந்துக் கல்லூரியில் நான் இரண்டாம் தரம் பயின்ற போது கயல்விழி அக்கா 'எஸ்.எஸ்.ஸி.' படித்த அந்த நாளையிலி ருந்தே அவவை எனக்கு நன்றாகவே தெரியும். 'அட்வான்ஸ் லெவலில்' மூன்று முறையும் மட்டையடித்து விட்டு, எண்பதாம் ஆண்டு வேலை தேடி கொழும்புக்கு வந்த போது இந்தக் 'கம்பனியில்' காசாளராக நான் வேலையில் சேர்ந்து கொள்ள சிபார்சு செய்தது மட்டுமன்றி அடித்துப் போட்டாலும் ஆங்கிலம் பேசத் தெரியாத எனக்கு, பயிற்சி தந்து, இந் தளவிற்கு நான் முன்னேற பக்கத்துணை நின்றவர் தான் இந்த கயல்விழி அக்கா.

பல்கலைக்கழகம் சென்று, பயின்று, பின் என்னதான் 'எக்கவுண் டனாகி' பிறருக்கெல்லாம் மதிப்பிற்குரியவராக இருந்தாலும், என்னைப் பொறுத்தவரை, கயல்விழி எனக்கு அதே அக்கா தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இந்த விடயம் பற்றி அக்காவின் அபிப்பிராயம் சற்று வித்தியாசமாகவே இருந்தது. பல்லவியின் நலிவுற்ற பொருளாதாரப் பின்னணி பற்றி நன்றாகவே அறிந்த அக்கா, வெற்றிகர எதிர்நீச்சல் மணங்கள் பலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டி, தன்னம்பிக்கையும், தளராத மனவுறுதியுமே வாழ்க்கையின் முதலீடுகள் என வலியுறுத்திக் கூறினா. இலட்சாதிபதியாவதை விட, இலட்சியவாதியாக இறுதி வரை வாழ்வதே, இனிய வாழ்க்கை என இரத்தினச் சுருக்கமாகத் தன் அபிப்பிராயத்தைத் தந்தா.

இந்த விடயம் புயலாக எனது பெற்றோருக்கும் எட்டியது. என் திருமணத்தைப் பற்றி அதுவரை அறவே சிந்தித்திராத என் பெற்றோர், இதைக் கேள்விப்பட்டதும் விழுந்தடித்து பல சம்பந்தங்களை வலிந்து வரவழைத்தனர். இந்த வரிசையில் இறுதியாக வந்தது தான் ஆனந்தியின் இந்த ஏழு இலட்ச சம்பந்தம்.

ஆனந்தியின் சம்பந்தப் பேச்சுவார்த்தைகள் முளைவிட்ட சமயத்திலேயே சித்திரை வருடப் பிறப்பிற்கென ஊரிற்குச் சென்றிருந்த போது பல்லவியின் விடயமாகப் பெற்றோருடன் கதை தொடுத்தேன். என்னை நம்பியவளை ஏற்காது, உங்கள் விருப்பப்படி நடப்பது எப்படி நியாயம் ஆகும் என்றேன். நலிந்த பொருளாதாரப் பின்னணியில் நிறைவான வாழ்வமைக்க முடியாதெனப் பெற்றோர் விவாதித்தார்கள். பெற்றவர்களின் பிடிவாதங்கள், பேரவாக்கள், அபிலாசைகள் முன் என் நியாயங்களும், தேவைகளும், எதிர்பார்ப்புக்களும் நிராகரிக்கப்பட்டன. பெற்றோரை வெறுக்கவோ, எதிர்க்கவோ திராணியற்றவனாகவும், நம்பியவளை மோசஞ் செய்ய முடியாதவனாகவும் நான் தத்தளித்து, முடிவில் கொழும்பு திரும்பியதும், பல்லவிக்கு என் நிலவரத்தை எடுத்து முன்வைத்தேன். அவள் அதிர்ச்சியடைந்தாள். என் ஆளுமை பற்றிய தன் அபிப்பிராயமே ஆட்டங் கண்டு விட்டது என்றாள். ஆனாலும், என் மீது ஆத்திரப்படவோ, அதிகம் அலட்டிக் கொள்ளவோ இல்லை. தன் போக்குகளை, பழக்கங்களை மாற்றி என்னை விட்டு விலகத் தொடங்கினாள்.

''பல்லவியிடம் பசை இல்லை என்றதுமே பாவி மாறிவிட்டான். காதலிக்கிறது, காசில்லை என்றதும் கைவிடுகிறது. இவங்களெல்லாம் கதையள் சொல்லவும், சமூகத்தைத் திருத்தவுமெண்டு வெளிக்கிட்டுடுவாங்கள்.'' அன்னியோன்னியமாகப் பழகிய நண்பர்களது நாவே என்னை நெருப்பாகச் சுட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் செல்லச் செல்ல, ஆனந்தியின் சம்மந்தம் சரி வருவதாக நான் உணரவைக்கப்படும்போது…கொஞ்சம் கொஞ்சமாக என்னில் ஏதோ தொலை வதைப் போன்ற உணர்வு. எதிலுமே பிடிப்பில்லாத ஒரு பிரமை… வாழ்க் கையே வெறுத்ததைப் போன்ற ஒரு தன்மை… முடிவில் ஒரு வெறுமை.

வெறுமையாயிருந்த காரியாலயம் மீண்டும் களைகட்டத் தொடங் கிற்று. மதிய உணவிற்கு சென்றிருந்த ஊழியர்கள் யாவரும் இப்போது இருக் கைகளில் அமர்ந்திருந்தனர். ஆனால் இப்போ கயல்விழி அக்காவும், பல்லவி யும் தமது கதிரைகளை காலியாக்கியிருந்தார்கள்.

கொம்பனி வீதியில் நண்பன் வீடொன்றின் 'அனெக்ஸ்' இல் ஆனந் தியுடன் என் வாழ்வின் முதல் அத்தியாயத்தை ஆரம்பித்தேன்.

இளமைக் காலங்களில் எப்படி எப்படியோ வாழ்க்கையை கற்பனை பண்ணிப் பார்த்த எனக்கு, நான் ஆரம்பித்த வாழ்க்கை எந்த விதத்திலும் ஒத் துப் போனதாக அமைந்திருக்கவில்லை. ஆனந்தியின் விரக்தியான போக் கும், ஒத்துழைக்காமையும், பாராமுகமும் என்னை மிகவும் வாட்டி வதை செய்தன.

காணி நிலங்களையும், காசு பணங்களையும் என் பெற்றோர் ஏறக் கேட்டதால், இது அவளுக்கு ஏற்பட்ட விரக்தி நிலையாகலாம் போகப் போகச் சரியாகிவிடலாம் என்றெல்லாம் எண்ணி கடந்த நான்கைந்து கிழமை களாக நான் அனுபவித்த வேதனைக்கு நானே சமாதானம் சொல்லி வந்தேன். வெளியில் இதுபற்றி எவரிடமும் அபிப்பிராயம் கேட்க என் மனம் ஏனோ இடம் தரவில்லை. ஆனால், நான் எண்ணியவற்றிற்கு மாறாக, இவளின் மரத்த நிலைக்கு உண்மையான காரணத்தை நேற்று நான் உணர்ந்த போது…

'சோட் லீவில்' நேற்று நான் சற்று முன்னராகவே வீடு திரும்பிய போது தான் அந்த அதிர்ச்சியான உண்மை எனக்குப் புலனாகிற்று.

முன்பின் எனக்கு அறிமுகமே அற்ற ஆடவன் ஒருவனுடன் ஆனந்தி வீட்டில் மிக அன்னியோன்னியமாக இருந்ததும்…என் திடீர் வரவால் இரு வர் முகமும் விகாரமானதும், என்னுடன் எதுவுமே கதைக்காது உடனேயே அவன் நழுவியதும், ஆனந்தி கூட ஒன்றும் சொல்லாது கட்டிலில் போய் குப் புற விழுந்ததும்… திரைப்படம் போல் காட்சிகள் என் முன்னே அரங்கேறிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டையைப் பிய்த்தெறிந்து விட்டு கொம்பனிவீதி நெடுஞ்சாலை நடுவே ஓட வேண்டும் போல் இருந்தது எனக்கு.

சிறிது நேரத்தின் பின்... ஆனந்தியிடம் நானாகவே பேச்சை ஆரம்பித்தேன். மனநோயாளியைப் போல் கொஞ்சநேரம் என்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள், பின்னர் பார்வையைத் திருப்பி அறைக் கூரையைப் பார்த்தவாறே, கதை சொல்ல ஆரம்பித்தாள்!

இந்தக் கல்யாணத்திற்கு என்னைப் போல் ஆனந்தியும் பலாத்காரப் படுத்தப்பட்டிருக்கிறாள்.

ஆனந்திக்கும், வந்து சென்ற அன்ரனிற்கும் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாகவே பழக்கம் இருந்திருக்கிறது. ஆனந்தியின் அண்ணன் ராஜனுடன் அன்ரன் 'அட்வான்ஸ் லெவல்' பயின்ற காலங்களில், அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி சென்றிருக்கிறான். அந்தப் பழக்கம் நட்பாகி பின் ஒரு நெருக்கத்தை இவர்களுக்குள் ஏற்படுத்தியிருக்கிறது. விடயத்தை ராஜன் உணர ஆரம்பித்ததும், அன்ரனை வீட்டுப் பக்கமே வரவிடாது தடுத்திருக்கிறான். தன் நட்பையும் முறித்திருக்கிறான். 'அவன்ரை சாதியென்ன, சமயமென்ன? உனக்கென்ன அவனோடை கூட்டு' என ஆனந்தியையும் ராஜன் கண்டித்திருக்கிறான். சில நாட்களின் பின்னர் ராஜன் உழைப்பதற்கென கப்பலிற்கு சென்றுவிட்டான்.

படிப்பை முடித்த அன்ரன் வெளிநாடு செல்ல ஆயத்தங்கள் மேற்கொண்டு வந்த போது, ஆனந்தி 'ரவுணில்' கம்பனி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்திருந்தாள். எவருக்கும் தெரியாது, இவர்களின் தொடர்பு வெளியிடங்களிலும் தொடர்ந்திருக்கிறது.

வெளிநாடு சென்ற பின்பும் 'கம்பனி' விலாசத்திற்கு அன்ரன் தவறாது கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறான். இந்த நிலையில் ஐந்து வருடங்கள் கழிந்த பின்னர் கப்பலில் இருந்து திரும்பிய ராஜனுக்கு இந்த விடயம் அம்பலமாகியிருக்கிறது. சினங் கொண்ட ராஜன் ஆனந்தியை கட்டிவைத்து அடித்திருக்கிறான். பல நாட்கள் அறையில் பூட்டிவைத்து, பிற இடங்களில் கல்யாணப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருக்கிறான்.

பல நாட்கள் தொடர்புகள் இல்லாததால், கல்யாண விடயம் எதையும் அன்ரன் அறிந்திருக்கவில்லை. பின்னர் கொழும்புக்கு வந்த பின்னர் அன்ரனுக்கு விரிவாக சகலதையுமே எழுதியிருக்கிறாள். அக்கடிதம் கிடைத்ததுமே... அன்ரன் கனடாவில் இருந்து விலாசந் தேடி இங்கு வந்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே புழுக்கமாக இருந்தது எனக்கு. மின்விசிறியின் வேகத்தைச் சற்றே கூட்டிவிட்டு நிமிர்ந்து கயல்விழி அக்கா பக்கம் கண்களைத் திருப்புகிறேன். அப்போ தான் மதிய போசனத்தை முடித்துவிட்டு அவ தன் இருக்கையை நெருங்கிக் கொண்டிருந்தா.

என் 'கவுண்டரை' இழுத்து மூடிவிட்டு, அக்காவின் முன்னால் போடப்பட்டிருந்த கதிரையில் சென்றமர்கிறேன். என்னையே அறியாமல் என் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

''என்ன தம்பி இது? 'லைக் ஏ சைல்ட்?... என்ன நடந்தது உனக்கு?'' மேசைமீது பரந்திருந்த பத்திரங்களை ஒதுக்கிவிட்டு, அணிந்திருந்த கண்ணாடியைக் கழற்றி மேசைமீது வைத்தவாறே அக்கா கேட்டா.

சிறிது நேர மௌனத்தின் பின் நேற்று நடந்த சம்பவத்தை அக்காவிற்கு ஒன்றுமே விடாது கூறி முடித்தேன். மேசை மீது வைக்கப்பட்டிருந்த 'கிளாஸ்' நீரை முழுக்கக் குடித்து முடித்துவிட்டு அக்கா கேட்டா... ''இப்ப என்ன செய்கிறதா உத்தேசம்?'' அவவின் முகம் சற்று இறுகியிருந்தது.

''அக்கா நான் ஆனந்திக்கு அவள் விரும்பின வாழ்க்கையை அமைச்சுக் குடுக்கப்போறன். பலாத்காரப்படுத்தப்பட்ட நிலையிலேயே அவள் எனக்கு கழுத்தை நீட்டியிருக்கிறாள். ஆனாலும்... இன்னமும் அவள் நினைவுகள் எல்லாம் அன்ரனைச் சுற்றினதாகவே இருக்கிறது. சில மணித்தியாலங்கள் அவனோட இருந்தாலும், சந்தோஷமாக தான் இருப்பதாக சொல்கிறாள். சதா அன்ரனையே உலகமாக எண்ணி இருக்கிறவளை, தாலி கட்டின ஒரு குற்றத்துக்காக மேலும் நான் சிறைப்படுத்த வேணுமெண்டு என்ன நியதி?

''தம்பி, நீ குழந்தைப் பிள்ளைத்தனமாய் கதைக்கிறாய். இத்தனை நாளாக உன்னோடை வாழ்ந்தவளை, இனியும் அன்ரன் ஏற்கத் தயாராக இருப்பான் என்பதற்கு என்ன உத்தரவாதம்?''

''இன்னமும் தன்னை அன்ரன் அதே ஆழமாக, ஆத்மார்த்தமாகவே நேசிப்பதாக ஆனந்தி சொல்கிறாள். எந்த நிலையிலும் தன்னை அவன் ஏற்பான் என்பதை எனக்குணர்த்த, இதைவிட சுருக்கமான வார்த்தை வேறை தேவையில்லை எண்டு அவள் நினைத்திருக்கிறாள். எனக்கு ஒண்டுமே சொல்லாமலும், அவள் அவனோடு ஓடிப்போயிருக்கலாம். ஏதோ ஒரு மதிப்பு வைத்து எனக்கு இதைச் சொல்லியிருக்கிறாள். அக்கா, அவள் நிம்மதியாக வாழ வேண்டுமெண்டால், அவளையும், அவளது சொத்துக்களையும் துறப்பதைத் தவிர வேறெந்த வழியும் நியாயபூர்வமானதாக எனக்குத் தெரியவில்லை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தத் தொடர்புகள் பற்றி முன்னரே உன்னுடைய வீட்டுக்கார ருக்கு ஒண்டுமே தெரியாதா?''

''எல்லாமே தெரியுமாம். வெறும் காகிதக் காதல் தானே, அதிலை பாதகமில்லை எண்டு சொல்லிப் பணத்தைக் கறப்பதிலையே என்ரை பகுதி குறியாக இருந்ததாக இவள் குற்றஞ் சொல்கிறாள். இலட்சங்களைக் கூட்டுற திலை இருந்த அக்கறை பொம்பிளையின்ரை நடத்தை இலட்சணத்தைப் பாக் கிறதில இருக்கேல்லையாம்.''

''உன் பெற்றோரால், உனக்கு வசதியைத் தேடித்தர முடிந்ததே தவிர, நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துத் தர முடியவில்லை. ஓ.கே., ஆனந் தியை அன்ரனோட கனடாவுக்கு அனுப்பிப் போட்டு, நீ பிறகென்ன செய்யப் போகிறாய்?''

''பழைய பிரம்மச்சரிய வாழ்க்கை தான். பணத்தை எதிர்பார்த்து தம் பிள்ளைகளது மணத்தை நிர்ணயிக்கின்ற பெற்றோருக்கு என்ரை வாழ்க்கை ஒரு படிப்பினையாக அமையட்டும். இதை நான் பிரச்சாரமாகச் சொல் லேல்லை. பிரச்சினைகளை விடுகின்ற பிழைகளை அவரவர் உணரவேண் டும் எண்டுறதுக்காகத் தான் சொல்லுறன்.''

''உனக்கு வாழ்க்கைப்பட்டவளுக்கு அவள் விரும்பிய வாழ்க் கையை அமைத்துக் கொடுக்க நினைக்கிறாயே தவிர...இன்னமும் உனக் கொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவோ, அல்லது உன்னை நம்பியி ருந்த பல்லவிக்கு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவோ விரும்புகிறாய் இல்லையே தம்பி.''

''இனியும் பல்லவியை நான் கைபிடிக்க நினைக்கிறதுக்கும், இன்ன மும் அவளிட்டை அன்பை எதிர்பார்க்கிறதுக்கும் அருகதையற்றவன் அக்கா நான். அவளைப் பொறுத்தமட்டிலை என்னுடைய நிலை காலாவதியான காசோலை தான்.''

''வட் டூ யூ மீன்...?''

''தலைக்கு மேல வெள்ளம் வந்த பிறகு தான் எங்களையே நாங்கள் உணரத் தலைப்படுறம். பெற்றோரது அபிலாசைகளுக்காக என்ரை கொள்கை இலட்சியங்களை இரண்டாந்தரமாகக் கணித்ததாலை தான் என்னாலை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மாதிரியான வாழ்க்கையை முன்னரே அமைத்துக் காட்ட முடியாது, இப்ப செல்லாக் காசாகி இருக்கிறன். இன்னமும் பழமைகள், பாரம்பரியங்கள், மதங்களை மதித்ததாலை தான், ராஜன் ஆனந்தியை அன்ரனுக்குக் கட்டிக் கொடுக்கேல்லை. ஆக, தனித்தனி மனிதன் தங்கடை சொந்தங்களை, கௌரவங்களைத் தியாகம் செய்யத் துணியாததாலை தான் எங்கடை சமுதாயத்துக்கு இன்னமும் ஒரு விடிவு கிடைக்காமல் இருக்கு. புதிய சமுதாயம் காணத்துணியும் இளைஞர்கள், பழைய எல்லைகளை மீறிச் செல்ல வேணும். அப்போது தான் புதிய யுகம் ஒன்றைப் பிரசவிக்க முடியும்.''

''பல்லவியை நிராகரித்து, நீ ஆனந்தியை 'மரி' பண்ணின போது முதன்முதலாக உன்மீது எனக்கொரு வெறுப்பு ஏற்பட்டது. ஆனால், இப்போ உன்னுடைய நிலைமையைப் பார்க்கேக்க இந்த 'கம்யூனிற்றியிலை' தான் எனக்கு ஆத்திரமா இருக்கு. தாங்க முடியாத ஒரு வெறுப்பாயிருக்கு.''

''நான் எடுத்த முடிவு பற்றி நீங்கள் என்ன சொல்லுறியள்?''

''நீ கொண்டுவாற 'வவுச்சர்களை' 'அப்புறூவ்' பண்ண வேண்டியது என்னுடைய கடமை. ஏனெண்டால் அதுக்கு எனக்கு அதிகாரமிருக்கு. ஆனால், இது உன்னுடைய சொந்த விஷயம். இதை ஆதரிக்கலாமே தவிர, அனுமதிக்க எனக்கு அதிகாரமில்லை. ஆனாலும், உன்னுடைய நிலவரத்தை நன்றாகப் புரிந்த என்னாலை இந்த முடிவை ஆமோதிக்க முடிகிறதே தவிர, மாற்று வழி சொல்ல எனக்கெண்டால் எதுவும் தெரியேல்லை. ஆனால், உனக்கு நல்ல வழிகாட்டுகிற உரிமை எனக்கிருக்கு அதையும் மறந்திடாதே.''

மேசை மேல் இருந்த கண்ணாடியை அக்கா மாட்டிக்கொள்கிறா.

தன் இருக்கையை விட்டெழுந்து 'ரைப்' செய்த பத்திரங்களோடு பல்லவி, அக்காவை நோக்கி வருவதையும், வெறுமையாயிருந்த என் 'கவுண்டர்' 'கம்பனி' வாடிக்கையாளர்களால் நிரம்பி வழிவதையும்... அக்காவின் அந்த மங்கிய நிறக் கண்ணாடியூடாக முன்னால் இருக்கும் என்னால் இப்போது மிகத் தெளிவாகவே பார்க்க முடிகிறது.

இப்போ அக்காவிடமிருந்து விடைபெற்று என் 'கவுண்டரை' நோக்கி நான் வேகமாக முன்னேறுகிறேன்.

**– 'மல்லிகைச் சிறுகதைகளில்' இடம்பெற்ற கதை : 1986**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சி

'எழுச்சி வரவேற்கிறது'.

நெஞ்சம் நிறைந்த துயரத்துடன் பஸ்ஸை விட்டிறங்கிய போது கிராமத்தின் எல்லையில் புதிதாக நாட்டப்பட்டிருந்த அந்த எல்லைப் பலகையே முதலில் என் கண்களில் திரையிட்டது.

அக்கா எனக்கு அனுப்பி வைத்த அந்தத் தந்தி...? கண்களிலிருந்து பனித்த நீர்த்துளி கைகளில் புரண்ட அந்தத் தந்தியில் பட்டுத் தெறிப்பதை மட்டுமே என்னால் உணரமுடிகிறது.

திரும்பிப் பார்க்கிறேன்.

சதா மலர்ந்த முகத்துடன் மிளிரும் என் மனைவி, பொலிவிழந்த முகத்தால் பரிதாபமாக என்னைப் பார்க்கிறாள். அவள் கையிலே சூட்கேசைத் தூக்கிக் கொண்டு, மறுகையில் இரு பிள்ளைகளையுந் தாங்கியவாறு முன்னேறுமாறு தன் முகத்தால் சைகை தருகிறாள்.

அம்மா இறந்து விட்ட... இந்த இழ்வுச் சேதியைக் கூட எனக்கு அறிவிக்க முடியாதவராக, ஐயா இன்னமும் அதே போலிக் கௌரவத்துடன் தான் இருக்கிறாரா?

கால்கள் முன் நோக்குகின்றன.

★ ★ ★

பத்து வருடங்கள். நினைக்கவே நெஞ்சு நெகிழ்கிறது. பெற்ற தாயையும், பிறந்த ஊரையும் விட்டு இத்தனை காலம் எப்படித் தான் இருந்தேனோ? நேற்று நடந்த நிகழ்ச்சி போல அது இன்னமும் பசுமையாக என் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கிறது. அதற்கிடையில்...

இருபத்தைந்து வயதாகியும் வேலை வெட்டியில்லாமல் ஊரில் திரிந்த நான் 'எக்கவுண்ஸ் கிளாக்காக' அந்த 'இன்டஸ்றீயில்' சேர்ந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அரசியைச் சந்தித்தேன். பெற்றவரை உடன்பிறந்தவர்களை விட்டுத் தனியாக வாழத் தலைப்பட்ட காலகட்டம் அது. வீட்டு நினைவுகளில் லயித்திருந்த என்னைத் தனியாக வாழத் தைரியமூட்டியதோடன்றி 'எக்கவுண்சே' என்னவென்று புரியாத எனக்கு பக்கத்தில் நின்று, சகலதையும் புரியவைத்துப் புத்துணர்வூட்டினாள் அரசி.

பக்கத் துணையாக நின்றவள் என் அந்தரங்கங்களையும் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்ததோடன்றி, பட்ட கஷ்டங்களிற்கும் தன் புரிந்துணர்வையுந் தரத் தொடங்கிய போதுதான், எங்களது பழக்கம் நட்பையும் மீறி அடுத்த 'இக்கட்டான' கட்டத்திற்குச் செல்ல ஆரம்பித்தது.

அரசி துணையின்றி எதுவுமே என் வாழ்வில் இல்லை என்ற நிலையை என் அறிவுபூர்வமாக நான் உணர ஆரம்பித்த போது தான் அரசியுடன் இணைத்து என் பெயரும் பரவலாக 'ஒவ்வீஸ்', 'பக்ரறீ' முழுவதுமே படு பயங்கரமாக அடிபட ஆரம்பித்தது!

இந்தச் சேதி 'பேசனல் மனேஜர்' வரை எட்டியதன் முடிவு... இருவரையும் தன் முன்னழைத்து ஒரு நீண்ட 'அட்வைஸையே' தந்தார் அவர்.

அவரது 'அட்வைஸின்' விளைவு. அன்று வேலை முடிந்த பின்பு அவளுக்கு நான் சொன்னது. ''அரசி, நானுன்னை கலியாணம் செய்யிறதாக முடிவெடுத்திருக்கிறன்.''

வேதனைச் சிரிப்புடன் அவள் சொன்னாள். யாழ்ப்பாணத்தில் உள்ள கிராமமொன்றிலே கீழ் சாதியிலே தான் பிறந்தவளாம். ஏழைக் குடும்பமொன்றில் ஏழு பெண்களுக்கு மூத்தவளாம் தான். தலைப்பிள்ளையாயிருந்தும் தனக்கென்று கூட வீட்டில் தர ஆன வீடுவாசல், காணி பூமி, நகை நட்டு, காசு பணம் என்று எதுவுமே இல்லையாம்.

கல்யாணப் பேச்செடுத்ததுமே சாதி, சமயம், குலங் கோத்திரம் என ஆதி அந்தங்களை ஆராய்ந்து பார்க்கிற எங்களது மண்ணின் பாரம்பரியம் அரசியிலும் குடி கொண்டிருந்ததில், ஆச்சரியப்பட எதுவுமில்லைத்தான்.

''சாதி, சமயம், இன பேதம், இதுகளுக்கு அப்பாற்பட்டவன் நான் என்பதை இவ்வளவு 'இன்ரிமேற்றா' என்னோடை பழகின நீ கூடப் புரிந்துகொள்ளேலையா அரசி?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள், உங்களின்ரை கொள்கைகள் இதுகளை, இந்தப் போலிக்கட்டுக்களைத் தகர்த்தெறியத் தயாராயிருக்கலாம். ஆனால், நீங்கள் வாழ்ந்த சூழல், உங்களின்ரை உற்றம், சுற்றம் எல்லாவற்றையும் மீறி இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது, ஏனென்டால் இன்னமும் நாங்கள் அந்தக் கட்டுக்களிற்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கிறம். இந்தச் சமூகம் போட்ட வரம்புகளுள் தான் இனியும் வாழப்போறம்.''

''வசதி படைத்தவர்கள், நிலப்பிரபுக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யிறதுக்காக ஏழை எளியதுகளை அடிமைப்படுத்துறதுக்காகத் தான் இந்தக் கட்டுக்களை உருவாக்கினார்கள். இந்த வரம்புகளைப் போட்டார்கள். இப்ப நாங்கள் ஒரு புது நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறம். அரசி, அடிமைத்தளை அறுத்து உயர் பதவிகளை வகிக்கிறதுக்கு எல்லாருக்கும் உரிமை இருக்கைக்குள்ளே சம்பந்தம் வைச்சுக் கொள்ளுறதிலை மட்டும் வேலி போடுறது எந்த வகையிலை நியாயம்?''

''நீங்கள் சொல்லுறது கதைகளுக்கும், நாடகங்களுக்கும் மெருகேற்றலாம். ஆனால், நடைமுறைக்கு சரி வராதது. இப்படியான எழுச்சிகளை ஏற்றுக் கொள்ளுற பக்குவத்துக்கு இந்தச் சமூகம் இன்னமும் வரேலை. சரி... கனக்க ஏன்? இந்தக் கலப்பு மணத்தை 'அற்லீஸ்ற்' உங்கடை 'பெமிலியிலையே' ஏற்றுக்கொள்ளுவினமா?''

''நல்ல கதையிது... ஊரிலை சாதி குறைஞ்ச சனங்கள் பிள்ளையார் கோயிலுக்கை உள்ளட வேணுமெண்டு மும்மரமா நிண்டபோது, அவையளுக்கு ஒத்தாசை புரிந்து, அவையளைக் கோயிலுக்கை உள்ளடுத்தினவர் என்னுடைய ஐயா. நானுன்னைக் கலியாணஞ் செய்யிறதை அவர் போற்றுவாரே தவிர ஒரு நாளும் ஏற்காமல் விடமாட்டார். எங்களை ஒதுக்கி வைக்கமாட்டார்.'' ஐயாவின் 'எழுச்சியை' நம்பி நான்தான் கதையளந்தேன். அப்படி வாய் விட்டுச் சொன்ன எனக்கா இந்தக் கதி?

முதன்முதலாக அரசியுடன் நான் வீட்டிற்குச் சென்ற போது பூனையாயிருந்து எல்லாவற்றையும் கேட்டறிந்தவர், வேங்கையானார்.

''உமக்கென்ன நெஞ்சழுத்தமிருந்தால் எனக்கொரு சொல்லுக்கூடச் சொல்லாமல் உவளையுங் கூட்டிக்கொண்டு இஞ்சை வந்திருப்பாய்...? போடா வெளியாலை.''

''ஐயா, நான் சொல்லுறதை...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீர் ஒண்டும் சொல்லத் தேவையில்லை. இல்லைக் கேக்கிறன். குடும்ப நிலவரமறியாமல் நீர் கண்டவளையுங் கூட்டிக் கொண்டு வர இதென்ன தங்குமடமா?''

''நடந்தது நடந்து போச்சு. அதுக்கேன் இப்ப நெருப்பெடுக்கிறியள்?'' அம்மா தான் கூறினா.

''என்னடி நீ நோடாலம் கொத்துறாய்? அந்த நாளையிலை பூசாரியார் எண்டு என்ரை பாட்டனுக்கு ஒரு பட்டப் பேர் இருந்தது. அப்படிப்பட்ட பரம்பரையிலை பிறந்திட்டு இப்பிடிக் குலங் கோத்திரம் எண்டு ஒரு இழவும் பாராமல் எங்கையோ இருந்து எவளையோ கூட்டிக் கொண்டு வரவோ? இல்லைத் தெரியாமல் தான் நான் கேட்கிறன்... இவகளவை பல்லைக்காட்டிப் பழகினாப் போலை, நாலெழுத்துப் படிச்சாப் போலை, காவோலை கட்டி இழுத்துத் திரிஞ்ச பழசுகள் எல்லாம் மறைஞ்சு போயிடுமோ?''

''என்ன கண்டறியாத பழம் பெருமைகள் பறையிறியள்? உங்கை உதுகள் எல்லாரும் மனுசர் எண்டு சொல்லித்தானே திடலிற் சனங்களை பிள்ளையார் கோயிலுக்கை உள்ளடுத்த வலு மும்முரமாக நிண்டனிங்கள். அந்த முகாந்திரங்கள், முகப்பாத்தியள் எல்லாம் இப்ப எங்கை போட்டுது?''

''தாலியறுப்பாளே, அது கோயில்.''

''அப்ப உங்கடை முகாந்திரங்கள் எல்லாம் கோயில் குளத்தோடை தானோ?''

அம்மாவின் அக்குரல் ஓய முன்பே, ஓங்கி வந்த ஐயாவின் கைகள் அவவைப் பதம் பார்க்கின்றன.

முற்றத்து வேம்பில் சாத்தியிருந்த பூப்பறிக்கும் தடியை எடுத்தவாறே அவர் சத்தமிடுகிறார்! ''இண்டுமேற்பட்டு நீ எனக்கு மகனுமில்லை, நானுனக்கு அப்பனுமில்லை. நான் கவுண்டாப் போலை...'' அவரது போலிக் கௌரவங்கள் முரட்டுப் பிடிவாதங்களாகி, என்னை வெளியேற்றத் தான் வேண்டுமென்ற வைராக்கியமான பின்பு, அவருடன் நான் என்ன கதைப்பது? எதை எடுத்துரைப்பது?

★ ★ ★

பற்றை பற்றிய பனைமரங்களினூடாக பிள்ளையார் கோவில் இராஜ கோபுரம் என் கண்களில் திரையிடுகிறது. இந்தப் பத்து வருஷத்தே நிகழ்ந்த கிராமத்தின் மாறுதல்கள்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பராயத்தில் கூட்டாளிமாருடன் கூடி நான் கிளித்தட்டு விளையாடிய புளியடிப் பிலவில் மாபெருந் தொழிற்பேட்டை. எதிராகத் தொடரமைப்பில் மாடிவீடுகள். பாரம்பரிய வயல் வெளிகள் மறைந்து அதில் நெசவாலை. அருகே மாதர் சங்கம். அடுத்தாற்போல் எழுச்சி சனசமூக நிலையம்.

பிள்ளையார் கோவில் கூட முழுக்கவே மாறிவிட்டது. நீலவானம் வரை நீண்டு நிமிர்ந்து காற்றில் சலசலத்த மகிழ மரங்கள் நின்ற இடத்தே சீனப் பெருஞ்சுவரை விஞ்சிய தேர்முட்டி. அதனுள்ளே அழகிய சித்திரத் தேர். கோவிலினருகே புதிய பொலிவுடன் தீர்த்தக்கேணி.

சந்தியைத் தாண்டி கல்லூரி வீதிக்கு வந்துவிட்டோம். கொட்டிலுங் குடிலுமாக இருந்த அரசடிப் பள்ளி, இன்று மாடகூடங்களுடன் கூடிய இந்துக் கல்லூரி. அன்று சேறும் சகதியுமாய் இருந்த ஒழுங்கை இன்று கல்லூரி வீதி, வடலியும் பனையுமாய் இருந்த திடல், வளமான திடலூர்.

குடிமைத் தொழிலாக, அடிமைத் தொழிலாக செய்யும் தொழிலைக் கருதாது, தங்களைத் தேடிப் பிறரை வரவைக்கும் சுதந்திரத் தொழில் செய்பவர்களாக மக்கள் இயங்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதைப் படம் பிடிக்குமாப் போல் 'லோன்றி', 'சலூன்', தொடரில் பனம் பொருள் விற்பனை நிலையம்.

மொத்தத்தில் பழைய அரசடிக் கிராம நிலை கூர்ப்புற்று இப்போ, எழுச்சி மிக்க புத்தூர் ஒன்று கண்களில் திரையிடுகிறது.

தூரத்தே...

வீட்டு வாசலில், மதவடியில், என் அன்னை இல்லத்தில் பலர் குழுமியிருப்பது எனக்குத் தெளிவாகவே தெரிகிறது. என்னையே அறியாது நெஞ்சம் விம்மி கண்களில் நீர் கசிகின்றது.

"நான் கவுண்டாப்போலை கொள்ளி வைக்கிற உருத்துக்கூட உனக்கில்லை எண்டு உங்கடை ஐயா அண்டைக்குச் சொன்னாரே. அதை..." மீதியைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாது அரசி தவிப்பதை என்னால் நன்குணர முடிகிறது.

ஐயா ஏன் இப்படி எல்லாம் வெறுப்பைக் கொட்டி என்னுடன் நடந்து கொள்கிறார். அப்படி நான் செய்த தவறு தான் என்ன? புரியாத புதிராகவே இருக்கிறது. என்னால், என் செய்கையால் கோயில் குருக்கள் அளித்த பூசாரியார் என்ற பட்டப் பெயரும், பதவியும் பறிபோயிடுமோ என்றா, இவர் இப்படிக் கவலைப்படுகிறார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பிரபுத்துவம் கற்பழிந்து ஓர் எழுச்சிமிக்க சமுதாயத்தைப் படம் பிடிக்கும் ஒரு மாதிரிக்கிராமத்தில், இன்னமும் பழம் பெருமைகளைப் பிரதி பலிக்கின்ற இதயங்களா? காலத்தின் மாறுதல்களோடு மனிதர்களின் இயல்பும் மாறாமலா போய்விடப் போகின்றது?

அம்மாவின் இந்தச் சாவுக்கு அவவின் ஆஸ்மாதான் காரணமாயிருக்கும். 'அக்கை வருத்தத்தோடை கண்டபடி வேலை செய்யாதை', என்று டொக்டர் மாமா எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், ஒண்டையுமே கேளாமல் ஓயாத வேலை. அப்பிடி அவிச்சுக் கொட்டித்தான் என்னத்தைக் கண்டுட்டா? கடன்தனிக் கவலையள் ஒருபுறம், என்னுடைய சிந்தனையள் மறுபுறம், எல்லாம் ஒருமிக்கச் சேர்ந்துத் தாரைவார்த்துப் போட்டுது.

அக்கா தனது கலியாணத்துக்குப் பிறகு வேற்றூர் குடியேறிய பிறகு தங்கச்சி தானே தனிய அவவிற்குத் துணையாயிருந்தவள். அப்ப அவளுக்கு பன்னிரண்டு, பதின்மூன்று வயது. இப்ப அவள் பெரிய குமராகியிருப்பாள்.

வீட்டுப் படலை கிட்டிவிட்டது. ஏனோ என் சதுரம் நடுங்க ஆரம்பிக்கிறது. கால்கள் தள்ளாடுகின்றன. படலையைத் தாண்டி முற்றத்தில் காலடி வைக்கிறேன்.

''என்ரை தம்பி, நீ வந்து சேர்ந்தியோடா...எங்களைப் பெத்த தெய்வம்...'' அம்மாவின் தலைமாட்டிலிருந்த அக்கா ஓடிவந்து என் காலடியில் விழுகின்றா. தொடர்ந்து சீனியம்மா. பொங்கி வந்த துயரத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என்னையே அறியாமல் நான்...

அழுகுரல்கள் ஓய்ந்தன.

''ஒருவரும் இஞ்சை வரத் தேவையில்லை. கொள்ளி வைக்க ஏன் நான் இருக்கிறன். நான் வடிவா வைச்சு முடிப்பன்.'' அப்போதுதான் எங்கிருந்தோ வந்த ஐயா சற்றுச் சத்தமாக சொன்னார். அவர் பின்னால் ஆவேசத்துடன் அவரது ஒன்றுவிட்ட சகோதரி கனகத்தின் கணவன் சந்திரசேகரர் நிற்கிறார்.

''அம்மா சொல்லைக்கை பேசாமல் நிண்டுட்டு இப்பென்ன சமா வைக்கிறியள்?'' அழுது களைத்திருந்தாலும் அக்காவின் மூச்சுக் குறையவே இல்லை.

''என்ன... என்ன... சொன்னவ?''

''தான் செத்தாப்போலை தனக்கு மோன் தான் கொள்ளி வைக்க வேணுமெண்டு, சீவன் போகக்குள்ளே அந்த மனுசி மண்டாடினதெல்லே? கையெடுத்துக் கும்பிட்டதெல்லே?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரிக் குரல்கள் ஓய்கின்றன. கட்டியணைத்து அழுத பெண்கள் எட்ட விலகிக் குந்துகின்றனர்.

''சந்திரசேகரி, என்ன பார்த்துக் கொண்டு நிக்கிறாய்? ஆக்களைப் பிடிச்சு வெளியாலை அனுப்பு.'' சாகப்போகிற வயதிலும் தந்தையார் தன் சாகாத பிடிவாதத்தால் சத்தமிடவே, குடுமிக்கார அம்மான் தன் குடுமியை ஒருமுறை உலுப்பி முடிந்து கொண்டே, தன் கடமையில் ஈடுபட முனைகின்றார். அரவம றிந்து அலுவலுடன் நின்ற கனகம் மாமியும் ஓடி வந்து விடுப்புப் பார்க்கிறா.

''அம்மான், சும்மாயிருங்கோ. அவனை வரச்சொல்லி நான் தான் தந்தியடிச்சனான்.''

''ஓகோண்டானாம். அதுவும் உம்மடை முகாந்திரமோ?''

இழவு வீட்டிற்கு வருவோரை அறிவிக்கும் பறை விட்டு விட்டு ஒலித்தது. இடையிடையே அழுகுரல்கள்...

''அம்மா! இஞ்சை என்ரை நிலையைப் பாரம்மா. நீ எங்களையெல் லாம் விட்டுட்டுப் போய் விட்டாய். இஞ்சை நாங்கள் படுகிற பாட்டைக் கொஞ் சம் கண்திறந்து பாரம்மா.'' அம்மாவின் தலைமாட்டில் நான் விழுந்து புரளுகி றேன். அரசியும், என் இரு பிள்ளைகளும் என்னருகே விழுந்து அழுகிறார்கள்.

அம்மா நிம்மதியாக உறங்குகின்றா. அவவிற்குத்தான் நரகத்திலி ருந்து விடுதலை கிடைத்து விட்டதே.

கொள்ளி வைப்பது யார் என்ற பிரச்சினை குருக்கள் பகுதியிலும்... ''ஏன் பொடியன் வந்திட்டான் தானே? வரச் சொல்லுங்கோவன்.'' டொக்டர் மாமா தான் சத்தமாகச் சொல்கிறார். தன் உடன் பிறந்தவளின் இறுதி எண்ண மாவது நிறைவேறட்டுமே என்ற அங்கலாய்ப்பு அவரிற்கு.

''என்ன டாக்குத்தர் புது நாணயக்கதை பறையிறியள்? அது அத்தா னெல்லோ கிறுத்தியத்துக்கு நிக்கிறது.'' சந்திரசேகரி அம்மான் அடிக்குரலெ டுத்தார்.

''ம்... கிறுத்தியத்துக்கு நிக்கிறாள் தோஞ்சு வெள்ளை வேட்டி கட்டி வரவேணும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் இயங்க ஆரம்பித்துவிட்டார். கும்பங்களைப் பரப்பி, சுள்ளிகளால் சுவாலை எழுப்பி ஓமம் வளர்க்கிறார் அவர்.

ஐயாவை அழைத்துக் கொண்டு அம்மான் கிணற்றடிப் பக்கம் செல்கிறார். அப்போ... ''என்னக்கா செய்யுது?''

''ஒண்டுமில்லையடா. தலைக்கை ஒரே அம்மலாக் கிடக்குது. மயக்கம் வருமாப்போலக் கிடக்கு.'' அக்காவின் சிவந்த முகம் இருண்டு கொண்டு வந்தது. கண்கள் பிரண்டன. பக்கத்து வளவு கனகேசு அக்கா கோப்பி கொண்டு வந்து அரசியிடம் கொடுக்கின்றா.

''கனகேசு, என்ன விசர் வேலை பார்க்கிறாய்? அவளுக்கு கோப்பியை நீ பருக்கு.'' அவசர அவசரமாக ஓடிவந்த கனகம் மாமியின் குரலது. எதுவுமே வேண்டாமென அக்கா அரசிடம் சைகை காட்டுகிறா.

''தங்கைச்சி எங்கை?'' அருகிலிருந்த சீனியம்மாவிடம் கேட்கிறேன்.

''அவள் கலியாணங் கட்டி புருஷனோட கிளிநொச்சியிலையடா. தந்தியடிச்சனாங்கள். இன்னுங் காணேல்லை.'' கண்கள் கலங்க சீனியம்மா புலம்பினா.

''குளிப்பாட்டுற பெண்கள் குடமெடுக்க வாருங்கோ.'' அம்மான் என்னருகே வந்து நின்று கூறுகிறார்.

இரத்த உருத்துக்கள், மாமி, மச்சாள் முறைதலைகள் அலசப்படுகின்றன. முதலில் கனகம் மாமியின் பெயர் பிரேரிக்கப்படுகிறது. மேலும் ஒன்றுவிட்ட சில உறவு முறைகள், இருவர் தேர்வாகின்றனர்.

''என்ன இதெல்லாம் இரத்த உருத்தாக் கிடக்கு? சம்பந்த வழியிலையும் ஓராள் தேவையெல்லே?'' கோணியக்கையின் குரலது.

''அந்தச் சீரழிவுகளையும், சீத்துவக் கேடுகளையும் ஏன் கோணி இப்ப கேட்டு பரிசுகேடு படுத்துறாய்?'' வேட்டியை மடித்துக் கட்டியவாறே அம்மான் என்னைப் பார்த்துக் கறுவிவிட்டு பின் நகருகிறார்.

''கட்டாடி எங்கை? எட... என்ன வலு எட்டத்தை நிக்கிறாய்? உனக்கு உதிலை கிடக்கிற வண்ணா மூலையிலையிருந்து வர இவ்வளவு நேரமே? சரி... சரி... போய்க் குளிப்பாட்டுற இடத்துக்கு வெள்ளை கட்டிவிடு. ம்... ம்... விலத்துங்கோ, குளிப்பாட்ட சவத்தைத் தூக்கப் போறம்.'' தனக்கு அளிக்கப்பட்ட கௌரவம் காரணமாக கனகம் மாமி பம்பரமாகிவிட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விலகுகிறேன்.

அருகிலிருந்த அரசியைக் கைத்தாங்கலாகத் அக்கா குளிப்பாட்டு மிடம் செல்கிறா.

''மூப்பன், என்ன நீ வந்த நேரந் தொட்டக்கம் பறையோடையே மெனெக்கெடுகிறாய். ஒல்லுப்போலை உதிலே பொடியனை விட்டுட்டு இஞ்சை பசுவதிக்கு பாடை கட்டுறதுக்கு கொஞ்சம் வந்து உதவி செய். கோணி... கதைக்குள்ளே கதை உங்கடை பகுதியிலை நாலு பொடியங்க ளைப் பாத்து ஆயத்தப்படுத்து பாடை தூக்க. ம்... என்ன கந்தன் அத்தான்ரை அலுவல் முடிஞ்சுதே? இஞ்சை வா. உண்ணானை உன்ரை சவரக்கத்தியாலை என்ரை முகத்தையும் ஒருக்கால் தட்டிவிடு.'' அம்மானுக்கோ வலு உசார்.

''பந்தம் பிடிக்கப் பேரப்பிள்ளையள் எல்லாரையும் கூப் பிடுங்கோ.'' கோணியக்கை சத்தமாகச் சொல்லியபோது, அக்காவின் மூன்று பிள்ளைகளையும் அழைத்தவாறே கனகம் மாமி வருகிறா. மேலும் இரு பந் தங்களைக் காவிக்கொண்டு சீனியம்மா என் பிள்ளைகட்கருகில் வரும் போது, ''மச்சாள் என்ன வேலை பாக்கிறாய்?'' என மாமி கேட்கிறா.

பலாத்காரமாகப் பந்தங்கள் பறிக்கப்படுகின்றன.

பந்தங்கள் பறிக்கப்பட்டாலும், விடாப்பிடியாக சீனியம்மா என் பிள்ளைகளை அம்மாவின் தலைமாட்டில் வைத்திருக்கின்றா.

''ம்... இன்னும் என்ன அலுவல்?'' ஒரு நிலையில் நில்லாது பந்த லில் ஆடிய தோரணங்களை விலத்தியவாறே ஐயா என்னருகே.

''சவத்தைத் தூக்கப் போறம். வாய்க்கரிசி போடுற பெண்டுகள் ஒல் லுப்போலை எழும்புங்கோவன். அது சரி மெய்யேப்பா? உவன் சரவணை சுடலைக்குப் போட்டானோ? பாத்து ஆளை அனுப்பு. போன கிழமை பெய்த அடை மழையாலை விறகுக்கும் ஒரே பச்சையாயிருக்கப் போகுது. உவன் போய் அதுகளைப் பாத்து ஒழுங்கு பண்ணாட்டி நாங்கள் தான் போய் நிண்டு மாரடிக்க வேணும். தி லாருக்கு மெல்லே இப்ப கண்டறியாத வால் முளைச் சிட்டுது கண்டியோ? அவயளுக்கும் ஒரு கிழிஞ்ச சங்கம்...? எங்கடை பகு திக்கை சீத்துவக்கேடுகள் இருக்கைக்குள்ளை, ஏன்?'' அம்மான் புதுக்கோலம் பூண்டு விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனாரின் மரத்துவிட்ட வார்த்தைகளால் மௌனியான அரசி மௌனம் கலைந்து ஏதோ மெல்ல 'முணுமுணு'க்கிறாள்.

''பொறப்பா, சுடலைக்காவது போட்டுப் போவம்.'' நான் சற்று ஆவேசத்துடன் கூறுகின்றேன்.

''ஏன் சுடலைக்கு, என்னையும் உடன் கட்டை ஏத்தவோ?'' அழுகுரல்கட்கு மேலாக இன்னமும் அதே அழுத்தமான குரல்.

''இப்ப நான் போறன். பிறகு ஒரு நாளைக்கு இங்கை வரத்தான் போறன்.''

''ஓ! வருவாயாக்கும். அது நான் கவுண்டாய்போலை.''

'நீங்கள் கவுண்டாப் போலையில்லை. உங்களோடையொட்டிய இந்தப் போலிக் கௌரவங்கள், பழம் பெருமைகள், சுயநலங்கள் கழண்டாப் போலை.' எனக்குள் நான் கூறுகிறேன்.

''தம்பி, என்ரை ஆசைத்தம்பி...'' அழுகுரல்கட்கு மேலாக அதே அழுத்தமான குரல்.

என் காதுகளைச் செவிடாக்குகிறேன். இதயம் தான் கல்லாகி விட்டதே. கால்களை இயந்திரமாக்கி...

என் பின் தொடரும் மூன்று ஜீவன்களிடையே விம்மலும், விசும்பலும்...

''என்ன மாதிரியிருந்த பூசாரியார் வளவிற்கு எப்பிடி வாழ்மானம் வந்தது பாத்தியளே? பொடியரும் அப்பிடி. இனி இளையவளும் படிப்பிச்ச இடத்திலே எளிய சாதிக்கை, அது தான் அவன் திடலில் வாத்திப் பொடியனோடை ஓடினாலும் ஓடினாள். பெத்த தாய் செத்ததுக்கே வரேல்லைப் பாத்தியளே.'' படலையடியில் யாரோ ஒருவர் கூறிக்கொள்கிறார்.

பார்வைக்கும், பேருக்கும் மட்டுமே எழுச்சி காட்டி, அடிமைத்தனத்திலும் குடிமைத்தொழிலிலும் இன்னமும் அதே அரசடியாகவே விளங்குகின்ற இந்தக் கிராமத்திலே... தங்கச்சி வாழ்க்கை முறையாலை அதை நீ மாற்ற முயன்றிருக்கின்றாய்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பிரவேசம் எண்டு பத்து வருடங்களுக்கு முந்தி அப்பருந் தான் எழுச்சி செய்தார். அதை நம்பி கலப்பு மணம் எண்டு சொல்லி நான் கூடத் தான் 'புரட்சி' செய்தேன். அப்படிச் செய்த எனக்கு இந்த ஊர் இதே எழுச்சிக் கிராமம், தந்த வசைமாரிகளை, 'வரவேற்பு'களை நேரில் கண்ட நீயே இப்படி யொரு புதுமையைச் செய்யத் துணிந்தாயே.

தங்கைச்சி உண்மையிலை நீ தானம்மா ஒரு 'எழுச்சி'.

சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் பிறரைக் குடிமைத்தொழில் களுக்குப் பயன்படுத்தாது தாமே அதையேற்று எப்போது அரசடி இயங்க ஆரம்பிக்கின்றதோ... அதுவரையில் தங்கச்சி உனது செய்கையும், சிந்தனை யும் எழுச்சியாகவே இந்த அரசடிக் கிராமத்தில்... அர்த்தப்பட்டுக் கொண்டி ருக்கும்.

அந்த இந்துக் கல்லூரி, பிள்ளையார் கோவில், எழுச்சி சனசமூக நிலையம், மாதர்சங்கம், தொடர்மாடி வீடு, தொழிற்பேட்டை யாவற்றையும் விட நாம் முன்னேறி விட்டோம்.

இதோ, இப்போ கிராமத்தின் எல்லையில் நாட்டப்பட்டிருக்கும் அந்த எல்லைப் பலகை வாசகங்கள் கலங்கிய கண்களுக்கும் மிகத் தெளிவா கவே எமக்குத் தெரிகிறது.

'நன்றி மீண்டும் வருக'

**- மல்லிகை : 1986**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பிற பாத்திரங்களைச் சிருஷ்டித்துக் கதை சொல்வதை விட நான் நானாகவே நின்று கதை சொல்வதையே பெரிதும் விரும்புகின்றேன். அப்போதுதான் மன எழுச்சிகளை, மனித முரண்பாடுகளை, மனக்குமுறல்களை இயல்பானதாக வெளிக்கொணர முடியும் என நான் நம்புகிறேன்."

- புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீரா பதிப்பக வெளியீடு – ௯௦